# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

தொகுதி-12 எண்-1

28.9.91

வெளியீடு-28.9.91.

V211,31 N91
N91.12.1
111603

## உள்ளடக்கம்.

*28—09—1991.*


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iv—vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii, ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | XIII—XIV |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | XIV—XXV |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—35 |
| **2. தகவல் கோரல்—** | |
| திவான் பகதூர் சிவராஜ் நூறாவது பிறந்த நாளை யொட்டி சிலை அமைக்கப்பெறுதல் குறித்து | 35—38 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொடர்ந்து மின்சாரம் தடைப்பட்டு வருவது குறித்து | 33—40 |
| (ஆ) விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்பொழுது செயல்படாமல் இருப்பது குறித்து. | 40—43 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு | 43—44 |
| **5. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—** | |
| நீதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1991 | 44—155 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 44, 133—155 |
| திரு. சி. ஞானசேகரன் | 44—48 |

| | பக்கங்கள். |
|---|---|
| திரு. ஜி. விசுவநாதன் | 48—55 |
| * திருமதி கே. எம். கலைச்செல்வி | 56—62 |
| திரு. கு. லாரன்ஸ் | 62—68 |
| திரு. நா. சா. பழனிசாமி | 69—74 |
| திருமதி ரமணி நல்லதம்பி | 74—89 |
| திரு. செ. கு. தமிழரசன் | 89—99 |
| * திரு. ச. காந்திராஜன் | 94—99 |
| திரு. மா. கோவிந்தராசு | 99—104 |
| * திரு. வே. தம்புசாமி | 104—111, 113—116 |
| * திரு. வ. சத்தியமூர்த்தி | 117—122 |
| * திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் | 122—133 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 155—156 |


D
V211,31 N71
N71.12-1



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், வணிக வரிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம்.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதி, திட்டம்; தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணமும் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு.

5. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தமிழ் வளர்ச்சி மற்றும், தமிழ் பண்பாடு, தொல்பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. இராசாராம் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

7. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

10. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

11. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி.



12. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. ப கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, மற்றும் சர்க்கரை.

14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புற மற்றும் கிராமப் புறக் குடிநீர் வழங்கல்.

15. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

16. சமூக நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

18. வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : கால்நடை பராமரிப்பு [illegible], பால் பெருக்குத் திட்டம், மீனளம், வனங்கள் மற்றும் சின்கோனா.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

### Thiru BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister ..The Hon. Dr. J. JAYALALITHA :

   Public, General Administration, India Administrative Service, Indian Police Service and other All-India Services District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries Commercial Taxes, Prohibition and Excise, Molasses, Backward Classes Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals

2. Minister for Finance..The Hon. Dr. V.R. NEDUNCHEZHIAN :

   Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law ..The Hon. Thiru K. A. KRISHNASAMY:

   Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money lending Chits and Registration of Companies.

4. Minister for Revenue ..The Hon. Thiru S.D. SOMASUNDARAM :

   Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, and Passports.

5. Minister for Education. The Hon. Thiru IRAAMA VEERAPPAN:

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Tamil Development and Tamil Culture, Archaeology and Welfare of Ex-Servicemen.

6. Minister for Food and Co-operation. .. The Hon. Thiru K. RAJARAM :

Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

7. Minister for Labour .. The Hon. Dr. C. ARANGANAYAGAM :

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

8. Minister for Health. The Hon. Thiru S. MUTHUSAMY :

Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control.

9. Minister for Transport. The Hon. Thiru K. A. SENGOTTAYAN :

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. Minister for Handlooms and Textiles. .. The Hon. Thiru R. MADHUSUDHANAN :

Handlooms and Textiles.

11. Minister for Public Works. .. The Hon. Thiru S. KANNAPPAN :

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development.

12. Minister for Local Administration. .. The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural Indebtedness.



13. Minister for Agriculture. .. The Hon. Thiru Ku. Pa. KRISHNAN :

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture and Sugar.

14. Minister for Housing and Urban Development. .. The Hon. Thiru T. M. SELVAGANAPATHY :

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town–Planning, Urban Development, Madras Metropolitan Development Authority Urban and Rural Water Supply.

15. Minister for Rural Industries. .. The Hon. Thiru MOHAMED ASIF :

Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

16. Minister for Social Welfare. .. The Hon. Thirumathi R. INDIRAKUMARI :

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. .. The Hon. Thiru M. ANANDAN :

Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.
Milk, Dairy Development.

18. Minister for Forests and Fisheries. The Hon. Thiru D. JAYAKUMAR :

Animal Husbandry, Milk Dairy Development Fisheries, Forest and Cinchcno.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்:

**மாண்புமிகு திரு. இரா. முத்தையா**

பேரவைத் துணைத் தலைவர் :

**பேராசிரியர் க. பொன்னுசாமி**

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

திரு. க. அர்ச்சுனன்.

திரு. வ. சத்தியமூர்த்தி.

திருமதி ரமணி நல்லதம்பி.

டாக்டர் தே. குமாரதாஸ்.

**செயலாளர் :**

**திரு. செ. ச. ஜானகிராமன்.**

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்
### (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. செ. கு., பி.ஏ., பி.எல்., | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ.,பி.எல்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்., | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி., பி.ஈ., | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி., | குழு அலுவலர் |
| வெங்கட்ராமன், திரு. ப. சீ., பி.காம்., | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வீ., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி. வி. நா., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. இ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| பவானி சுப்பையா, திருமதி. பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா. எம்.ஏ., | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. தோ., | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ., | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ., | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி., | தலைமை நிருபர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்.

| | |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர். |
| 2 அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.). |
| 3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை. |
| 4 அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு. |
| 5. அமமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.). |
| 13. ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. என். | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1. |
| 17. ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.). |
| 18. ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்றாம்பள்ளி. |
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | மேலூர். |

| | |
|---|---|
| 21. இராசாராமன், திரு. சோ. | பாபநாசம். |
| 22. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. | திருமங்கலம். |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை. |
| 26. இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம். |
| 27. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | கம்பம். |
| 28. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர். |
| 29. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி. |
| 30. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | இளையாங்குடி. |
| 31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ். ஆர். | செஞ்சி |
| 32. இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம். |
| 33. இராம வீரப்பன், திரு. | காங்கேயம். |
| 34. இராஜுமன்னார், திரு. கு. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 35. இராஜன்பாபு (எ) தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி. |
| 36. இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 37. லதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 38. இளம்வழுதி, திரு.— | எழும்பூர் (செ.வ.) |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |



| | |
|---|---|
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 41. ஏகாம்பர செட்டி, திரு. மு. | புஞ்சிப்பட்டு. |
| 42. கண்ணப்பன், திரு. எல். | திருப்பத்தூர். |
| 43. கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை. |
| 44. கந்தசாமி, திரு. கா. | தலைவாசல் (செ.வ.). |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.). |
| 46. கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு. |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி. |
| 48. கவிநிலவு தர்மராஜ், பேராசிரியர் (திருமதி) | மொடக்குறிச்சி. |
| 49. கற்பகம் இளங்கோ பேராசிரியர் (திருமதி) | காரைக்குடி. |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. | விளாத்திகுளம். |
| 51. காஞ்சி பன்னீர் செல்வம், திரு. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர். |
| 53. காளன், திரு. கோ. | வில்லிவாக்கம். |
| 54. காளிராஜன், டாக்டர் மு.— | சமயநல்லூர் (செ.வ.). |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம். |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. | ஸ்ரீரங்கம். |
| 58. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர். |
| 59. குப்பன், திரு. க. | திருவொற்றியூர். |

| | |
|---|---|
| 60. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. | இன்னியூர். |
| 62. குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.). |
| 63. கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம். |
| 64. கோபாலகிருஷ்ணன், திரு. வே | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 65. கோபால், டாக்டர் க. | நன்னிலம் (செ.வ.). |
| 66. கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம். |
| 67. சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி. |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர். |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர். |
| 70. சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி. |
| 71. சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு. |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி. |
| 73. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 74. சம்பத், திரு. எ. | வாணியம்பாடி. |
| 75. சரஸ்வதி, திருமதி அ. தி. | சத்தியமங்கலம். |
| 76. சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை. |
| 77. சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. | சங்கரி (செ.வ.) |
| 78. சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.). |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர். |
| 80. சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி. |



| | |
|---|---|
| 81. சிங்காரம், திரு. கே. | மொரப்பூர். |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர். |
| 83. சியாமளா, திருமதி செ. | கோவில்பட்டி. |
| 84. சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி. |
| 85. சிவபதி, திரு. என். ஆர். | தொட்டியம். |
| 86. சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 87. சின்னசாமி, திரு. ம. | கரூர். |
| 88. சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர். |
| 89. சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம். |
| 90. சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. | அவினாசி (செ.வ.) |
| 91. சீனிவாசன், திரு. ஆ. கு. | பெரணமல்லூர். |
| 92. சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி. |
| 93. சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி. |
| 94. சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம். |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 96. சுந்தரம், திரு. எம். கே. | தண்டராம்பட்டு. |
| 97. சுந்தரராஜ், டாக்டர் ச. | பரமக்குடி (செ.வ.) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | திருப்பத்தூர். |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர். |
| 100. சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை. |
| 102. சுப்பிரமணியன், திரு. வி. | கண்டமங்கலம் (செ.வ.) |

| | |
|---|---|
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ. |
| 104. சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம. |
| 105. சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை. |
| 106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டிபாளையம். |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர். |
| 108. செல்லசாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம். |
| 109. செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர். |
| 110. செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு. |
| 111. செல்வராசன், திரு. அ. | துறைமுகம். |
| 112. செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113. செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114. சேகர் டாக்டர் எம் பி. | பெரம்பூர் (செ.வ.) |
| 115. சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு. |
| 116. சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம். |
| 117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர். |
| 118. ஞானசேகரன், திரு. சி. | வேலூர். |
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 120. தங்கமுத்து, திரு. கு. | திருவோணம். |
| 121. தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம். |
| 122. தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 123. தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம். |
| 124. தமிழரசன், திரு. செ. கு. | வந்தவாசி. (செ.வ.) |
| 125. தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர். |



| | |
|---|---|
| 126. தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127. தர்மலிங்கம், திரு. இ. | அணைக்கட்டு. |
| 128. தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை. |
| 129. தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி. |
| 130. தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 131. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 132. தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134. துரை, திரு. சீ. எம். | ஆத்தூர். |
| 135. துரைமுருகன், திரு. கு. க. | பல்லடம். |
| 136. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 137. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி. |
| 138. தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம். |
| 139. தேவராஜ், திரு. அ. | செய்யாறு. |
| 140. தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர். |
| 141. நடேசன், திரு. இரா. | திருவட்டாறு. |
| 142. நடேசன், திரு. மு. | சேலம்-2. |
| 143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி. |
| 144. நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர். |
| 145. நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல். |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148. பட்டாபிராமன், திரு. கா. ப | காஞ்சிபுரம். |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |

| | |
|---|---|
| 150. பரமசிவம், திரு. ஆர். பி. | சின்னசேலம். |
| 151. பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான். |
| 152. பலராமன், திரு. உ. | பூங்கா நகர். |
| 153. பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம். |
| 154. பழனிசாமி, திரு. க. | எடப்பாடி. |
| 155. பழனிசாமி, திரு. நா. சா. | இணைந்துக்கடவு. |
| 156. பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர். |
| 157. பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158. பழனியம்மாள், திருமதி, க. | ராசிபுரம். |
| 159. பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம். |
| 161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர். |
| 162. பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |
| 163. பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 164. பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. இ. | பட்டுக்கோட்டை. |
| 168. பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை. |
| 169. பாலையா, திரு. ஆ. | குளச்சல். |
| 170. பியாட்ரிக்ஸ் டி'. சோசா, டாக்டர் (திருமதி) | நியமனம் |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மாதேவி. |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |



| | |
|---|---|
| 173. புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பென்னாகரம். |
| 175. பூராசாமி, திரு. எம். | பூம்புகார். |
| 176. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177. பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம். |
| 178. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி. |
| 181. பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி. |
| 182 பொன்னுவேலு, திரு ஏ. தா. | வரகூர் (செ.வ.) |
| 183. போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184. மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர். |
| 185. மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை. |
| 186 மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை. |
| 187. மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதாகிருஷ்ண நகர். |
| 188. மரியமுல் ஆசியா, திருமதி | அரவக்குறிச்சி. |
| 189. மல்லிகா, செல்வி ஜி. | புவனகிரி. |
| 190. மனோகரன், திரு. கே. எ. | ஓசூர். |
| 191. மாணிக்கம், திரு. சி. | ஈரோடு. |
| 192. மாலா, டாக்டர் (செல்வி) ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி-II |
| 193. முத்துசாமி, திரு. க. | பழனி. |
| 194. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |

| | |
|---|---|
| 195. முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை. |
| 196. முருகையாபாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம். |
| 197. முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர். |
| 198. முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி. |
| 199. முனுசாமி, திரு. கா. பூ. | காவேரிப்பட்டினம். |
| 200. முஹமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி. |
| 201. மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202. மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில். |
| 203. ரகுபதி, திரு. செ. | திருமயம். |
| 204. ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம். |
| 205. ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர். |
| 206. ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர். |
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம். |
| 208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். | தூத்துக்குடி. |
| 209. ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210. ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 212. ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம். |
| 213. ராஜு, திரு. கே. ஆர். | கடலூர். |
| 214. ராஜு, திரு. கே. பி. | பேரூர். |
| 215. ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி. டீ. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 217. லாரன்ஸ், திரு. ஞ | பத்மநாபபுரம். |



| | |
|---|---|
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி. |
| 119. வரதராஜன், திரு. சே. து. | செங்கல்பட்டு. |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு. |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி. |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர். |
| 224. வேடியப்பன். திரு. நா. | போளூர். |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை. |
| 226. வேலையா, திரு. டி. | திருநெல்வேலி. |
| 227. ஜனார்த்தனன், திரு. தே. | விழுப்புரம். |
| 228. ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர். |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம். |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர். |
| 231. ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, செல்வி ஜெ. | பர்கூர். |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி. |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.**

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 12, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2012.

1981 செப்டம்பர் 28, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

நோய் இல்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### குறிப்பிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 98. டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

98—

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படியை உயர்த்துதல்.

* 2468 டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாநில அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படியாக மாதந்தோறும் ரூ. 15 அளிக்கப்படுவதை அதிகரித்துத் தருவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தகைய திட்டம் எதும் தற்போது இல்லை.

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாஸ் ஹெல்த் ஸ்கிரீனிங் ப்ரோகிராம்' (Mass Health Screaning Programme) என்று மாநில அளவில் ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மனம் உவந்து என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு, இந்த ரீஇம்பர்ஸ்மென்ட் ஆஃப் மெடிக்கல் எக்ஸ்பென்ஸஸ் அல்லது மருத்துவப்படி இவற்றில் எது விருப்பமோ அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு ஒவ்வொரு ஆண்டும் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வழிவகை செய்யப்படாததால், பல ஊழியர்கள் தங்களுடைய மருத்துவச் செலவுகளுக்கு எந்தவிதமான ஈட்டுப்படியும் பெறாத சூழ்நிலை உள்ளது. எனவே ஒவ்வொரு நிதியாண்டுத் தொடக்கத்திலும், அரசு ஊழியர்கள் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்து எழுதிக் கொடுக்க வழி வகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முறையில் எந்த ஒரு முறையை வேண்டுமானாலும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கடைபிடிக்கலாம், மருத்துவ அலுவலர்களின் சான்றிதழ் அடிப்படையில் மருத்துவச் செலவை மீளப்பெற வேண்டுமென்று நினைத்தாலும் அல்லது அவர்களுக்கு எவ்வளவு மருந்துச் செலவுக்கு ஆகிறதோ அந்தச் செலவு முழுவதையும் அரசிடமிருந்து பெற விரும்பினாலும் வழிகள் இருக்கின்றன. அதல்லாமல், அந்தத் திட்டத்திலிருந்து வெளியேற விரும்புகிறவர்கள் குறிப்பிட்ட தொகையை மாதந்தோறும் பெறுவது என்ற முறையில் ரூபாய் 15 பெற்றுக் கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களோடு பேசி எடுத்த ஒரு முடிவுதான். ஆண்டுக்காண்டு இதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் மறுபடியும் இது குறித்துப் பேச வேண்டும். இப்பொழுது எவ்வளவு மருந்துச் செலவு ஆகிறதோ அதைப் பெறுவதற்கு அவர்களுக்கு முழு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையை அவர்கள் பின்பற்றலாம். இந்த 15 ரூபாய் வாங்குவது அவர்களுக்கு சரியாக இல்லை என்றால் மற்றொரு வழியைப் பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.





டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தர, பகுதி நேர ஊழியர்களாக இருக்கும் சத்துணவுக் கூட பணியாளர்களுக்கும் இந்த மருத்துவப் படி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய முழு நேர ஊழியர்களுக்கும், அரசாங்கத்தினுடைய உதவி பெற்று முழு நேரம் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கும் தான் இது பொருந்தி வருமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற திட்டம் இல்லை. அது தனியாகத்தான் கவனிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு சி.சி.ஏ., மற்றும் எச்.ஆர்.ஏ. கொடுக்கிறார்கள். நீண்ட நாட்களாக செங்கல்பட்டில் அது கிடைக்கவில்லை என்ற ஒரு கோரிக்கையை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய துணைக் கேள்வி இது சம்பந்தமாக இருக்க வேண்டும்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ. பற்றிக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு ஊழியர்களுக்குரிய எல்லாவற்றையும் கேட்கக்கூடாது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : எங்கள் மாவட்டத்திற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் மாவட்டத்திற்கு என்றில்லை. மருத்துவப்படியாக மாதந்தோறும் 15 ரூபாய் அளிப்பது பற்றிய கேள்வி.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே கொடுக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற செங்கல்பட்டிலும் கொடுக்க வேண்டும்.

[1991 செப்டம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மருத்துவப்படியா ?

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : இல்லை. சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ. இதில் வராது. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப் படியை உயர்த்திக் கொடுத்தால் தவறான முறையில் பணம் பெறுவது தவிர்க்கப்படும். மேலும் பல அலுவலர்கள் இதற்காக நியமிக்கப்படுவதும் குறைவதோடு அரசுக்கு அதிகமான செலவு குறையும் என்பதும் அறிந்ததே. எனவே அரசு இதை பற்றி பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இரண்டு விதங்களில் ஏதேனும் ஒரு விதத்தை அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ நடைமுறைப்படுத்தலாம். அதாவது மருத்துவ அலுவலரின் சான்றிதழ் அடிப்படையில் மருத்துவச் செலவு எவ்வளவானாலும் கூட அதை மீளப்பெறுகிற ஒரு வழி இருக்கிறது. அதைக் கடைப்பிடிக்கலாம். இல்லையென்றால், மாதந்தோறும் ரூ. 15 என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற தொகையைப் பெறலாம். இப்போது இந்தத் திட்டம்தான் நடைமுறையில் இருந்து வருகிறது.

முற்பகல் 9.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர்ச. சுந்தரராஜ்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படி கொடுப்பதற்குப் பதிலாக அரசு மருத்துவமனைகளில் வருடந்தோறும் அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் சோதனை சிகிச்சை



1991 செப்டம்பர் 28]

பெறுவதற்கு இப்போதே வழிவகைகள் இருக்கின்றன. ஆண்டு தோறும் ஒரு தடவை அவர்கள் சிகிச்சை பெறுவதற்கான அளவுக்கு, உடற் கூறுகளை ஆராய வேண்டுமென்றால், அத்தகைய நிலைமைகள் இருக்குமானால் அவற்றைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதந்தோறும் அளிக்கப்படும் மருத்துவப் படி தமிழகத்தில் இருக்கின்ற அரசு ஊழியர்களில் எந்தெந்தத் துறை ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாக உள்ள எல்லாத் துறை ஊழியர்களும், எல்லா ஆசிரியர்களும் இதைப் பெறுவதற்கு முழு உரிமை படைத்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்காக பணியாற்றுகிற புரட்சித் தலைவி அவர்களின் அரசில் சத்துணவு அமைப்பாளர்களுக்கும், நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் அடுத்த ஆண்டாவது மருத்துவப்படி கொடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள், மற்றவர்களை எல்லாம் பார்ப்பதற்காகத்தான் இலவச மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள் நாடெங்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏழை எளியவர்கள், மற்றவர்கள் எல்லோருக்கும் பாடுபடுவதற்காகத்தான் நூற்றுச் சில்லரை கோடி ரூபாய் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு மாதம் 15 ரூபாய் என்பது குறைவாக இருப்பதால், அதை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1991 செப்டம்பர் 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி ரூ. 15 பெறுவது குறைவு என்று கருதுவார்களானால், உண்மையிலேயே எவ்வளவு ஆகிறதென்று கருதுகிறார்களோ அதை வாங்க வழியிருக்கிறது. எவ்வளவு மருந்துக்குச் செலவழிக்கிறார்களோ, அதற்கான ரசீதுகளைக் கொடுத்தால் அவற்றிற்குரிய தொகையை அரசு தரும். இரண்டு முறைகளில் ஏதாவது ஒன்றை அவர்கள் கடைபிடிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 99. டாக்டர் அ. ஸ்ரீதரன்—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

99—

தேயிலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்படும் தண்ணீருக்கு வரி

* 1376 டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்படும் தண்ணீருக்கு ( ) வரி வசூல் செய்ய அரசிடம் சொற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் கிடைக்கும் உத்தேச வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு தெளிப்பான் முறையில் பாசனம் செய்வதற்கான நடைமுறை நடந்து கொண்டிருக்கிறது. (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 1400-ம் பசலியில் விதிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வை மூலம் மட்டும் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் ரூ. 19,131.



1991 செப்டம்பர் 28]

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் நமது அரசுக்குச் சொந்தமான தண்ணீரை 'ஸ்பிரிங்கிள் வாட்டர்' முறை மூலமாகத் தங்கள் தேயிலைத் தோட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பயன்படுத்தும் அந்தத் தண்ணீருக்கு அவர்கள் செலுத்தும் கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதாக கட்சி சார்பற்ற அனைத்துத் தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் கூறுகிறார்கள். ஆகவே அரசு இதில் சிறப்பு கவனம் செலுத்தி, ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தெளிப்பான்கள் மூலமாக தண்ணீர் கொடுக்கிறபோது ஏக்கருக்கு 15 ரூபாய் வீதம் வசூல் செய்யப்படுகிறது. தெரியாமல் தண்ணீர் எடுத்தால் அதற்கு அபாராதத் தொகையாக, மிகவும் அதிகமாக 250 சதவிகிதம் வசூல் செய்யப்படுகிறது. இப்படி யாராவது தனியார் துறையிலே தவறு செய்தால், அது அரசுக்குத் தெரிந்தால், அதிகபட்சமாக 250 சதவிகிதம் தண்டத் தீர்வை இன்றைக்கு வசூலிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அரசுக்கு வரும் போது அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய இந்தத் தண்ணீர் தீர்வை சரியாகச் செலுத்தப்படுகிறதா என்பதைக் கவனிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினரும் அவ்வப்போது அந்த இடத்தில் ஆய்வு செய்வதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்த் தீர்வை, நில வரி இவைகளையெல்லாம் முறையாக அங்கே இருக்கிற அரசு அதிகாரிகள் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஏதாவது தவறு நடந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு இருக்கிற உரிமைப்படி அங்கேயிருக்கிற அதிகாரிகளிடம் தெரிவிக்கலாம். அதிகாரிகள் சரியாக நடக்காவிட்டாலும் அரசிடம் தெரிவிக்கலாம். தவறு நடக்காமல் இருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் முன் வந்து உதவி செய்வதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 100. திரு. தே. ஜனார்த்தனன்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

100—

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

* 1229 திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விழுப்புரம் தொகுதியில் கண்டமானடி, கோலியனூர் ஆகிய இரு ஊர்களிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1991-92 கல்வியாண்டில் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமானடி, கோலியனூர் ஆகிய ஊர்களில் உள்ளவர்கள் மிகவும் ஏழைகள். விவசாயத்தை நம்பியிருப்பவர்கள். அந்த இரண்டு ஊர்களும் விழுப்புரம் நகரத்திற்கு மேற்கிலும் கிழக்கிலும் கிட்டத்தட்ட 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளன. அங்கே இருக்கிற குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டுமென்று ஆர்வமாக இருக்கிறார்கள். ஆகவே அங்கே மேல்நிலைப்பள்ளி அவசியமாகிறது. ஒரு லட்சம் பணம் கட்டுவது என்பது அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு கடினமாக இருக்கிற காரணத்தால் அரசு விதிவிலக்கு அளித்து அதைவிட குறைவாகப் பணம் கொடுத்தால் பள்ளியைக் கொண்டுவர அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்த ஊர்களுக்கு அருகில் 4 மேல்நிலைப் பள்ளிகள் இப்போது இருக்கின்றன. ஐந்து கிலோமீட்டர் தொலைவில்



வளவனூரில் பள்ளி இருக்கிறது. நான்கு கிலோமீட்டர்
தொலைவில் மகளிருக்கு என்று வளவனூரிலேயே பள்ளி இருக்
கிறது. ஆறு கிலோ மீட்டர் தொலைவில் விழுப்புரத்திலேயே
2 மேல்நிலைப் பள்ளிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்று
இருக்கின்றன. ஆகவே இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்த கண்டமானடி பகுதியில் புதிய
மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கான கருத்துரு இப்போது
அரசிடத்திலே இல்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள்
இந்த ஒரு லட்சம் ரூபாய் முன் பணத்தை ஏழை மக்களாக
இருக்கிற அந்தப் பகுதியைக் கருதி, குறைத்துக் கொள்ளலாமா
என்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஒரு லட்சம் ரூபாயைக்
குறைத்துக்கொள்வது என்பது மாத்திரம் பிரச்சினையில்லை.
ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்க வேண்டுமானால் சுமார் ஏழரை
லட்சம் ரூபாய் அரசாங்கம் உடனடியாக முதலீடு செய்தாக
வேண்டும். அதைத் தொடர்ந்து பல்வேறு செலவுகள் ஆண்டு
தோறும் உயர்ந்துகொண்டேயிருக்கும். இதைக் கருத்தில்
கொண்டுதான் ஆண்டுக்கு எத்தனை மேல்நிலைப் பள்ளிகள்
தொடங்குவது என்று இந்த அரசு திட்டமிட்டு செயல்படுகிறது.
இந்த ஆண்டு ஏற்கெனவே 20 மேல்நிலைப் பள்ளிகளுக்கு அரசு
அனுமதி வழங்கிவிட்டது. எனவே அடுத்த ஆண்டிலே இருக்கிற
சூழ்நிலைகளுக்கேற்ப, எந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுக்க
வேண்டுமோ அந்தப் பகுதியிலே மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க
அரசு முன்வரும். இதற்கிடையில் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் அந்தப் பகுதியிலே வசதி மிக்கவர்கள், தனியார்கள்
இப்படிப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு முன்வரு
வார்களேயானால் அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்
கும் வகையில் கருத்துக்கள் அரசுக்கு அனுப்பப்படுமேயானால்
அந்தக் கருத்தையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது
அங்கே நிறைய மேல்நிலைப் பள்ளிகள் இருப்பதாகச் சொல்லி
னார்கள். கோலியனூர்—கண்டமானடி ஆகிய ஊர்களில் இருக்
கின்ற குழந்தைகள் எல்லாம் படிப்பதில் ஆர்வம் காட்டுவதன்
காரணமாக இப்போதிருக்கிற பள்ளிகளிலே இடம் நெருக்கடி
அதிகமாக இருக்கிறது. அதனால்தான் அங்கே மீண்டும் மேல்

நிலைப் பள்ளி தேவை என்று நாங்கள் கருதுகிறோம். அரசு விதி முறைகளின்படி நாங்கள் பணம் செலுத்தினால், அடுத்த ஆண்டு அங்கே நிச்சயமாக மேல்நிலைப்பள்ளி உருவாக்கித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே சொல்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் அந்தப் பகுதி ஏழைகள் வாழ்கிற பகுதி. ஆகவே அந்த ஒரு லட்சம் ரூபாயைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். இப்பொழுது கொஞ்சம் பார்கெயினில் இறங்கி ஒரு லட்சம் ரூபாயைக் கொடுத்தால் பள்ளியைத் தொடங்குவீர்களா என்று கேட்கிறார்கள். நான் முன்பே தெரிவித்ததைப் போல, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கவேண்டுமென்ற ஆர்வமும் நம்முடைய மாணவ மாணவிகள், சிறுவர் சிறுமிகளை எல்லாம் படிக்கவைக்கவேண்டுமென்ற ஆர்வமும் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. விழுப்புரம் போன்ற நகரங்களில் அல்லது நகரைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் அங்கேயிருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகள், நம்முடைய அரசாங்கப் பொறுப்பில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகள்தான் இப்போது இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவேதான் சொன்னேன். விழுப்புரம் போன்ற நகரப் பகுதியில் இருக்கிற தனியார் யாராவது நடத்துவதற்கு முன்வருவார்களேயானால் முறையாக நடத்தக் கூடியவர்கள் ஒன்று சேர்ந்து நடத்த முன் வந்தால் அதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வகையிலே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றாலும், அடுத்த நிதி ஆண்டிலே புதிய மேல்நிலைப் பள்ளி களைத் தொடங்குகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள் கிறேன். ஆனால் அவர்கள் இதையே நம்பிக் கொண்டிராமல் முயற்சி எடுத்து விழுப்புரம் போன்ற நகரத்தில் தனியார் நடத்து வதற்கு முன்வருவார்களேயானால், அவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஊக்கம் அளித்தால் அரசு அதற்கு ஆதரவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செ. ஆறுமுகம்.





**திரு. செ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 15 ஆண்டுகளுக்கு முன்னால உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தவிட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் தொகுதியைப் பற்றி வராது. விழுப்புரம் பகுதியைப்பற்றி துணைக் கேள்வியைக் கேளுங்கள். அல்லது பொதுவாகக் கேளுங்கள்.

**திரு. செ. ஆறுமுகம் :** 15 ஆண்டுகளுக்கு முன்பு தொகை செலுத்தப்பட்டும, இதுநாள் வரை மேல்நிலைப் பள்ளி கிடைக்க வில்லை. இந்த ஆண்டிலாவது, காவல் தெய்வம், புரட்சித் தலைவி ஆட்சியாலாவது எங்களுக்கு இந்த மேல்நிலைப் பள்ளி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வானூர் தொகுதியைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. அவர் குறிப்பிடுகிற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்ற குறிப்பும் என்னிடத்திலே இல்லை. நீங்களே சொன்னீர்கள். அதுபோன்று தனியாகக் கேள்வியைப் போட்டால் தகவலைத் திரட்டி அவைக்குத் தர முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. பி. ராஜு, இது விழுப்புரம் தொகுதியைப் பற்றியது. அதிலே துணைக் கேள்வி யைக் கேளுங்கள்.

**திரு. கே. பி. ராஜு :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான மேல்நிலைப் பள்ளிகளையெல்லாம் அரசினர் கொடுத்துவிட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடித்துக் கொடுக்கப்பட்டு இங்கே அதன்மீது விவாதங்கள் எல்லாம் நடை பெற்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் படித்திருந் தால், தெளிவாகத் தெரிந்துகொண்டிருப்பார்கள். 20 மேல்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அவைகளுக்கு எல்லாம் அனுமதிகள் வழங்கப்பட்டுவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எச். எம். ராஜு.

**திரு. எச். எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டத்தின் மூலமாக அரசுக்கு தற்போதைய செலவு எவ்வளவு ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம், கட்டிடம், இவைகளை நீக்கிவிட்டுப் பார்த்தாலும் சுமார் ரூ. 7.5 இலட்சம் எடுத்த எடுப்பிலேயே, ஆரம்பத்திலேயே செலவு வரும். அதற்குப் பிறகு தொடர்செலவினங்கள் ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டே இருக்கும். இதைத் தவிர இடங்கள் தேவைப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி க. பழனியம்மாள்.

**திருமதி க. பழனியம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும்போது, அதற்குக் கட்டாயம் பிளே-கிரவுண்ட் இருக்க வேண்டும் என்ற கண்டிஷன் இருப்பதால் நகரின் மையத்திலே இருக்கின்ற பள்ளிகளுக்கு அந்த வசதி இல்லாமையால், இன்னும் மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தப்படாமலே இருக்கின்றன. அதற்கு ஏதாவது விதிவிலக்கு அளித்தோ அல்லது நிலம் கிடைக்க ஆவன செய்தோ மேம்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் என்று வருகிறபோது ஒவ்வொரு காலக் கட்டத்திலேயும் ஒவ்வொரு பகுதியிலேயும் சில திட்டவட்டமான நெறிமுறைகள் வகுக்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளிகள் என்று வருகின்றபோதுதான் கட்டாயமாக விளையாட்டுத் திடல் இருக்க வேண்டும் என்ற விதி அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அவசியம் என்னவென்றால், படிக்கிற இளைஞர்கள், ஆணோ, பெண்ணோ தங்களுடைய உடலைப் பாதுகாத்துக்கொள்ள தேகப் பயிற்சி செய்வதற்கு, விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு அது கல்வியின் ஒரு பகுதியாக இருக்கிறது. அது தேவையற்ற ஒன்று என்று நம்மிலே பலர் இப்போது எண்ணிக்கொண்டிருக்கிறோம். உடலைப் பாதுகாத்து, உள்ளத்தைப் பாதுகாத்து, மனத்தைப் பாதுகாத்து மூளையை வலிவடையச் செய்கின்ற முயற்சிகளிலே



ஒன்றுதான் தேகப் பயிற்சி, விளையாட்டு என்பது. ஆகவே கல்வியின் ஒரு பகுதியாகத்தான் கண்டிப்பாக விளையாட்டு இருக்க வேண்டும் என்று இப்போது இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே இணைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதைப் போல எங்கேயாவது மிக நெருக்கடியான பகுதிகளில் வேறு வழியே இல்லாமல் உள்ள பகுதியில் இருக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்று கேட்டால்—எல்லாவற்றிற்கும் எல்லா விதிகளுக்கும் விதிவிலக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்க முடியாது—நடைபெற முடியாத, கட்டப்படுகிற இடங்களில் மிக அத்தியாவசிய தேவை என்று கருதப்படுகிற போதுதான் அந்த விதிவிலக்கைத் தருகிறோம். அப்படிப்பட்ட வேண்டுகோள் ஏதாவது வந்தால் அந்த இடம், அங்கேயுள்ள சூழ்நிலை. அந்தப் பகுதி மக்களுடைய நிலைமைகள், இவைகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு அதற்கு விதிவிலக்கு அளிக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9.50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. சொக்கலிங்கம்.

**திரு. பி. சொக்கலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தெய்வத்தாய் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் அவர்களே என்று மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. பி. சொக்கலிங்கம் :** தலைவர் அவர்களே, நிதியுதவி அளிப்பவர்களிடம் வசூல் செய்யும்போது, வசூல் செய்து கொடுக்கிறவர்களுக்கு பள்ளிகள் கட்டித் தரப்படும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார். நிதியை எப்படி வசூல் செய்வது? அந்த நிதியை வசூல் செய்வதற்கு ரசீது புத்தகங்களை அரசே அச்சிட்டுக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அது மாநில அளவில் செயல்பட்டு வருகிறது. அந்த பெற்றோர்

ஆசிரியர் கழகத்திற்கு கல்வித்துறை அமைச்சர்தான் தலைவர். இன்றைக்கு தமிழகம் முழுவதுமுள்ள பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலம்தான், இத்தகைய கட்டடக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவைகள் உயர்நிலைப் பள்ளியை மேம்படுத்துவதற்கும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும், உயர்த்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, முறையாக அங்கீகரிக்கப்பட்ட பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக இது மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவும் சரியாக ரசீதுகள் கொடுத்துத்தான் அப்படிப்பட்ட நன்கொடைகள் வாங்கப்படுகின்றன. தனித்தனியாக நன்கொடைகள் வாங்குவதோடு, யாராவது வசதி உள்ளவர்கள், கொடை உள்ளம் கொண்டவர்கள் மூன்று இலட்சம், ஐந்து இலட்சம் என்று கொடுக்க முன் வந்தால், அவர்களுடைய பெயரிலேயே அந்தக் கட்டடங்கள் கட்டப்படும் அல்லது குறிப்பாக முன்பே நான் எடுத்துச் சொன்னதைப்போல, உயர்நிலைப் பள்ளிக்கு ஐந்து லட்சம் ரூபாய் அல்லது மேல்நிலைப் பள்ளிக்கு பத்து லட்சம் ரூபாய் என்று வழங்கினால் அவர்கள் பெயரிலேயே பள்ளிக்கூடங்கள் நிறுவப்படும் என்று சொல்லி இருக்கிறேன்.

ஆகவே, இந்த பெற்றோர் ஆசிரியர் கழகம்தான் இந்த முயற்சியிலே ஈடுபட வேண்டும். தனியார் யாரும் ஈடுபடக் கூடாது. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய சொந்த பொறுப்பிலே ஈடுபட்டாலும் இந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாகத் தான் ஈடுபட வேண்டுமே தவிர, அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளலாமே தவிர, எங்கேயும் பணத்தை தனியாக அவர்கள் வசூல் செய்யக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 101—திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

101—

தீரர் சத்தியமூர்த்தி பெயரில் போக்குவரத்துக் கழகம்.

* 2097. திரு. சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தீரர் சத்தியமூர்த்தி பெயரில் அரசு போக்குவரத்துக் கழகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சுவாமிநாதன்— இருக்கையில் இல்லை. வினா எண். 102—திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

102—

ராமகிரி அணைக்கட்டுத் திட்டம்.

* 280-திரு. ச. காந்திராஜன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேடசந்தூர் தொகுதி ராமகிரி அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் ராமகிரி அணைக்கட்டுத் திட்டம் என்ற அணைக்கட்டு கட்டுகிற திட்டம் எதுவும் இப்போது பரிசிலனையில் இல்லை.

**திரு. ச. காந்திராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமகிரி அணைக்கட்டுத் திட்டம் என்னுடைய தொகுதி குஜிலியம்பாறை ஒன்றியத்தில் அமைந்துள்ளது. அந்தத் திட்டமானது ஆர். கோம்பை கிராமம் சர்வே எண். 49 முதல் 132 வரையில் சில சர்வே நம்பர்களில் மொத்தம் 250 ஏக்கரும், வனத்துறைக்குச் சொந்தமான இடம் 60 ஏக்கர்களும் சேர்ந்து நிலப்பரப்புள்ள மிகவும் தண்ணீர் தேங்கக்கூடிய மத்திய ஆர மலைப்பகுதி ஆகும். மழைக்காலங்களில் கிடைக்கிற தண்ணீரை வைத்து சுமார் ஆயிரம் ஏக்கருக்கு நேரடியாகவும், 150 கிணறுகளுக்கு மறைமுகமாகவும் நீர் [illegible] கிடைக்கி

வாய்ப்பைக் கொண்ட அந்தத் திட்டமானது, மாற்று வழிகளில் பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்கு பயன்படுகிற வகையில் அமையக்கூடிய திட்டமாக இருக்கிற காரணத்தால், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது சேர்த்து, வரும் ஆண்டில் வேலை தொடங்குவதற்கு உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியதைப் போல, அவையிலே தெரிவித்ததைப் போல, அணையைக் கட்டுகின்ற திட்டம் தற்போது இல்லை. ஆனால் வேடசந்தூர் தொகுதியிலே ராமகிரி என்ற கண்மாயினுடைய அணையினை இன்றைக்கு மதிப்பீடு செய்து, அதற்காக இன்றைக்கு 48 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் வைத்திருக்கிறோம். ஆகவே, இந்தத் திட்டத்தை முதலிலே நிறைவேற்றுவதற்கான பணிகள், முயற்சிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். அணைக்கட்டுத் திட்டம் பற்றிய அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து, அதற்கேற்ப இந்த அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே, 1986-87 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே பல்லாண்டுக் காலத்திற்குப் பின்பாக, ஆய்வு செய்யப்பட்ட நிலைமையிலே நிதியும் ஒதுக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே என்ன காரணத்தினாலோ, அது அனாதையாக போடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியலில் அனாதை களான எங்களுக்கு எல்லாம் வாழ்வு அளித்த, எங்களுடைய அன்னையாக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சியில் ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்ட திட்டம் என்ற காரணத்தாலே, மறுபடியும், அந்தத் திட்டத்தை உடனடியாகச் சேர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்ட திட்டம் என்று சொன்னார்கள். நான் இதற்கு ஒரு விளக்கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டி ருக்கிறேன்.





திட்டங்களைப் போடுகின்ற நேரத்தில், மதிப்பீடுகள் தயார் செய்யப்படுகின்றன. அந்த மதிப்பீடுகள் அரசினுடைய ஒப்பு தலுக்காக இங்கே அனுப்பப்படுகின்றன. அப்படி அனுப்பப் பட்டு, அரசினுடைய ஒப்புதல் பெறப்பட்டதற்குப் பின்னாலே அதற்கு பணம், நிதி ஆதாரங்களை வைத்து, நிதித்துறையின் மூலம் அனுமதி பெற்று, அதற்குப் பின்னாலேதான், இந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கப்படுகின்றது. நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் மதிப்பீடுகள் செய்யப்பட்டு அனுப்பப் படுகிற திட்டங்களை எல்லாம் வைத்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக பல்வேறு கேள்விகளிலே இங்கே தெரிவிக் கிறார்கள். நாம் திட்டங்களை ஆராய்ந்து, அதற்கான மதிப்பீடு களைத் தயார் செய்து, அரசாங்கத்திற்கு அனுப்புகின்ற அனைத்துக் திட்டங்களையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் அல்ல. அனுப்பப்படுகின்ற திட்டங்களில், எவை எவைகளுக்கு, நிதி ஆதாரங்களைப் பொறுத்து, முன்னுரிமை கொடுத்து செய்யலாமோ, அதையெல்லாம் இந்த அரசு கவனத்தோடு பரிசீலித்து, அந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ராமகிரி அணைக்கட்டுத் திட்டத்தினுடைய சாத்தியக்கூறுகளை நாங்கள் ஆராய்ந்து, அதற்குரிய நிலைமைகளுக்கு ஏற்ப, நிதி ஆதாரங் களுக்கு ஏற்ப முடிவு எடுக்கப்படும் என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பன்னீர்செல்வம்,

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற, தி.மு.க. வினுடைய ஆட்சியிலே பல ஆறு களின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டன. அப்போது சரியான வி. ஏ. ஓ-வால் சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்ட இடங் களில் அந்த அணைகள் கட்டப்படாததால் சில தொகுதிகளிலே அணைகளுக்கு கோர்ட்டில் இன்ஜங்சன் வாங்கப்பட்டது. அந்த இன்ஜங்சன். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பன்னீர்செல்வம் இந்தக் கேள்விக்குத் தொடர்பு உடையதாக இருக்க வேண்டும் நீங்கள் கேட்பது, பொதுவான, விரிந்து பரந்த கேள்வி.

திரு. என். பன்னீர்செல்வம் : தவறான முறையில் கட்டப்பட்டு இருப்பதால் . . . .

[1991 செப்டம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இந்தக் கேள்வியில் வராது. அதைத்தான் நான் முதலிலே சொன்னேன். மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

**திரு. என். பன்னீர்செல்வம் :** பாலம் கட்டியது தவறாக இருக்கிறது. அதனால் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாலம் கட்டியதைப்பற்றி இந்தக் கேள்வியில் வருமா ? அடுத்து, வினா எண் 103, செல்வி மல்லிகா மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**அனுவம்பட்டு ஊராட்சியில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம்.**

*1225 **செல்வி. மல்லிகா :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில், பாசிமுத்தான் ஓடையில் வீணாக வெள்ளாற்றில் கலக்கின்ற நீரை அனுவம்பட்டு ஊராட்சி விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ரெகுலேட்டர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்து விரிவான மதிப்பீடு அறிக்கை இன்றைக்கு தலைமைப் பொறியாளரினுடைய ஆய்வில் இருக்கிறது.

**செல்வி. மல்லிகா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசிமுத்தான் ஓடை நீர் கடலில் கலக்கிற காரணத்தால் ஓடையின் நீரும் உப்பு நீராக மாறி, வீணாகி வருகிறது. இந்த நீர் கடலில் கலக்காமல் இருக்க, ரெகுலேட்டர் கட்டினால் ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறும். எனவே, தலைமைப் பொறியாளரின் அறிக்கையை விரைவில் பெற்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர தங்கத்திருமேனி கொண்டவராம், தரணியில் வெற்றிகள் குவித்தவராம், எங்கள்



1991 செப்டம்பர் 28]

உள்ளத்தில் என்றும் உறைபவராம், என்றும் எழிலுடன் திகழ்பவராம், சிங்கத்தமிழருக்கு சிநேகிதராம், சிந்தையில் அவர் தொண்டு நினைப்பவராம், சங்கத் தமிழ்போல் வாழ்பவராம், சரித்திரம் படைக்க வந்தவராம், நமது இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் பாசிமுத்தான் ஓடையில் வீணாகும் தண்ணீரை, மிச்சப்படுத்துவதற்காக வெள்ளாற்றின் குறுக்கே, ஓடையின் குறுக்கே, ஒரு ரெகுலேட்டர் அமைத்து, அதன் மூலம் அந்தத் தண்ணீரை முறைப்படுத்தலாம் என்ற அளவிற்கு, 10 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அளவிலே ஒரு திட்டம் இன்றைக்கு சிதம்பரம் கோட்டப் பொறியாளரிடத்திலே ஆய்விலே இருக்கிறது. அது ஆய்வு செய்யப்பட்டு எஸ்.இ. என்று சொல்லப்படுகிற வட்டப் பொறியாளரால் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு அரசுக்கு அனுப்பப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் அரசுக்கு வந்தவுடனே இது சம்பந்தமான முடிவுகளை அரசு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**செல்வி. மல்லிகா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் ஆதாரங்கள் குறைவான அளவிலே உள்ள தமிழகத்தில் இவ்வாறான ஓடை நீர் நிலை வீணாகாமல் ரெகுலேட்டர் அமைப்பதன் மூலம் விளை நிலங்கள் நல்ல நீர் பெற்று தன்னிறைவு பெற்று, தமிழகம் மிளிர வாய்ப்பு ஏற்பட வழி உள்ளதால், அந்த நடைமுறையில் அதன் குறுக்கே விரைவில் ரெகுலேட்டர் அமைத்துத் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். வீணாகின்ற தண்ணீரை முறைப்படி முறைப்படுத்துகின்ற எண்ணத்தோடு, ஏற்கெனவே திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு, இன்றைக்கு வட்ட அளவில் ஆய்விலே இருக்கிறது. ஆகவே வீணாகின்ற தண்ணீரை ஒரு போதும் இந்த அரசு பயன்படுத்தத் தவறி விடாது.

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான முறைப்பான திட்டங்களை இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 104- திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**104—**

**வழுவனார் வடிகாலின் கரைகளைக் கட்டுதல்.**

* 1538 **திரு. ஜி. பழனிசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா, வழுவனார் வடிகாலின் இரு கரைகளையும் கட்ட அரசு திட்டமிட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்திட்டத்தை எடுத்துக்கொள்ளுவதற்கான சாத்தியக் கூறுகள் தற்பொழுது இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலே இருக்கக்கூடிய வழுவனார் என்ற வடிகால் மூன்று தாலுக்காக்களை இணைத்து, வெள்ளக் காலங்களிலே வழுவனாரில் தான் அது மிகவும் வடிகிறது. அதன் இரு கரைகளும் பல ஆண்டுகாலமாக பாதுகாக்கப்படாத நிலையில் இன்றைய தினத்தில் 100 ஏக்கருக்கு மேல் அதன் மூலமாக வீணடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆக அந்த வடிகால் மூலமாக பாதிக்கக்கூடிய விளை நிலங்களை பாதுகாப்பதற்கு அதன் இரு கரைகளையும் அரசு கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே திருத்துறைப்பூண்டி தாலுக்காவிலே உள்ள வழுவனார் வடிகாலில் இரு கரைகளையும் சீரமைக்கின்ற அந்தத் திட்டம் தற்போது இல்லையென்று நான் சொன்னாலும்கூட, 1992-93 ஆம் ஆண்டினுடைய பகுதி 2 'பார்ட் 2' ஸ்கீம் என்ற திட்டத்திலே அதற்காக ஒரு நடைமுறை மதிப்பீடு வைத்திருக்கின்றோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கேற்ப 1992-93 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழே அதை எடுத்துச் செய்வதற்கு அரசு முயற்சியினை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடிகாலோடு மட்டுமல்ல. தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் கடலில் அதிகமான காற்று வருகின்றபோது, கடலின் தண்ணீர், உப்புத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்றபோது, அந்த வழுவனாரில் வந்து நூற்றுக்கணக்கான ஏக்கரின் உள்ளே நுழைந்து, அதனால் பயிரிடப்பட்டிருக்கின்ற பயிர்கள் எல்லாம் கருகிவிடுகிறது. உப்புத் தண்ணீர் நிலத்திலே புகுவதாலே 10 ஆண்டுக் காலமாக எந்த விவசாயமும் செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. அவர்கள் அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் அந்த வழுவனார் வடிகாலின் இரு கரைகளையும் சீரமைக்கின்ற நேரத்திலே அதையொட்டி, ஒற்றைக்கரை, அடவிளஞ்சான், இரட்டைக் கரை, அரிச்சந்திரா நதி போன்ற பகுதிகளில் இருக்கின்ற கால்வாய்களை எல்லாம் சீரமைக்க இருக்கின்றோம். ஏனென்றால் கடலின் தண்ணீர் அந்தப் பகுதியிலே வருகின்ற நேரத்திலே எல்லா கால்வாய்களையும் சீரமைத்தால் தான் தண்ணீரை முறைப்படுத்திச் செல்லமுடியும், கடல் நீர் அங்கே வராமல் தடுக்கமுடியும் என்ற காரணத்தினாலே அந்த இணைந்த கருத்துருவிலே சேர்த்து இந்தக் கால்வாய்களையும் செப்பனிட இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உறுப்பினர் அதைப்பற்றி அச்சப்படத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வே. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கரையை வலுப்படுத்துவதில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த ஆற்றங்கரைகளை வலுப்படுத்துவது என்று அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றினுடைய கரைகளிலே இருக்கின்ற அனைத்துக் கரைகளையும் நவீனப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கின்றது. அதற்காக மத்திய அரசினுடைய உதவியையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கோரி இருக்கிறார்கள். ஆகவே பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் காவிரிப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் கால்வாய்களையும் சீரமைக்கின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் தற்போது உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 105—திரு. இரா. நடேசன், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மற்றும் திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

105—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.**

*35 **திரு. இரா. நடேசன் :**

**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :**

**திரு. கு. லாரன்ஸ் :**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10.05)

**திரு. இரா. நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கல்லூரிகள் எல்லாம் தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், அங்கு கல்வி கற்க வேண்டும் என்று நினைக்கிற மாணவர்களுக்கெல்லாம் அண்டை மாநிலம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அங்கெல்லாம் இடவசதி கிடைக்காமல் அவர்களெல்லாம் கஷ்டத்திலே இருக்கிறார்கள். ஆகையினால், மீண்டும் பரிசீலனை செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய நிதி நிலைமை காரணமாக இந்தத் திட்டம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 400 கோடி செலவில் ஒரு ரப்பர் தொழிற்சாலைக்கு ஒப்புதல் கொடுத்திருப்பதற்கு குமரி மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு குமரி மாவட்டத்தில் அரசின் சார்பாக ஒரு கல்லூரி கூட இல்லாத காரணத்தால் அந்த விவசாயக் கல்லூரியை அடுத்த வருடமாவது அமைக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை இந்த நாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு நிதிநிலைமைக்குத் தக்கவாறு இந்த அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

**திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 வருடங்களுக்கு முன்னால் கோவை விவசாயக் கல்லூரியின் சார்பாக ஒரு ஹார்ட்டிகல்ச்சர் பிரிவு ஒன்றை கிளையாக ஆரம்பிக்க இங்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விவசாயக் கல்லூரி அமைய வேண்டும் என்பதற்காக நாகர்கோவிலில் ஒரு அலுவலகம் அமைந்து இரண்டு வருடங்களாக இது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அரசுக்கு தனியார் நிலம் கொடுக்காத காரணத்தாலே அந்தக் கல்லூரி அமையாமல் இருந்ததாக நான் கருதுகிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லாரன்ஸ், வேளாண்மைக் கல்லூரி தொடங்குவது பற்றிய கேள்வி. இது பற்றி நேரிடையாக உங்கள் கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. கு. லாரன்ஸ்:** இன்றைக்கு நிதி பற்றாக்குறை இருந்தாலும் கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே விவசாயக் கல்லூரியை அமைக்கும் எண்ணம் வருகிறபோது, ஒரு விவசாயக் கல்லூரியை அங்கே ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக் கலை ஆராய்ச்சி மையம் திருப்பதிசாரம் மற்றும் பேச்சிப்பாறை பகுதியிலே இருக்கிறது. கல்லூரி அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிற காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம்தான் எல்லா வெரைட்டிகளும் விவசாயம் செய்யும் மாவட்டம். குறிப்பாக ரப்பர், தேங்காய், நெல், எல்லாம் விளைகின்ற மாவட்டம். அந்த மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியை அமைக்க—அரசினுடைய நிதிநிலைமை எங்களுக்கு நன்றாகத் தெரியும்—வருகிற நிதி ஆண்டிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு ஒரே பதிலைத்தான் என்னால் திருப்பத் திரும்பச் சொல்ல முடியும். அரசிடத்திலே இருக்கிற நிதிப் பற்றாக்குறை காரணமாக இதுபோன்ற திட்டம் இப்போது இல்லை. கொடுக்க வேண்டிய காலத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொடுப்பார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ஜி. வேணுகோபால். இது கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைப் பற்றிய கேள்வி.

**திரு. என். ஜி. வேணுகோபால்:** இம்மாதிரி அரசு வேளாண்மைக் கல்லூரியை அமைக்கும்போது எந்த மாதிரி கருத்துக்களின் அடிப்படையில் அந்தக் கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன என்று அறிய விரும்புவதோடு, ஏனென்றால், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற . . .

முற்பகல் 10.10.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மாதிரி கேள்வி கேட்காதீர்கள், எத்தகைய அணுகுமுறையில் இத்தகைய கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன என்ற அந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றி தனிக்கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 106—திரு. டி. எம். ரங்கராஜன், திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

106—

**அனுமதி பெறாமல் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுபவர் மீது நடவடிக்கை.**

* 109. **திரு. டி. எம். ரங்கராஜன்:**

**திரு. வி. கே. லட்சுமணன்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அனுமதி பெறாமல் கட்டப்படும் அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டும்போதே அக்கட்டிடம் கட்டுபவரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. டி. எம். ரங்கராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் சென்னை நகரத்திலே வித் லாட் ஆஃப் டீவியேஷனுடன் கட்டப்படுகின்றன. இதனுடைய சொந்தக்காரர்கள் பெரும்பாலும் நடுத்தர மக்கள் தான். இவர்கள் அங்கே குடி போகின்ற போதுதான் எம்.எம். டி.ஏ. டீவியேஷன் பற்றி அறிவிப்பு வருகின்றது. சில நேரங்களில் கட்டிடங்களை இடிப்பதற்கும் அரசாங்கம் உத்தரவு இடுகிறது. இதனைத் தடுத்திட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய ஆய்வு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பாம்பே மாநகரத்திலே எப்படி ஃப்ளாட்ஸ் ப்பில்டிங் ரெகுலேஷன் ஆக்ட் இருக்கிறதோ அது போன்ற சட்டத்தினை சென்னையிலே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறியிருந்தேன். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், எப்படிப்பட்ட சட்ட விதிமுறைகளை இதற்கு ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுக்க முடியும் என்பது அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கன்டரி அண்டு டவுன் ப்ளானிங் ஆக்ட் செக்ஷன் 41-ன்படி எந்த இடத்திலே வீடு கட்டலாம் என்பதைப் பற்றித்



தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல தமிழ்நாடு சிட்டி முனிசிபல் கார்ப்பரேஷன் ஆக்ட் செக்ஷன் 236/1-படி முன் அனுமதி பெற்றுத்தான் வீடு கட்டப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. அதே போல தமிழ்நாடு கன்ட்ரி அண்டு டவுன் ப்ளானிங் ஆக்ட் 56 செக்ஷன்படி அங்கீகரிக்கப்படாத மனைக் கட்டுகளை 3 வருஷங்களுக்குள்ளாக நோட்டீஸ் கொடுத்து அப்புறப்படுத்தலாம் என்றும் விதி இருக்கிறது. ஆனால் அதே சட்டத்திலே செக்ஷன் 113-ன்படி எல்லாவற்றிற்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த விதியைப் பயன்படுத்திக் கொண்டு அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளை கட்டுகின்றவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். குறிப்பாக அப்பார்ட்மெண்ட் ப்ரமோட்டர்ஸ்தான் இதுபோன்ற காரியங்களிலே ஈடுபட்டு வருகிறார்கள். எனவே இதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி தான் கேட்க வேண்டும்.

திரு. வி. கே. லட்சுமணன்: அதே போல மேற்கு வங்காளத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் என்று முடியுங்கள். கேள்வி நேரத்திலே பெரிய டிஸ்கஷனுக்கு போகக் கூடாது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் குழுமம் அனுமதி பெறாத மற்றும் அனுமதிக்குப் புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்ட சட்ட விதிகள் டவுன் அண்டு கண்ட்ரி ப்ளானிங் ஆக்ட் செக்ஷன் 56 அண்டு 85-ன்கீழ் நடவடிக்கை எடுக்கின்றது. இப்படிப்பட்ட கட்டிடங்கள் கள ஆய்வின்போதோ அல்லது புகார் மனுக்களின் அடிப்படையிலோ தெரிய வருமாயின், கட்டிட நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி கட்டிட உரிமையாளர்கள் அல்லது அபிவிருத்தி செய்பவருக்கு அறிவிப்பும் அளிக்கப்படுகின்றது. அப்படி அறிவிப்பு அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தியினை அனுமதி பெற்ற வரைபடத்தின்படியோ அல்லது அனுமதி பெறாமல் அபிவிருத்தி

செய்வதற்கு முன்பு இருந்த நிலைக்கே கொண்டு வரும்படி அறிவிப்பு தெரிவிக்கப்பட்டு, அப்படியும் அதை சரி செய்யவில்லை என்றால், உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பிரிவு 56-ன் கீழ் அந்தக் கட்டிடத்தை இடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே செக்ஷன் 56-ன்படி முறைகேடாக ஏற்படுத்தப்படுகின்ற கட்டிடங்களை முறைப்படுத்துவதற்கு இந்தப் பிரிவின்கீழ் வழிவகை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பிரிவு 113-ன் கீழ் அரசுக்கு ஒவ்வொரு கட்டிடத்தினுடைய தன்மையை வைத்து எப்படிப்பட்ட டீவியேஷன்கள் இருக்கின்றன என்பதை வைத்து 'ஆன் மெரிட்'—ஒவ்வொரு பிரச்சினையின் தகுதிக்கு ஏற்ப அனுமதி வழங்கலாம் என்று இருக்கின்றது. இதுபற்றி முறையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.15

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டங்கள் இருந்தாலும், பல சமயங்களில் நீதிமன்றத்திற்குச் சென்று தடையை வாங்கிவிடுகிறார்கள். இதனால் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இவையெல்லாம் தவிர்ப்பதற்கு மற்ற மாநிலங்களில் உ.பி., குஜராத், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் இருப்பது போல இங்கே அப்பார்ட்மென்ட் ஆக்ட் என்று ஒன்றைக் கொண்டுவருவோம் என்று சொன்னால் புரமோட்டர்களுக்கும், அந்த அப்பார்ட்மென்டை விலைக்கு வாங்குகிறவர்களுக்கும் இடையே இருக்கிற பிரச்சினை எளிதாகத் தீர்ந்துவிடும். ஆகவே இந்தக் கட்டிடங்களை சீர்செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முறைகேடான கட்டிடங்களை கட்டுவதைத் தடுப்பதற்கு நான் ஏற்கனவே கூறியிருந்தேன். செக்ஷன் 56-ன் கீழ் கட்டிடத்தை இடிப்பதற்குகூட அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று. முறையான ஆக்ட் என்பது பரிசீலனைக்கு பிறகு, தகுதியான ஆய்வுக்கு பிறகுதான் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.



திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் போன்ற பெருநகரங்களில் அடுக்கு மாடி வீடுகள் அதிகமாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது இன்றைக்கு தேவைப்படுகிறது. ஆனால் அதற்கு வேண்டிய பாதாள சாக்கடைகள், குடிநீர் வசதி இன்றி பலயிடங்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்படுமோ என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஏற்பாடு அரசின் ஆய்வில் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில் எடுத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள், முறை, ரூல்ஸ் என்ற படிவங்களைப் பார்த்துத் தான் அனுமதி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் அப்போதைய வீட்டுவசதித் துறை அமைச்சரின் வற்புறுத்தலின் பேரில் எம்.எம்.டி.ஏ., சட்ட திட்டங்களுக்கு உட்படாமல் பல கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அந்த அமைச்சர் மீதும் அப்போது இருந்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய புகார்களை அவர் என்னுடைய கவனத்திற்கு எழுத்து மூலமாக, எந்த இடத்திலே எப்படி நடந்தது என்று தெரிவிப்பார்களானால், தவறு செய்தவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள். தவறு செய்கின்றவர்களை விட்டுவிடுகின்ற அரசு நமது புரட்சித் தலைவி அவர்கள் அரசு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. [illegible].

[1991 செப்டம்பர் 28

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெறாமல் சிலபேர் கட்டி னாலும் கூட கார்ப்பரேஷன் எல்லைக்குள்ளேயே எங்களது மதுரை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கும் வித்தி யாசம் இருக்கிறது. பல அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு சென்னை மாநகராட்சியில் தனி விதி என்றும் மதுரை மாநக ராட்சிக்கு தனி விதி என்றும் கூறி பல கோப்புகள் அங்கே நிலுவையில் இருக்கின்றன. இதைச் சீர் செய்வதற்கு இந்த அரசு ராட்சிக்கு தனி விதி என்றும் கூறி பல கோப்புகள் அங்கே முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி சம்பந்த மாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்திற்குண்டான விடை தற்போது என்னிடத்தில் இல்லை. ஆகவே இது சம்பந்தமாக, தனிக்கேள்வி போடுமாறு அறிவுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : தலைவர் அவர்களே, டவுன் பிளானிங்கில் அனுமதி பெறாமல் கட்டப்படுகின்ற கட்டிடங்கள் நகரத்தில் கட்டக்கூடாத இடங்களில் கட்டிவிட்டு, பிறகு நட வடிக்கை எடுக்கின்றபோது மேல் முறையீடு செய்து அதற்கான அனுமதியைப் பெற்று விடுகிறார்கள். அப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டாமல் இருக்க இப்படிப்பட்ட மேல்முறையீடுகளை அரசு தள்ளுபடி செய்யுமா என கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு ஏற்கெனவே section 118 of Town and Country Planning Act பிரகாரம் மேல் முறையீடு செய்யலாம். அந்த மேல் முறையீட்டில் அரசு அந்தக் கட்டிடத்தின் தன்மைக் கேற்ப 'on merit' -ல் அதை அனுமதிக்குமா அல்லது அனும திக்க முடியாது என்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது



1991 செப்டம்பர் 28]

அந்தவகையிலேதான் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறது. மற்றபடி மேல்முறையீடே செய்யக்கூடாது என்று சட்டத்திலே இல்லை. அப்படி சட்டத்திருத்தம் செய்தால்தான் அதற்குண்டான வழிவகை பிறக்கும். ஏற்கெனவே சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால், இது தற்போது தேவை யில்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டுகிற வரை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, ஊழல் மிக்க அதிகாரிகள் கட்டிடம் கட்டி முடித்தபிறகு, நோட்டீஸ் விட்டு அதற்கான பிராசிக்யூஷ னுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே ஆரம்பக் கட்டத்தி லேயே இதைக் களைந்தெடுப்பதற்கு அதிகாரிகள் அறிவுறுத்தப் படுவார்களா என்று அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறி இருந் தேன். இப்படி முறைகேடாக உருவாகின்ற கட்டிடங்கள் மீது ஆய்வின்போதோ அல்லது புகாரின் அடிப்படையின் மீதோ இந்தத் துறை நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றது. கடந்த 3 மாதங்களில் 4 அடுக்கு மாடிக் கட்டிடங்கள், இப்படி முறைகேடாக உருவாக்கப்பட்ட கட்டிடங்கள் இடிக்கப்பட்டிருக் கின்றன. அந்த வகையிலே குறிப்பிட்டு சொல்வாரேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 107 திரு. வெ. தமிழரசு—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

107—

மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்த்தல்.

*140. திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கீழ்தொம்பை, மேல்தொம்பை (கீரைப்பட்டி பேரூராட்சி) பைத்தூர் ஊராட்சியில் பைத்தூர், வாணாவரம், தவளப்பட்டி,

கள்ளுக்கட்டு, முருகம் ஆகிய கிராமங்களில் நூறு சதவிகிதம் மலைவாழ் மக்களே வசிப்பதால் அவர்களை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீரைப்பட்டி பேரூராட்சியைச் சேர்ந்த கீழ்த்தொம்பை, மேல்தொம்பை, பைத்தூர் ஊராட்சியில் பைத்தூர், வாணாவரம், தவளைப்பட்டி, கள்ளுக்கட்டு, முருகம் ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற மலை வாழ்மக்கள் மலையாளி இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் பழங்குடியினர் பட்டியலில் ஏற்கெனவே இடம் பெற்று உள்ளார்கள்.

**திரு. வெ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபாலபுரத்தில் உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்த அனுமதி வழங்கியதற்காகவும் கலியக்கோயிலில் 3 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நீர்த்தேக்க அணை கட்ட . . . (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசு, இந்தக் கேள்வியையொட்டி கேள்வி கேளுங்கள். நீங்கள் பேசும்போது அதையெல்லாம் சொல்லுங்கள். நீங்கள் சொல்லக்கூடிய ஊர்களெல்லாம் இதிலே வரவில்லை. இந்தக் கேள்வி குறித்து துணைக் கேள்வி கேளுங்கள்.

**திரு. வெ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மலைவாழ் பழங்குடியினர் என்ற வகையில் அவர்களை ஏற்கெனவே மலைவாழ்மக்கள் பட்டியலில் சேர்த்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்தப் பகுதி மக்கள் குறைந்த விலையில் அரிசியைப் பெறவும், சலுகை விலையில் உரம் பெறவும், வட்டியில்லாத கடனுதவி பெறவும், லேம்ப் சொசைட்டி அமைத்துச் செயல்பட முயற்சிக்கிறபோது மலைவாழ் மக்கள் பட்டியலில் இடம்பெறவில்லை என்று காரணம் காட்டி அனுமதி மறுக்கப்படுகிறது. இந்நிலையைப் போக்கி, அவர்கள் லேம்ப் சொசைட்டி அமைக்க அரசு உத்தரவிடுமோ என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் மலைவாழ் மக்களாக இருந்தும்கூட மலைவாழ் மக்களுக்குரிய சலுகைகளைத் தர மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் உண்மையிலேயே மலைவாழ் மக்களாக இருப்பின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்த்தொம்பை, மேல்தொம்பை ஆகிய ஊர்களில் உள்ள 670 வாக்குகளில் 3 வாக்குகள் தவிர, அனைவரும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி அமைய வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடும், உள்ள சுத்தியோடும் வாக்களித்துள்ளார்கள். அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்பட, இந்தப் பகுதி மக்கள், மலைவாழ் மக்கள் பெறும் அனைத்து உதவிகளையும் சலுகைகளையும் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு மலைவாழ் மக்களுக்காக தனி சிறப்புத் திட்டத்தைத் தீட்டி நல்ல பல காரியங்களை ஆற்றி வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. தர்மலிங்கம்.

**திரு. கி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி பேதமற்ற சமுதாய நிலையினை ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கையில் ஒரு கேள்வி குறித்து நான் பதில் அறிய விரும்புகிறேன். மலைவாசி பெண்ணை. . (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தர்மலிங்கம், கேள்வி என்னவென்றால், இந்தப் பகுதியில் உள்ள மக்கள் மலைவாழ் மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார். அவர்களுக்கு சில சலுகைகளைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். அதையொட்டி கேள்வி கேளுங்கள்.

[1991 செப்டம்பர் 28

திரு. இ. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இருளர் வகுப்பு ஆண், கலப்பு திருமணம் செய்து கொண்டு உள்ளார். அவருக்குப் பிறந்த குழந்தை பள்ளிக்குச் செல்லும்போது, அந்த மலைவாழ் மக்களுடைய சான்றுடன் அந்தக் குழந்தையை நான் பள்ளியில் சேர்க்க முடியவில்லை. பெண் மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவர் ஜவ்வாது மலையில் முன் வாடி கிராமத்தைச் சேர்ந்த பெண்—மலைப் பகுதியைச் சேர்ந்த பெண்—மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இருளர் வகுப்பைச் சேர்ந்த ஆணை கலப்புத் திருமணம் செய்துகொண்டுள்ளார். (குறுக்கீடு) இல்லை. அது வரவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை . . . .

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது கேள்வியாகக் கேளுங்கள் மலைவாழ் மக்களைச் சேர்ந்த பெண், பிற்படுத்தப்பட்ட ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால், அவர்களுடைய குழந்தையின் நிலை என்ன என்று, கேள்வி கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற நிகழ்ச்சிகளில் அந்த இருவருக்கும் பிறந்த குழந்தைக்கு பெற்றோர்களின் உறுதிமொழியை ஒட்டியே சாதி நிர்ணயிக்கப்படுகிறது என்று சமூக நலத் துறையின் மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனது பெண்ணாகரம் தொகுதியிலே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வ. புருஷோத்தமன், இந்தக் கேள்வி குறிப்பிட்ட ஊர்களைப் பற்றியது. உங்கள் பெண்ணாகரம் தொகுதியைப் பற்றி அமைச்சரிடம் பதில் இருக்காது. இதைப்பற்றிய துணைக் கேள்வி இருந்தால் கேளுங்கள்.



1991 செப்டம்பர் 28]

டாக்டர் வெ. புருஷோத்தமன் : அதைப்பற்றித்தான் 1984-85 ஆம் ஆண்டிலே கொண்டாரெட்டி என்ற பிரிவினரை மலை ஜாதியினர் பட்டியலில் சேர்த்து, அதற்காகச் சான்றிதழ்கள் வழங்கி, அந்தச் சலுகைகளை அனுபவித்த பிறகு, ஏதோ தவறு நடந்து விட்டது என்று அறிந்து அதிகாரிகள், கொண்டாரெட்டி என்ற ஜாதிப் பிரிவினரைப் பழங்குடி என்ற இடத்திலிருந்து பிரித்து, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்ற முறைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். சுமார் 10,000 மக்கள் இந்த கொண்டாரெட்டி பகுதியிலே இருக்கின்றார்கள். இந்த பிரிவினருக்கு மாற்ற அரசு பிரிவினரை மீண்டும் பழங்குடி என்ற இந்தப் பகுதியை (முணியடிக்கப் ஆவன செய்யுமா என்பதையும் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வி தான், மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றிய விவரங்கள் எனக்குத் தெரிவிக்கப் பட்டால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### திவான் பகதூர் சிவராஜ் நூறாவது பிறந்த நாளையொட்டி சிலை அமைக்கப் பெறுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கிய நிகழ்ச்சியைத் தங்கள் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 28

நாளை, பேராசிரியர், தந்தை சிவராஜ் அவர்களுடைய 100-வது பிறந்த நாள். இந்தியக் குடியரசுக் கட்சியினுடைய தலைவராக இருந்தவரும், நீதிக் கட்சியினுடைய பொதுச் செயலாளராக விளங்கியவரும், சென்னை சட்டக் கல்லூரியினுடைய முதல்வராக இருந்தவரும், முன்னாள் முதல்வர் பக்தவச்சலம், இன்றைய மராட்டிய மாநில ஆளுநர் சுப்பிரமணியம் போன்ற பெரிய தலைவர்களுடைய ஆசிரியராக இருந்தவரும், சென்னை மாநகர மேயராக இருந்தவரும், சட்டமன்ற மேலவையிலே நீண்ட நாள் உறுப்பினராக இருந்தவரும், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் அவர்களுடன் மிக நெருங்கிப் பழகியவருமான பேராசிரியர் தந்தை சிவராஜ் அவர்களுக்கு நாளை நூற்றாண்டு விழா. அண்ணல் அம்பேத்கார் அவர்களாலேயே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர். தென் பகுதியைச் சேர்ந்த, சென்னையைச் சேர்ந்த பேராசிரியர் சிவராஜ் அவர்களுடைய இன்றைக்கு அண்ணல் அம்பேத்காரின் கனவுகளைச் செயலாற்றிக் கொண்டிருக்கிற, ஒன்றரை கோடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற, ஒடுக்கப்பட்ட மக்களுடைய உற்ற தோழராக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், நூற்றாண்டு விழாவை அரசு சார்பிலே கொண்டாடுவாரா அதற்காக ஏதாவது நினைவுச் சின்னத்தைக் கொண்டு வருவாரா? கொண்டு வர வேண்டுமென்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து நன்றியோடு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள், திவான்பகதூர் என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவது குறித்து அரசின் முடிவுகள் பற்றிக் கேட்டுள்ளார். நாட்டிற்கும், மக்களுக்கும் உழைத்த நல்லவர்களை இந்த அரசு என்றென்றும் மறவாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் போற்றிப் புகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் பெரியவர் சிவராஜ் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்விற்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர். அவர் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபொழுதுதான் சர். பி. டி. இராஜன்



1991 செப்டம்பர் 28] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

ஐயர் ரோடு என்ற பெயரை சென்னையில் ஒரு சாலைக்குச் சூட்டி, வழக்கறிஞர் தொழிலில் தனக்கு ஆசானாக இருந்தவரைப் போற்றினார். இவர் மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் மறைவிற்குப் பின்னர் 'The Republican Party of India'-வின் தலைவராக, பிரசிடெண்டாக இருந்துள்ளார். மேலும், தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக சிம்லா மாநாடு மற்றும் அமெரிக்காவில் நடைபெற்ற 'Pacific Relations Conference'-இல் எல்லாம் கலந்து கொண்டுள்ளார். பெண்களுக்கு சம உரிமை கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை உறுதியாக வலியுறுத்தியவர், இவரது துணைவியார் திருமதி மீனாம்பாள் சிவராஜ், பல சமூகநல சேவைகள் புரிந்துள்ளார். திருமதி மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த பெண்கள் மாநாட்டில்தான், தந்தை பெரியாருக்கு 'பெரியார்' என்று பெயர் சூட்டப்பட்டது என்பது, இங்கே குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10.30

பெரியவர் சிவராஜ், தான் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாள் அன்றே மறைந்தார் என்பதும் சிறப்பிற்குரியதாகும். அன்னாரின் நூறாவது பிறந்த நாள், 29—9—1991 நாளை வருகிறது. நாளை முதல் பெரியவர் சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் முதல் கட்டமாக, அவர்கள் வாழ்ந்த இராயப்பேட்டையிலுள்ள ஆண்டித் தெரு, நாளை முதல் மேயர் சிவராஜ் தெரு என்று அழைக்கப்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும், பெரியவர் சிவராஜ் அவர்களின் திருவுருவச் சிலை ஒன்றும் சென்னை நகரில் அமைக்கப்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. செ. கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடப் பாரம்பரியம் பற்றி பேசிக் கொண்டிருந்த, கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக அரசு பேராசிரியர் தந்தை சிவராஜ் அவர்களுடைய மூத்த மகன் டி.ஜி. தயாசங்கர் அவர்களை வேலை நீக்கம் செய்தது. ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் தாழ்த்தப்பட்ட

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 23

மக்களுடைய உற்ற தோழியாக இருந்து, பேராசிரியர் தந்தை சிவராஜ் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள் (மேஜையைத் தட்டும் ஒலி) 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக, என்னுடைய இதயபூர்வமான நன்றியை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) கோயம்புத்தூர் மாநகராட்சியிலே தொடர்ந்து மின்சாரம் தடைப்பட்டு வருவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்புகள் திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சியில், தொடர்ந்து மின்சாரம் தடைபட்டு வருவது குறித்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவர அறிக்கை ஒன்று, அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அறிக்கை.

கோவை மாநகராட்சியில் எந்தப் பகுதியில் மின்சாரம் தடைபடுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. இருந்தபோதிலும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் மின்சாரம் தடைபடுவதைத் தவிர்க்க 30 டிரான்ஸ்பார்மர்கள் பல்வேறு இடங்களில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இந்த நிதி ஆண்டில் (1991-92) 10 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படும்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் அறிக்கையில், இந்த ஆண்டில்



1991 செப்டம்பர் 23] [திரு. கே. செல்வராஜ்]

10 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த டிரான்ஸ்பார்மர்கள் எந்தெந்தப் பகுதிகளில் நிறுவப்படும் என தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தெந்தப் பகுதியிலே டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படும் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே, எந்தெந்தப் பகுதியிலே மின்சாரம் தடைப்படுகிறது என்று சொல்லப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இந்த அரசு, ஏற்கெனவே இதுபற்றி ஆராய்ந்து, நான் ஏற்கெனவே கோவைக்குச் சென்றிருந்த நேரத்திலேகூட, நம்முடைய தலைமைப் பொறியாளரையும், மாநகராட்சி ஆணையரையும் அழைத்து, இப்பிரச்சினை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நேரத்திலே, விசாரித்து, கோவையிலே இருக்கிற மின் நிலைமையை சரி செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, இன்றைக்கு அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வேலைகளின் முதல் முயற்சியாக இன்றைக்கு 30 டிரான்ஸ்பார்மர்கள் கோவைக்கு அனுமதிப்பதாக இருக்கிறது. அதிலே முதல்கட்டமாக 10 டிரான்ஸ்பார்மர்கள் போடப்பட இருக்கின்றன. ஆகவே, எந்தெந்தப் பகுதியிலே மின்சாரம் தடைபடுகின்றதோ, அங்கேயெல்லாம் அந்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டு, மின் விநியோகம் ஒழுங்குபடுத்தப்படும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரசபையை, மாநகராட்சியாக மாற்றிய பிறகு, மாநகராட்சிப் பகுதிக்கு புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் இன்னும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடமே யுள்ளது. அந்த இடங்களை மாநகராட்சி மின்சார இலாகாவால் நிர்வகிக்கப்பட முடியாமல் இருக்கிற சூழ்நிலையில், கோவை மாநகராட்சிக்கு இணைக்கப்பட்ட அந்தப் புதிய பகுதிகளை, தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சியினுடைய மின்சார இலாகாவுக்கு ஒதுக்கித் தந்தால், அங்கிருக்கிற குறைகளை, நெருக்கிக்கும் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆதலால், தமிழக மின்சார வாரியத்திட

[திரு. தே. செல்வராஜ்] [1991 செப்டம்பர் 28

மிருந்து, கோவை மாநகராட்சி மின்சார இலாகாவுக்கு அந்தப் பகுதிகளை இணைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. என். அன்னைப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான பிரச்சினை அன்றைக்குக் கோவையிலே என்னிடம் சொல்லப்பட்டது. உடனடியாக 2,000 விளக்குகள் போட வேண்டுமென்று ஆணையாளரிடமும் தலைமைப் பொறியாளரிடமும் பேசி, கோவையின் புறநகர் பகுதிகளிலே அன்றைக்கே போட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடந்து முடிந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே ஐந்து நகரங்கள் இன்றைக்கு நகராட்சியின் பொறுப்பிலே மின்சார நிர்வாகத்தைத் தமிழ்நாட்டிலே வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நகராட்சி நிர்வாகமும், மின்சார வாரியமும் கலந்து பேசி, முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படாமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. தே. ஜனார்தனன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தே. ஜனார்தனன்.

* திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படாமல் இருப்பது குறித்து மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஒரு விவர அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 28] [திரு. டி. எம். செல்வகணபதி]

அறிக்கை.

விழுப்புரம் நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு 1990-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூபாய் 31.00 லட்சத் திற்கு அரசு ஆணை எண் 781, வருவாய்த் துறை, நாள்: 16—5—1990-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி 200 மி.மீ. விட்டமுள்ள இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் நீராதாரமாகத் தேர்வு செய்யப்பட்டது. பில்லூர் கிராமத்தில் ஆனாங்கூர் ஓடைக்கு அருகில் குழாய்க் கிணறுகள் போட முடிவு செய்யப்பட்டது. ஆனால், அக்கிராம மக்கள் குழாய்க் கிணறு போட எதிர்ப்பு தெரிவித்ததால், காவல் துறை யினர் உதவியோடு ஒரு ஆழ்துளைக் கிணறு மட்டும் போடப் பட்டது. இக்கிணறு 123 மீட்டர் ஆழம் போடப்பட்டு அதிலிருந்து நீர், 15.0 குதிரைத் திறன் கொண்ட நீர் மூழ்கி மின் இறைப்பான் மூலம் 50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்சேகரிப்புத் தொட்டிக்கு (drums) எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து 6.4 கிலோ மீட்டர் நீளம் உள்ள நீர் ஊந்துக் குழாய் மூலம் விழுப் புரம் கிழக்குப் பகுதியில் உள்ள 6.0 இலட்சம் லிட்டர் கொள்ள வுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு பகிர் மானக் குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்க திட்ட மிடப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, திட்டம் சோதனை ஓட்டத்தில் (trial run) உள்ளது. இவ்வாழ்துளை கிணற்றின் கொடுதிறன் நிமிடத்திற்கு 1,087 லிட்டர் ஆகும்.

விழுப்புரம் நகராட்சி ஆணையர் இவ்வாழ்துளைக் கிணற்றி லிருந்து கிடைக்கும் நீர் பெண்ணையாற்று நீர் போல் சுவையாக இல்லாத காரணத்தினால், இத்திட்டத்தை பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ள இணங்கவில்லை. இவ்வாழ்துளைக் கிணற்றி லிருந்து எடுக்கப்பட்ட நீர் பரிசோதனை செய்யப்பட்டு குடிப் பதற்கு உகந்தது எனக் கண்டறியப்பட்டது. நகராட்சி ஆணையர் அவர்கள், குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு பராமரித்து. பின். நகராட்சிக்கு ஒப்படைத்தால் நகராட்சி இத்திட்டத்தை பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ளும் என தெரிவித்துள்ளார். எனவே, இத்திட்டம், இன்னும் ஒரு மாத காலம், இவ்வாரியத்தின் பராமரிப்புக்குப்பின், நகராட்சியின் வசம் ஒப்படைக்கப்படும்.

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகர குடிநீர்த் திட்டத்திற்கு அரசு 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, 123 மீட்டர் ஆழத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து, எண்ணெய்ப் பசை இருப்பதனால், அந்தத் தண்ணீரிலே கலந்திருப்பதன் காரணமாக அந்த நீர் சுவையற்றதாக இருப்பதை அரசு அறியுமா என்றும் அந்த சுவையற்ற நீரை நல்ல நீராக மாற்ற அரசு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறு பற்றி மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல், அந்த நீர் பெண்ணையாற்று நீர் போல சுவையில்லாத காரணத்தினாலேயே இத் திட்டத்தைப் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் முன்வரவில்லை. அதன் காரணமாக, இவ்வாழ்குழாய் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீர் பரிசோதனை செய்யப்பட்டு குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது என்று கண்டறியப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக எந்த ஒரு பிரச்சனையும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகரத்திலே இருக்கின்ற மக்கள் அங்கே குடிநீருக்காக ஒவ்வொரு வீட்டிலும் மூன்று அடி ஆழத்திற்குப் பள்ளம் தோண்டி அந்தப் பள்ளத்திலே இறங்கித்தான் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. இந்த அவலநிலையைப் போக்குவதற்கு அங்கே இருக்கின்ற குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும், நகராட்சி அலுவலர்களும் ஒற்றுமையாகச் செயல்படாததுதான் இதற்குக் காரணம் என்று நான் அறிகிறேன். ஆகவே, அவர்கள் ஒற்றுமையாகச் செயல்பட்டால் இந்தப் பிரச்சினை ஒரே தினத்திலே தீர்க்கக் கூடியதாக அமையும் என்று கருதுகிறேன். விவசாயிகள் பயன்படுத்துகின்ற தண்ணீர் கிட்டத்தட்ட 50 லிருந்து 70 மீட்டர் ஆழத்திலிருந்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தண்ணீர் சுவையாக இருக்கிறது. 123 மீட்டர் ஆழத்திற்கு அங்கே எண்ணெய்ப் பசை இருப்பதன் காரணமாகத்தான் சுவையற்றதாக இருக்கிறது என்று மக்கள் சொல்லுகிறார்கள். விவசாயிகள் பயன்படுத்துகின்ற 50 மீட்டரிலிருந்து 70 மீட்டர் ஆழத்திலே கிடைக்



கின்ற நீர் சுவையாக அதே பகுதியிலே இருக்கிறது. இதனை அரசு அறியுமா? மேலும், அரசு 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதிலே ரூ. 20 இலட்சம்தான் செலவாகி இருக்கிறது. மீதம் 11 இலட்சம் பணம் அங்கேயிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு அந்த விவசாயிகள் பயன்படுத்துகிற, 70 மீட்டர் ஆழத்திலேயே ஆழ்குழாய்க் கிணறு அமைத்தால் அந்த நீர் சுவையாக இருக்கும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இதனை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக விவரமான ஆய்வு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இ. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இ. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1986-87) அளித்த முப்பத்தேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் பதினான்காவது அறிக்கை;

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் பதினைந்தாவது அறிக்கை;

(3) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) தெரிவிக்கப்பட்டுள்ள பொது நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளை இறுதி செய்வதில் காலதாமதம் மற்றும் பொது நிறுவனங்களினால்

[திரு. கி. தர்மலிங்கம்] [1991 செப்டம்பர் 28

முற்பகல் 10.40

ஏற்பட்ட இழப்புகள் ஆகியவை தொடர்பான பத்தி பற்றிய குழுவின் பதினாறாவது அறிக்கை மற்றும் (4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) தமிழ்நாடு மின் வாரியம், மின் கட்டணம் விதித்தலும், வசூலித்தலும் தொடர்பான பத்திகள் மீதான குழுவின் பதினேழாவது அறிக்கை ஆகியவற்றைப் பேரவைக்கு அளிக்கிறேன் :

5. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு, ஆய்வு செய்தல், 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1991) மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அமளிக் காடாக மாற்றியவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நாடறியும். விடுதலைப் புலிகளைத் தமிழகத்திலே ஊடுருவ விட்டு ஆயுதக் கலாச்சாரத்தைத் தமிழகத்திலே பரப்பி, ஏ.கே. 47 போன்ற துப்பாக்கிகள் கிடைக்கும் மலிவு விலைச் சந்தையாகத் தமிழகத்தை மாற்றிய அவப்பெயருக்கும் முழுக்க முழுக்க சொந்தக்காரர்கள். மலிவு விலை மதுவைத் தமிழகத்திலே அரசின் பெயரால் அதிக விலைக்கு விற்ற தி.மு.க. அரசின் முன்னாள் முதல்வர்



1981 செப்டம்பர் 28] [திரு. சி. ஞானசேகரன்]

என்பதுதான் நாடறிந்த உண்மை. விடுதலைப் புலிகளைத் தமிழகத்திலிருந்து வேரறுக்க வேண்டுமென்று வீர சபதம் ஏற்று இங்கே செயலாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முயற்சிகளை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும். எனவே விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் அ.இ.அ.தி.மு.க.-வோடு கூட்டணி வைத்து தி.மு.க.-வை தமிழகத்திலிருந்து அறவே துடைத்து எடுக்க வேண்டுமென்று வீர சபத முழக்கம் இட்டார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக அரியணையில் ஏற்ற வேண்டும், அழகு பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் இங்கே ஸ்ரீபெரும்புதூரிலே தன்னுடைய இன்னுயிரை நீத்தார்கள்; ரத்தத்தைச் சிந்தினார்கள். அப்படிப்பட்ட அந்த உத்தமத் தலைவனுக்கு நினைவிடம் அமைப்போம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டார்கள்.

ஆனால் பின்னாலே மத்திய அரசு அதே இடத்தில் நினைவிடம் அமைக்க, இங்கே, அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அந்த கமிட்டியிலே உறுப்பினராகவும் இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே நினைவிடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட அந்தப் பணத்தைக் கொண்டு ஸ்ரீபெரும்புதூரை ஒரு சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும். அதைப்போல 3 ஸ்டார் ஹோட்டல் அங்கே நிறுவ வேண்டுமென்று நான் முதல்வர் அவர்களுக்கு அவைத் தலைவர் மூலமாக வேண்டுகோளாக விடுக்கிறேன்.

அதைப்போல, பல பேருக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று தமிழகத்தில் சிலையை அமைத்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி உங்களை முதலமைச்சராக ஆசனத்தில் அமர வைத்து அழகு பார்க்க வேண்டுமென்று எண்ணியவர்கள். அதனாலே இங்கே தமிழகத்திற்கு பலமுறை தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்தார்கள். அப்படிப்பட்ட அந்த உத்தமத் தலைவனுக்கு, உன்னதத் தலைவனுக்கு நீங்கள் ஸ்ரீபெரும்புதூரிலேயும், வேறு இடத்திலே... மன்னிக்க வேண்டும். இங்கே இருக்கிற செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு முன்னாலே இருக்கிற கடற்கரை ஓரத்திலேயும் எங்களுடைய அருமைத் தலைவனுக்கு ஒரு

[திரு. வி. ஞானசேகரன்] [1991 செப்டம்பர் 28

நிலையை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சேல்ஸ் டாக்ஸை விவசாய விளைபொருளுக்குக் குறைத்திருக்கிறார்கள். இங்கே மிளகாய் போன்றவற்றிற்கு எல்லாம் குறைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெல்லத்தைப் பொறுத்தவரையில் சேல்ஸ் டாக்ஸ் ஷெட்யூல் வேறு ஒரு இடத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிற காரணத்தால், வெல்லத்திற்கான சேல்ஸ்டாக்ஸ் குறைக்கப்படாமல் எப்படியோ விடுபட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே, வெல்லத்தையும் விவசாயப் பொருள் என்று கருதி 6 பெர்சன்டிலேயிருந்து 4 பெர்சன்ட் என்ற அளவுக்கு பர்சேஸ் டாக்ஸைக் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த அவையின் வாயிலாக நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

முற்பகல் 10-45 )

அதைப்போல மதுவைத் தமிழகத்திலேயிருந்து விரட்டியடித்த —ஓரளவுக்கு அல்ல, முழுமையாகவே விரட்டியடித்து—சாதனை படைத்திருப்பவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருந்தாலும், மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டிய தமிழகத்திலே, இப்போது இருக்கக்கூடிய தமிழ்நாடு ப்ரொஹிபிஷன் ஆக்ட் என்பதிலே சில விதிகளை மாற்றி அமைத்தால்தான் முழுமையான மதுவிலக்குச் சட்டத்தை நாம் இந்த இடத்திலே செயல்படுத்த முடியும். ஆகவே மதுவிலக்குச் சட்டத்திலே, ப்ரொஹிபிஷன் ஆக்ட்-லே இருக்கக்கூடிய சில குற்றங்களை, ஜாமீனில் விடக்கூடா குற்றம் என்றும் 'நான்-பெயிலபிள்' என்றும் அதேபோல இருக்கிற குற்றத்திற்கு கண்டிப்பாக தண்டனை வழங்கவேண்டும் என்ற ஒரு திருத்தத்தை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கொண்டுவரவேண்டும் என்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள்தான் காய்கறிகளை தமிழகம் முழுக்க வாங்கி குழந்தைகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்று ஒரு அரசாணை இன்று தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் சில மாவட்டங்களிலே [illegible]



1991 செப்டம்பர் 28] [திரு வி ஞானசேகரன்]

காய்கறிகளை வாங்கி விநியோகிக்கவேண்டும் என்று இன்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் மாற்றியமைத்து தமிழகம் முழுவதிலும் ஒரே யூனிபார்ம் பாலிசியில் செயல்பட, அமைப்பாளர்கள்தான் காய்கறிகளை சத்துணவுக் கூடங்களுக்கு வாங்கி விநியோகம் செய்ய வேண்டும் என்பதைச் செயல்படுத்தவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நிறைவேற்றுமாறு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களை நான் அவை முன்னவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரிலே தண்ணீர் பிரச்சினை இன்று தலைவிரித்தாடிக் கொண்டு இருப்பதை நாடு அறியும். இந்த அவையிலேகூட நான் மூன்று முறைகள் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். ஆகவே குடிநீர் வடிகால் வாரிய அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய வேலூருக்கு 3 கோடி ரூபாயை எப்படியாவது, இருக்கக்கூடிய பொது நிதியிலிருந்து ஒதுக்கி, வேலூர் பிரச்சினையைத் தீர்க்கவேண்டி, பெண்ணையாற்றுத் தண்ணீரை வேலூருக்குக் கொண்டுவருவதற்கான நிதியை இந்த ஆண்டே ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் அன்போடு வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் பேரவையிலே பேசுகிறபோது இந்த அவையிலேகூட சொன்னேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் இருந்து பதில் எதிர்பார்த்தேன். சிறையிலே, மத்திய சிறைச்சாலைகளிலே இன்று லேபர் மிகவும் சீப் ஆக இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய கன்விக்டட் பிரிசனரிடம் ரூபாய் 2 கொடுத்து ஒரு நாளைக்கு வேலை வாங்குகிறார்கள். அப்படி இரண்டு ரூபாய் கொடுத்து சீப் லேபரை பெறுகிற நம்முடைய அரசு அந்த இடத்திலே பல தொழில்களை இன்று செய்து வருகிறது. அப்படி உருவாக்கப்படுகிற பொருள்கள் எல்லாம் அரசு அலுவலகங்களுக்கே விற்கப்படுகின்றன. ஆனால் அரசு அலுவலகங்கள் மீண்டும் அந்த சிறைத் துறைக்கு பணம் செலுத்துகிறதா என்றால் கிடையாது. அவர்கள் பணத்தைச் செலுத்தாமல் பேப்பர் அட்ஜஸ்ட்மெண்ட் என்று மட்டும் வைத்துக்கொண்டு, கொடுக்க வேண்டிய பணத்தையெல்லாம் ரைட் ஆப் செய்துவிடுகிறார்கள். இதையெல்லாம் அறவே நீக்கவேண்டி, சிறைத் துறைக்கும் வருவாய் கிடைக்கிற வகையிலே அதேபோல சிறைத் துறையிலே இருந்து கொண்டிருக்கின்ற அந்த கன்விக்டட் பிரிசனரும் பயன் அடையக் கூடிய வகையிலே தொழில் நிறுவனம் ஒன்றை மாண்புமிகு சட்ட

அமைச்சர் அவர்கள் உடனே நிறுவவேண்டும். எனவே இருக்கக் கூடிய கன்விக்டட் பிரிசனருக்கு கொடுக்கக்கூடிய பணத்தையும் இன்றே கூட்டி கொடுக்க வேண்டும் என்று அவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழகத்தில் இன்று 'வேலை' மாநகரம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு ஏற்கெனவே இந்த அவையின் மூலமாகத் தெரிவித்திருக்கிறேன். வேலூரிலே மழை பெய்தால் அங்கே காலடி வைக்கக்கூட முடியாது. பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாமல் பல ஆண்டுகளாக 'வேலை' மாநகரம் நாற்றமடித்துக் கொண்டிருக்கிறது. தண்ணீர் பிரச்சினையை முதலிலே தீர்த்துவிட்டு பாதாள சாக்கடைத் திட்டத்தை உடனடியாக நீங்கள் கொண்டு வரவேண்டும் என்று அவைத் தலைவர் அவர்கள் மூலமாக பணிவோடு கேட்டு, இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. விசுவநாதன்.

**திரு. ஜி. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 8,469 கோடி ரூபாயை இங்கே வழங்கச் சொல்லிக் கேட்டிருக்கிறார்கள். நாம் எல்லோருக்கும் தெரியும். நிதி அமைச்சரை நம்பி எத்தனை ஆயிரம் பணத்தை வேண்டுமானாலும் கோடிகளிலே கொடுக்கலாம். மிகவும் சிக்கனமானவர். அதுபோலவே, நிதித் துறைச் செயலாளர் அவர்களும் அதைவிட சிக்கனமானவர். எனவே இருவரையும் நம்பி இந்தப் பணத்தை ஒப்படைக்கலாம். ஆனாலும் மாநிலத்திலே நிதி அதிகாரம் இல்லாமல் இருக்கிறது என்பதை நீண்டகாலமாக நாம் சொல்லி வந்தாலும், 43 ஆண்டுகள் ஆன பின்னாலும், அதிலே மாற்றம் ஏற்பட்டிருப்பதாக சுதந்திரத்திற்குப் பிறகு எனக்குத் தெரியவில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை வேடிக்கையாகச் சொன்னார்கள். மத்திய அரசு மாநில அரசு என்று இரண்டையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மாநில அரசுக்கு அதிகாரமே இல்லை என்று குறிப்பிட்டு, உதாரணமாகச் சொன்னார்கள்.





(முற்பகல் 10-50)

கார்த்திகேயனும் கலெக்டர், கந்தசாமியும் கலெக்டர். கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர். கந்தசாமி மில் கலெக்டர். நம்முடைய மாநில அரசு கந்தசாமி மாதிரி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அண்மையிலே நடைபெற்ற சம்பவங்கள், உலக முழுவதும் நடைபெறுகின்ற சோவியத் யூனியனிலே நடைபெற்றிருக்கின்ற சம்பவங்கள், யூகோஸ்லேவியா நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்களுக்குப் பிறகு நாம் மிக மிக எச்சரிக்கையாக இருந்தாக வேண்டும். மத்திய அரசு மாநில அரசை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதையும், எவ்வாறு நடத்தக் கூடாது என்பதற்கும் இந்த நாடுகள் இன்றைக்கு நமக்கு உதாரணமாக நடந்து கொண்டிருக்கின்றன. மத்திய அரசைப் பொறுத்தவரையில், எந்தெந்த வரி போட்டால் அதிகமாகப் பணம் கிடைக்குமோ, அது அவ்வளவையும் மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. எவ்வளவு தான் போட்டாலும், சதவிகிதத்தை அதிகரித்தாலும், பணமே வராத நிதி ஆதாரங்கள்தான் மாநில அரசுகளிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Professscr peer said I quote—"..Both Central and Regional Government must keep under their own independent control financial resource sufficient to perform its exclusive functions...."

ஆக, தனித் தனியாக மாநில அரசுகளுக்கு என்றும், மத்திய அரசுக்கு என்றும் நிதி ஆதாரங்கள் இருக்க வேண்டும். ஆனால் மற்ற நாடுகளைப் போல, அமெரிக்க ஐக்கிய நாடுகளில், யு.எஸ்.ஏ.யில், அங்கே பல நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் நம் நாட்டிற்கு மட்டும் அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. அங்கே Excise Duty, Export Duty, தவிர மற்ற எல்லாவற்றையும் Divisible pool என்று அதிலே சேர்த்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே மட்டும் இன்னும் அது அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. மாநிலங்கள் அமைத்த கமிஷன்களானாலும், மத்திய சர்க்கார் அண்மையில் அமைத்த சர்க்காரியா கமிஷன் ஆனாலும் அவர்கள் சொல்லியிருக்கிற பரிந்துரைகளைக்கூட இன்னும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறது. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால் முன்னைய அரசு அமைத்த ராஜமன்னார் குழு Export Duty, Customs Duty போன்றவைகளையும், அதுபோல

[திரு. ஜி. விசுவநாதன்] [1991 செப்டம்பர் 28

Corporation Tax கம்பெனிகள் போடுகின்ற வருமான வரியையும், மாநிலங்களுக்கு அதில் பங்கு அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னது மத்திய அரசாலே இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் சொன்னது மட்டுமல்ல அண்மையில் தன்னுடைய சிபாரிசை அளித்த சர்க்காரியா கமிஷன்

"... By an appropriate amendment to the Constitution the net proceeds of the Corporation Tax may be made permissibly shareable by States....

என்று அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, மத்திய சர்க்கார் ஏற்படுத்திய சர்க்காரியா குழுவும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை உண்மையிலேயே மத்திய அரசு இப்பொழுதாவது கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அண்மைக் காலமாக ரேடியோ மற்றும் டெலிவிஷன் மூலம் நமக்கு நிறைய வருமானங்கள் வருகின்றன. அந்த வருமானத்தில் மாநிலங்களுக்கு பங்கு கிடையாது. அதிலும் பங்கு கொடுக்க சர்க்காரியா கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது.

அவர்களே பினான்ஸ் கமிஷனை, 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கிறார்கள். அவர்களுடைய பரிந்துரைகளைக்கூட மத்திய சர்க்கார் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

"...The Union Government should signify its acceptance of the Finance Commission's recommendations in regard to the grant in lieu of the Railway Passenger Fare Tax..

என்று சர்க்காரியா கமிஷனில் சொல்லியிருக்கிறார்கள். ஆக, அளவிற்கு மீறிய அதிகாரங்களை மத்திய சர்க்கார் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, ஆனால் தேவையான போது அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் இருக்கிறது.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், காவிரி நீர் தகராறு இவ்வளவு பெரிய அதிகாரங்களையும் தன்னிடத்திலே வைத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு அந்த காவிரி நீர் தகராறை, இத்தனை ஆண்டுக் காலம் ஆகியும் தீர்த்து வைக்காமல் போனது துரதிருஷ்டவசமானது. ஆக, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, மாநிலங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை மத்திய அரசு அளிக்குவதற்குத் தயாராக வேண்டும்.



1991 செப்டம்பர் 28] [திரு. ஜி. விசுவநாதன்]

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஏற்கெனவே மத்திய அரசு ஒரு சிபாரிசை ஒத்துக்கொண்டிருக்கிறது. அதாவது எந்தெந்த மாநிலங்கள் இங்கே மதுவிலக்கைக் கொண்டு வருகின்றனவோ அந்த மாநிலங்களுக்கு ஏற்படுகிற நஷ்டத்தில் பாதியை 5 ஆண்டுகளுக்குக் கொடுப்போம் என்று ஏற்கெனவே ஒரு சர்க்குலர் ஒன்றை, சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அதை மத்திய அரசு இன்னும் செயல் படுத்தாமல் இருக்கிறது. அதை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அமெரிக்காவில் இருப்பதுபோல (customs) (Excise) தவிர மற்ற எல்லா வரிகளிலும் மாநிலங்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வதற்கு மத்திய சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசியல் ரீதியாக விடுதலைப் புலிகளை ஒடுக்கி விட்டார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே இருக்கிற வெள்ளை யானைகளையும் அவர்கள் ஒடுக்கியாக வேண்டும். நான் குறிப்பிட விரும்புவது, நம்முடைய பொதுத் துறை நிறுவனங்களைதான் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ 1671 கோடிக்கு அதிலே முதலீடு செய்திருக்கிறோம். அதிலிருந்து நமக்கு எவ்வளவு வருகிறது என்று பார்த்தால் ஆண்டுக்காண்டு நஷ்டம் தான் வந்துகொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10.55)

60 கோடி, 70 கோடி என்று நஷ்டத்தை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இரண்டு கம்பெனிகளை எடுத்துக் கொண்டால் போதும். சதர்ன் ஸ்டாக்சுரல்ஸ் லிமிடெட் என்ற கம்பெனி தனியாருக்கு சொந்தமாக இருந்தது, அதை அரசாங்கம் 1971-ல் எடுத்துக்கொண்டது. இதுவரையில் அரசாங்கம் பல கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறது. கடன் மட்டும் 7.73 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. அதனுடைய விளைவு என்னவென்றால் 1989-90-ல் அந்தக் கம்பெனிக்கு 7 கோடி ரூபாய் நஷ்டமாகியிருக்கிறது ஒரு சிக்

[திரு. ஜி. விசுவநாதன்] [1991 செப்டம்பர் 28

ஷூனிட்டை எடுத்து, அரசாங்கமே சிக் ஆகிவிடுமோ என்ற அள
வுக்கு இந்த கம்பெனிக்கு வருடந்தோறும் பணத்தைக்
கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஷேர் கேப்பிடல் கொடுக்
கிறோம், கடனாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தக்
கம்பெனியில் வருடந்தோறும் நஷ்டம் ஏற்பட்டு, மக்களிடம் வரி
போட்டு, அந்தப் பணத்தை அந்தக் கம்பெனியிடம் கொடுத்துக்
கொண்டிருக்கிறோம்.

இன்னொரு கம்பெனி, டான்சி. 1965-லே துவக்கப்பட்டது
இதுவரை அரசு இந்தக் கம்பெனிக்கு 76 கோடி ரூபாயைக் கொடுத்
திருக்கிறது. மார்ச் 1990 வரை இந்தக் கம்பெனியினுடைய அக்யு
முலேட்டட் லாஸ், மொத்த நஷ்டம் 27 கோடி ரூபாய் என்று குறிப்
பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பணத்தைக் கொடுத்து, வருடா
வருடம் அவர்கள் நஷ்டத்தையும் எடுத்துக்கொண்டு, அந்த நஷ்டத்
திற்காக மக்கள் மீது வரி போட்டு, அதைக் கொடுக்க வேண்டிய
அவசியமில்லை. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்
இன்றைக்குத் துணிச்சலாக முடிவெடுத்திருக்கிறார்கள். அதை
நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்த
கம்பெனிகள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றனவோ
அவற்றை விற்றுவிட அல்லது வேறு வழியாகச் செய்ய அரசு
முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேப்போல, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த
வரையில் பல கழகங்கள் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன.
அதற்கு முக்கியமான காரணம் பஸ் கட்டணத்தை நாம் ஏற்றாமல்
இருக்கிறோம். பக்கத்தில் இருக்கிற மாநிலங்களில் பஸ் கட்டணம்
அதிகமாக இருக்கும்போது, கேரளாவிலே ஒரு கிலோ மீட்டருக்கு
15 காசு வாங்கும்போது, தமிழகத்தில் 10½ காசுதான் இன்னும்
வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதை உடனடியாக உயர்த்தி
போக்குவரத்துக் கழகங்களின் நஷ்டத்தைக் குறைக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் குறைக்க முடியுமே தவிர
போக்குவரத்துக் கழகங்களில் லாபத்தை எதிர்பார்க்க முடியுமா
என்பது சந்தேகம்தான். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில்
13,500 பஸ்கள் போக்குவரத்துக் கழகங்களில் ஓடிக் கொண்டிருக்
கின்றன. இவற்றைக் குத்தகைக்குக் கொடுத்தால்கூட 50 கோடியி
லிருந்து 60 கோடி ரூபாய் கிடைக்கும். இதில் அரசு ஒரு முடி
வெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓராண்டுக் காலம்



1991 செப்டம்பர் 28] [திரு. ஜி. விசுவநாதன்]

அவகாசம் கொடுத்து, அவர்களால் நஷ்டத்தை ஈடு கட்ட முடிய
வில்லை என்று சொன்னால் அரசாங்கம் ஒரு முடிவெடுத்து,
விற்பது என்று முடிவெடுத்தால் 700 கோடியிலிருந்து 1,000 கோடி
ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கும். அதைப்போல அரசாங்கத்
தின் நிலங்கள் பல இடங்களில் வீணாகிக் கொண்டிருக்கிறது.
ஒன்று அவற்றை விற்கலாம். வேண்டாமென்று முடிவெடுத்தால்,
நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுத்தால் பல கோடி ரூபாயை
அதிலிருந்து பெற முடியும்.

அதைப்போல, இப்போதிருக்கும் பாண்டு வில்லைகள்,
ரெவின்யு ஸ்டாம்பஸ் 10 பைசா 20 பைசா என்று இருக்கிறது.
ஆனால் நாடு முழுவதும் பல லட்சக் கணக்கில் இவற்றைப்
பயன்படுத்துகிறார்கள். எனவே 10 பைசா என்பதை 20 பைசா
என்றோ 25 பைசா என்பதை 50 பைசா என்றோ கூட்டினால் பல
கோடி ரூபாயை அதிலிருந்து அரசு பெற முடியும். அதையும்
மாண்புமிகு புரட்சித் தலைவி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு விற்பனை வரியிலே, வருமான
வரியிலே நிறைய ஏய்ப்புகள் இருக்கின்றன. இவற்றைத் தடுப்
பதற்கு நகர அளவில் அல்லது ஏரியா அளவில் உயர் மட்ட
குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, நமக்கு அதிகமாக நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டி
ருப்பது மின்சாரத் துறை. இதிலே நாம் ஏற்கெனவே முடிவெடுத்
திருக்கிறோம். நமக்கு முன்னாலே இருந்த புரட்சித் தலைவர்
அவர்கள் சிறிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தார்கள்.
வேண்டுமென்றே போட்டி போட்டுக்கொண்டு பின்பு வந்த தி.மு.க.
அரசாங்கம் பெரிய விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்று
அறிவித்துவிட்டுப் போய்விட்டார்கள். நான் ஒரு யோசனை
சொல்ல விரும்புகிறேன். இலவச மின்சாரம் தொடரட்டும். இலவச
மின்சாரம் என்று இருப்பதால் இன்றைக்கு மின்சாரம் வீணாக்கப்
படுகிறது. அதைத் தடுப்பதற்காகவும், அதிலேயிருந்து வருமானம்
வருவதற்காகவும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இலவச மின்
சாரத்தைக் கொடுத்துவிட்டு, அதற்கு மேலே இருப்பதற்குக்
கட்டணம் விதிக்க வேண்டுமென்ற யோசனையை நான் சொல்ல
விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டம் பாலாற்றை நம்பி இருக்கிறது. பல ஆண்டுகளாக அங்கே நீர் வராத காரணத்தால் நிலத்தடி நீரை நம்பியிருக்கிற பக்கத்திலே உள்ள நகரங்களும், பேரூராட்சிகளும், ஊராட்சி மன்றங்களும் குடிநீருக்குக் கூட இன்றைக்குக் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக, பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பாலாற்றின் குறுக்கே பல இடங்களில் கர்நாடக அரசு தடை ஏற்படுத்தியிருக்கிறது. அதை எப்படி கொண்டுவருவது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

அதேபோல, உபரி நீர் வருகிற நேரத்தில் காவிரியிலிருந்து பாலாற்றுக்குத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டும். கொண்டு வர முடியும். ஏற்கெனவே அதைப்பற்றி யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஒகேனக்கல் பகுதியிலிருந்து உபரி நீர் வந்து கடலில் போகிற நேரத்தில் அதைத் தடுத்து பாலாற்றுக்கு கொண்டுவர வழிகள் இருப்பதாக பொறியாளர்கள் தெரிவித் திருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, எங்களுடைய மாவட்டத்தில் பல்வேறு அணைகள் கட்டக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டு இருக்கின்றன. அவைகள் அனைத்தையும் பேசுவதற்கு நேரம் இல்லை என்றாலும், அதை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய வருமானத்தைப் பெருக்குகிற வகை யிலும் ஆண்டுதோறும் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற இந்த கார்ப்பரேஷன்களுக்கு ஒரு முடிவு கட்டுவதற்கும் துணிச்ச லான ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். தொழில் வளர்ச்சியில் நாம் 2 அல்லது 3-வது இடத்தில் இருக்கிறோம். நம்முடைய தமிழகம் தொழில் வளர்ச்சியில் முதல் இடத்திற்கு வரவேண்டுமென்று தன்னுடைய விருப்பத்தை தெரி வித்தது மட்டுமல்ல, அதற்கு எல்லாவித காரியங்களையும் நம் முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் பணத்தை விரயம் செய்து கொண்டு





இருக்கிற இந்த நிறுவனங்களைப்பற்றி நாம் ஏதாவது ஒரு முடி வெடுத்து அந்த நஷ்டத்தை நிறுத்தினாலொழிய தொழில் வளர்ச்சியில் நாம் முதலிடத்திற்கு வரமுடியாது. எனவே அதைச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். சிக் யூனிட் எதுவாக இருந்தாலும், உடனடியாக மூடிவிடுத்து, அவைகளை அரசாங்கத்திலிருந்து விடை கொடுத்து அனுப்பு வதே நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீசைப் பொறுத்தவரையில் நாம் நிறைவுக்கு பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவியுடைய அரசு 80 கோடி ரூபாயை போலீசை நவீனப்படுத்துவதற்கு, கருவிகள் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுக்கவில்லை என்றாலும், நிறைவுக்கு நம்மிடம் உள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து அவர்களுக்கு நவீன கருவிகளை வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். காவல் நிலையங்களுக்குச் சென்றால் அங்கே எல்லாமே பற்றாக்குறைதான். போனவுடனே அவர்கள் முதலில் கேட்பது வெள்ளைக் காகிதம் வாங்கித் தாருங்கள் என்பார்கள் அல்லது உடைந்து போன நாற்காலி இருக்கும். நான் ஒரு முறை பெரிய அதிகாரியைப் பார்த்துக் கேட்டேன். அந்த நாற்காலியைக் கூட வாங்கித் தர முடியாதா என்று கேட்டதற்கு, அந்த நாற்காலியை ரிப்பேர் செய்வதற்கு வேண்டுமானால் டி.ஜி.பி.க்கு அதிகாரம் இருக்கிறதே தவிர புதிதாக நாற்காலி வாங்கித் தர அவருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னார். அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய காவல் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வேண்டியவற்றை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திமிரி, கலவை, வாழைப்பந்தல் போன்ற காவல் நிலையங்கள் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட் டத்தில் இருந்தாலும், அதனுடைய கட்டுப்பாடு பக்கத்து மாவட்டமான சம்புவராயர் மாவட்டத்தில்தான் இருக்கிறது. அதை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, ஆற்காடு வட்டத்தில் காவனூரில் ஒரு புறக்காவல் நிலையமும், அனைக்கட்டில் ஒரு காவல் நிலையமும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போளூரில் நீயமனைப்பு நிலையம் இருக்கிறது, வாகனம் இல்லை. அதைச் செய்து தர வேண்டும். சென்னையில் ஸ்டேஷனில் வைத்து இருக்கிறது. ஐபிஎஸ் சிறப்பு அதிகாரிகள்

இருக்கிறது. புதிய வண்டியாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி கே. எம். கலைச்செல்வி.

* திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக மக்களின் காவல் தெய்வமாக பவனிவரும் புரட்சித் தலைவி அவர்களையும், இயக்கத்தையும் அழித்தேவிட வேண்டும், ஒழித்தே விடவேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு, காருள்ளளவும் கடலுள்ளளவும் நாமேதான் இந்த நாட்டுக்கு ராஜாக்கள் என்று கொக்கரித்துக் கொண்டிருந்தவர்களின் கொட்டத்தை அடக்கி, மட்டந்தட்டி, தடைக்கற்களை எல்லாம் படிக்கல்லாக மாற்றி இன்று வெற்றி உலா வந்து கொண்டிருக்கும் எங்கள் உயிரினுமினிய புரட்சித் தலைவியை ஓராயிரம் கொம்பனாலும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

"வெண்ணிலவில் தீப்பரவி கருகக் கூடும்,
வெயில் வட்டம் ஓர் நாளில் இருளக்கூடும்,
தண்ணீரில் தாமரையும் வேகக்கூடும்
தரைமகளும் அலை மகளும் மூழ்கக் கூடும்
விண்பரப்பு விரிசலுற்று விழக்கூடும்
வீசுகின்ற காற்றசைவும் நிற்கக்கூடும்

பண்ணாத கொடுமையெல்லாம் பண்ணினாலும் எங்கள் பார் புகழும் அண்ணா தி.மு.க.விற்கு அழிவே இல்லை" என்பதை ஐந்தரைக் கோடி தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் செல்வாக்கை மக்கள் இதயங்களில் சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும்போது, தர்மதேவதையின் கொலு மண்டபத்திலே துச்சாதனர்களின் அசுரத்தனங்கள் தூள் தூளாக்கப்பட்டிருக்கின்றன. இது காலத்தின் கட்டாயம். எங்கெல்லாம் தர்மம் அழிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் புரட்சித் தலைவி தோன்றுவார் என்பது இந்த நாட்டின் நியதி என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





முற்பகல் 11.05

"[illegible] தலைப் பறவையாக மாறுவதற்கு வாய்ப்பே கிடையாது" என்பதை நமது கழகக் காவல் தெய்வம் நிரூபித்தாகிவிட்டது. "ஊர்க்குருவிகள் எல்லாம் பருந்தாக முடியாது" என்பதையும் இந்த நாட்டு மக்கள் புரட்சித் தலைவியின் வெற்றியின் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இப்படி உலக வரலாற்றிலேயே எந்த ஒரு இயக்கமும், எந்த இயக்கத்தை வழி நடத்திய தலைவியும் இப்படிப்பட்ட இமாலய வெற்றியைப் பெற்றதில்லை என்ற வரலாற்றைப் படைத்து வரலாற்றுக்கே மெருகூட்டும் வண்ணம் ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் முதல் அமைச்சர் என்ற பெருமையினைப் பெற்றவர் நமது இதய தெய்வம் அவர்கள்.

இப்படிப்பட்ட என் உயிரினும் இனிய தலைவிக்கு என் ஒவ்வொரு உயிரணுவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. என் நன்றியை அவர் மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். உயிருள்ள வரை புரட்சித் தலைவியின் புகழ்பாடி மகிழ்வதில் பெருமையடைகிறேன் என்பதையும் என் நெஞ்சாரக் கூறி இப்படிப்பட்ட புரட்சித் தலைவி சுட்டிக்காட்டிய என்னை இது வரையில் எவருக்கும் அளிக்காத அதிக அளவு வாக்கினை அளித்து, துச்சாதனனை வீழ்த்திய தொகுதிவாழ் நல்லிதயங்கள் ஒவ்வொருவருக்கும் என் இதயங்கனிந்த நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

இதய தெய்வம் முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் இந்த பத்தாவது சட்டமன்றப் பேரவையின் பேரேட்டிலே என் பெயரையும் பதித்து, ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்து அரும்பணியாற்றிய இம்மாமன்றத்திலே என் குரலும் ஒலிக்கக் காரணமாயிருந்த என் இனிய தலைவிக்கு மீண்டும் மீண்டும் நன்றியைக் காணிக்கையாக்கி என் கன்னி உரையை நிகழ்த்துகிறேன்.

இதுவரையில் எனக்கு ஆளுநர் உரையின் மீதோ, நிதிநிலை அறிக்கையின் மீதோ, மானியக் கோரிக்கையின் மீதோ வாய்ப்புக் கொடுக்காததால், இப்போது என்னுடைய தொகுதியின் பிரச்சினையைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லதரசு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப அமைந்தது இந்த அரசு. "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற வரிகளுக்கு இலக்கணம் வகுக்கப் போகும் சாதனை அரசு இது. "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். ஆக இப்படிப் பட்டவைகள் இதுகாறும் நிழலாயிருந்து இப்போது நிஜமாகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் எங்கள் காட்பாடி தொகுதி யின் பிரச்சினைகளையும் எடுத்து வைக்க விழைகிறேன்.

காட்பாடித் தொகுதியில் பொதுப்பணித் துறை சம்பந்தமான பணிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டால் தொகுதியின் முக்கிய பிரச்சினைகள் தீர்ந்த மாதிரிதான். முதலாவதாக, காட்பாடியில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை மாற்றியமைக்க முதற்கட்டச் செலவிற்கான தொகை ஒதுக்கப்பட்டதாக அறிகிறேன். புரட்சித் தலைவர் காலத்திலே அதற்கு அதிகப்படியான அளவிலே நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நாளுக்கு நாள் அதன் பலம் குறைந்து கொண்டே வருகின்றது என்று பொறியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள். எனவே, நம்முடைய பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் தொடக்கியப் பணியை பிறகு வந்தவர்கள் விட்டுவிட்டதால் அதை மீண்டும் துவங்கவைத்து நிறைவேற்றித் தந்து அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் திருக்கரங்களால் நிறைவு விழா நடத்த வேண்டுமென்று மெத்தப்பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ராஜாதோப்பு கானாற்றின் அருகே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கக்கோரும் திட்டம். இந்தத் திட்டம் 27.50 மில்லி கன அடி கொள்ளளவு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் 500.05 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ளது. பாசனம் பெறாது விடுபட்ட மீதியுள்ள 42 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 251 இலட்சமாகும். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 274 டன் கூடுதல் உணவு உற் பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத் திற்கு 1991—1992 ஆம் ஆண்டில் 50 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. அதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மேலும் தேவைப்படும் நிதியையும் ஒதுக்கி ராஜாதோப்பு அணையை விரைவிலே கட்டி முடித்து நிறைவு விழாவை நடத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, மோர்தானா நீர்த் தேக்கத் திட்டம். இது குடியாத்தம் வட்டம், மோர்தானா கிராமத்தின் அருகே கௌண்டின்யா நதியின் குறுக்கே 261.36 மில்லி கன அடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் திட்டம். இது 6,388 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக் கோரும் திட்டமாகும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 19.50 இலட்சமாகும் என்று கணக் கிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 4798.26 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது இத்திட்டத்திற்கு 1991—92-ல் 37 இலட்சம் கோரப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறை குறிப்பு கூறுகின்றது. எனவே, இந்த இரண்டு நீர்த் தேக்கத் திட்டங்களையும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் கனிவோடு பரிசீலித்து எங்களுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காட்பாடி மேம்பாலம், ராஜா தோப்பு, மோர்தானா நீர்த்தேக்கத்திட்டம் ஆகிய இந்த மூன்றையும் நம்முடைய ஆட்சிக் காலத்தில் அவசியம் நிறைவேற்றி, விழா நடத்தி புரட்சித் தலைவி அவர் களின் திருக்கரத்தாலே அதை நடத்த வேண்டும் என்று மெத்தப் பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், எத்தனையோ எம்.எல்.ஏ-க்கள், எம்.பி.க்கள் ஆகி யோர்களைத் தேர்ந்து எடுத்து அனுப்பியும் என்ன புண்ணியம் என்று என் தொகுதி வாழ்மக்கள் மிகவும் ஆதங்கப்படுகிறார்கள். எனவே சாதனையையே படைத்துக் காட்டும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், இதையும் சாதனையாக மலர வைக்க வேண்டும் என்று மெத்தப் பணிவன் போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

அடுத்து, காட்பாடியை தனித் தாலுகாவாகப் பிரிக்க புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு முன்னோடியாக அங்கு [illegible] கூட வழங்கப்பட் டுள்ளது. ஆகவே காட்பாடியை [illegible] பிரித்து

என் தொகுதி மக்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

காட்பாடி தொகுதியில் 2 ஒன்றியங்கள், 5 பேரூராட்சிகள் உள்ளன. ஆனால் அரசு மருத்துவமனை ஏதும் அங்கே இல்லை. மேலும் கே. வி. குப்பம் ஒன்றியத்தில் பலவநத்தம் என்ற இடத்தில் தனியார் கட்டிடத்தில் வாடகை கொடுத்து செயல்பட்டு வருகின்ற மருத்தகத்தை மருத்துவமனையாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு காலி இடமும் தயாராக இருக்கிறது என்பதையும் கூறி, அதை வருகின்ற நிதி ஆண்டிலாவது என் தொகுதிக்கு அரசு மருத்துவ மனையாக உயர்த்தித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கே. வி. குப்பம் ஒன்றியத்தில் பஸ் ஸ்டாண்ட் இல்லை என்பதை அனைவரும் அறிவர். அங்கு ஒரு பஸ் ஸ்டாண்ட் அமைத்துத் தர புரட்சித் தலைவி அவர்களின் அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று மெத்தப் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் காட்பாடி தொகுதியில் சேர்க்காடு ஊராட்சிப் பகுதியில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்க இடம் தேர்வு செய்யப் பட்டு, சர்வே எடுக்கப்பட்டு, அந்தப் பணி இன்னும் நிறைவேற வில்லை. அதை மீண்டும் கனிவோடு பரிசீலனை செய்து அங்கு விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்க இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மெத்தப் பணி வுடன் கேட்டுக்கொள்கிறேன்.

காட்பாடி தொகுதியில் தீ அணைப்பு நிலையம் கிடையாது. ஏதாவது தீ விபத்து என்றால் குடியாத்தத்திலிருந்து உதவினால் தான் உண்டு. எனவே காட்பாடி தொகுதியில் தீ அணைப்பு நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் அவர்களை மெத்தப் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

காட்பாடி தொகுதியில் திருவலம் கெம்பராஜபுரம் என்ற இடத்திலே வெள்ளக் கால்வாய் என்ற ஏரியை தூர் எடுத்து நவீனப்படுத்தினால் சுமார் 600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே அதை [illegible] தர வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் [illegible]கேட்டுக்கொள்கிறேன். [illegible]





அரும்பருதி ஊராட்சியில் ஊருக்கு வெளியேதான் விவசாயி களின் விளை நிலங்கள் உள்ளன. மழைக்காலங்களில் அவர் களுடைய நிலத்துக்குச் செல்ல வேண்டுமென்றால் அந்த ஊருக்கும் அவர்களுடைய நிலங்களுக்கும் இடையில் ஒரு ஏரிக் கால்வாய் உள்ளது; அதை அவர்கள் கடந்துதான் செல்ல வேண்டி இருக்கிறது. அதில் நீர் நிரம்பிவிடும்போது அந்த ஊர் மக்கள் நிலங்களுக்கு செல்வதற்கு பாதையே கிடையாது. மாற்றுப் பாதை அவர்களுக்கு இல்லை. எனவே நிரந்தரத் தீர்வு காண அவர்களுக்கு ஒரு பாதை வசதியைச் செய்து தரவேண்டுமென்று மெத்தப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

கே. வி. குப்பம் ஒன்றியப் பகுதியில் வி. என். பாளையம் என்ற பகுதியில் வசதியான நிலப் பரப்பு உள்ளது. அதாவது வஜ்ர மலைப் பகுதியில் அலுமினிய தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதித் துறையின் மூலம் தாலுகாவுக்கு 250 வீடுகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை மாற்றி ஒரு தாலுகாவுக்கு 500 வீடுகள் வீதம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள் கிறேன். தொகுப்பு வீடுகள் கட்டும்போது ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் கட்டிக் கொடுக்க அரசு ஆணை இருக்கிறது. ஆனால் கன்வெர்ட்டட் ஆன கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கு அந்த வசதியை செய்து தரமுடியாத நிலைமை இருக்கிறது. அதற்கு நமது மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் சட்டத்தில் விதி விலக்கு அளித்து, அந்தக் கிறிஸ்தவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பீடி சுற்றும் தொழிலாளர்கள், நெசவாளர்கள், கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கின்றனர். அவர்களின் பொருளாதாரம் உயர புதிய திட்டங்கள் அமைத்து, அவர்களின் வாழ்வுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் உதவ வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட சத்துணவு அமைப்பாளர்களின் பணியை நிரந்தரமாக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு மாண்புமிகு இதய தெய்வம் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி கே. எம். கலைச்செல்வி] [1991 செப்டம்பர் 28

காட்பாடியில் இயங்கி வரும் வெடிமருந்து தொழிற்சாலை இப்போது 6½ கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறப்படுகிறது. இவ்வளவு நஷ்டத்தில் இயங்கும் இடத்தில் உள்ள நிர்வாகச் சீர்கேடுகளைக் களைந்து அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, அதை லாபகரமாக இயக்கி நிர்வாகத்தை செம்மையுறச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் காட்பாடி தொகுதியில் இயங்கும் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 14 ஆண்டுகளாக என்.எம்.ஆர். ஆக பணி புரியும் 185 பேர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காட்பாடி தொகுதியில் கார்ணாம்பட்டு என்ற இடத்தில் ரெயில்வே கேட் ஒன்று இருக்கிறது. அதிகமான போக்குவரத்து உள்ள அந்தக் கேட்டுக்கு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11·15)

காட்பாடி தொகுதியில் வெற்றி பெற்றால், நிச்சயமாக அந்த இயக்கம் தான் ஆளும்கட்சி என்பது வரலாறு 77,80, 84, 89—துச்சாதனர்களின் வெறியாட்டம் முடக்கப்பட்டு கடந்த தேர்தலில் காட்பாடி தொகுதி வாழ் மக்கள் இரட்டை இலைக்கே வாக்களித்து இருக்கிறார்கள். 28 ஆண்டுகாலமாக இரட்டை இலைக்கே வாக்களிக்காத உசிலம்பட்டி தொகுதி அருமை சகோதரி பாண்டியம்மாளுக்கு கடைக்கண் காட்டிய இதய தெய்வம் அவர்கள், என்னுடைய தொகுதியின் மீதும் கருணை கூர்ந்து கனிவோடு என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஆறு கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்வதாய் அன்பு கொண்ட அறிவு பேரொளியாம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி சில



1991 செப்டம்பர் 28] [திரு. கு. லாரன்ஸ்]

கருத்துக்களை எடுத்துவைக்க முயல்கிறேன். இந்த ஆட்சி அமைக்கப்பட்ட பின்னர் தமிழகத்தில் வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், சமுதாயத்தினுடைய அடித்தளத்தில் வாழ்கிற மக்களுடைய மேம்பாடு குறித்து மிகத் தெளிவாக நல்வாழ்வுத் திட்டங்களுடைய அடிப்படையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அரசு நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே வைத்திருக்கிறது என்பதை நான் உணர்வேன்.

கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும் ஏழை யெளிய மக்களுடைய மேம்பாடு திட்டங்களை அடிப்படையாக வைத்தே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதும், கடந்த காலங்களில் இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளில் மிகத் தெளிவாகப் பார்க்கிற நேரத்தில் அறிவாளிகள் என்றெல்லாம் சொல்லி வந்தவர்கள் எல்லாம், இங்கே தவறாக கருத்துக்களைச் சொல்ல முற்பட்ட காலக் கட்டங்களில் எல்லாம், அவர்களை அறிவு கத்தியால் வெட்டி வீழ்த்திய மிக மேன்மை பொருந்திய மன்றமாக அமைந்தது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான் தமிழகம் தொழில் துறையில் 13-வது இடத்திற்கு போய்விட்டது என்பதை நம்முடைய தோழமைக் கட்சி கூட இந்த மன்றத்தில் எடுத்து வைத்த பின்னர், அதை புள்ளி விவரங்களோடு தமிழகம் இன்றைக்கு மூன்றாவது இடத்தில் இருக்கிறது என்ற பெருமையைச் சொல்லி, முதலாவது இடத்திற்கு வருகிற திட்டங்களைத் தந்திருக்கிற இந்த ஆட்சியை, இந்த நிதிநிலை அறிக்கையை, மானியங்களை நான் வரவேற்று பேச முற்படுகிறேன்.

ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், அதிகாரத்தில் இருந்த காலக்கட்டத்தில் பாட்டாளி மக்களைப்பற்றிச் சிந்திக்காதவர்கள், சமுதாயத்தின் ஏழையெளிய மக்களைக் குறித்து கொஞ்சம் கூட சிந்தித்துப் பார்க்காது இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பாட்டாளி மக்கள் குறித்து கொஞ்சமாவது நினைத்துப் பார்க்க வேண்டுமென்ற நடத்திற்கு அவர்கள் வந்திருப்பதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது பொருளாதாரத் துறையில் பின்தங்கிய மாவட்டம். 1990 ஆம் ஆண்டு பாராளுமன்றத்

[திரு. கு. லாரன்ஸ்] [1992 செப்டம்பர் 28

தில் தொழில் துறை அமைச்சராக இருந்த அஜித்சிங் அவர்கள் தமிழ் நாட்டில் ஒன்பது மாவட்டங்கள் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்தார்கள். அப்படி தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக முதலாவதாக, கருதப்பட்டது தர்மபுரி. இரண்டாவதாக, கருதப்பட்டது கன்னியாகுமரி. எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தொழில் துறையிலும், சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் பின்தங்கியிருக்கிற தர்மபுரி மாவட்டத்திலே நின்று, வென்று அந்த மாவட்ட மக்களுக்காக நல்ல பல திட்டங்களைத் தருவதைப் போன்று, இரண்டாவது மாவட்டமாக இருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களை தந்திருக்கிறார் என்பதை நன்றிப் பெருக்கோடு இந்த மன்றத்தில் எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இரப்பர் தொழிற்சாலை அமைப்பதன் மூலமாக 400 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பை நான் பாராட்டுகிறேன். அந்த இரப்பர் தொழிற்சாலை அமைப்பதில் அது ஜாயின்ட் செக்டார் அடிப்படையில் வரயிருப்பதும், தனியார்கள் சில காலங்களில் அந்தத் தொழிற்சாலை அமைப்பதில் முன்னுக்கு வராமல் அவர்கள் சென்று விடலாம் என்று கூட கருதுகிறேன்.

(முற்பகல் 11.20)

ஆனால், இன்றைக்கு ரப்பர் தொழிற்சாலை என்பது அதிக லாபம் தருகிற ஒரு தொழிற்சாலை. இன்றைக்கு நம்முடைய டி.வி. யிலே பார்த்தால், ரப்பர் கம்பெனிகள் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு பணி செய்கிற விளம்பரங்களை நம்மால் பார்க்க முடியும். எனவே அதை ஜாயின்ட் செக்டாரிலே உருவாக்குவதற்குக் காலம் கடந்து போய்விட்டாலும் கூட, அதில் அதிகமான பணங்களை செலவழிக்காமல் இருந்தாலும் கூட, விஞ்ஞான ரீதியாக கொஞ்சம் பணத்தைக் குறைத்தாவது, அந்தத் தொழிற்சாலையை, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியினுடைய காலகட்டத்திலே நிறைவேற்றித் தரவேண்டும் என்று மெத்த பணிவன்போடு வேண்டுகிறேன்.

அதேபோல், தென்னையிலிருந்து உற்பத்தியாகிற பொருட்களினுடைய அடிப்படையில், 20 கோடி ரூபாய் செலவிட்டு, அங்கே ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக திட்டம் தீட்டியிருப்பதை நான் அதேபடியே மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டுவதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன். இதற்கு என்ன காரணம்



1992 செப்டம்பர் 28] [திரு. கு. லாரன்ஸ்]

என்றால், இந்தத் தொழிற்சாலைகளின் மூலமாக அந்த மாவட்டத்திலே இருக்கிற 2 லட்சம் மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிகளைப் பெறுவதற்கும், வாழ்க்கை வளங்களைப் பெறுவதற்கும் அது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்திலே திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட இந்த அரசு தயாராக இருப்பதையும் நான் பாராட்டுகிறேன். அப்படி கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு, அந்தத் திருவள்ளுவர் சிலையை அமைப்பதன் மூலமாக, கன்னியாகுமரி உலக அரங்கிலே ஒரு டூரிஸ்ட் ஸ்பாட் என்ற அளவிலே மிக முக்கியமான மையத்திலே ஒன்றாக அது அமையப்போகிறது என்பதை நான் நினைவுகூர்ந்து பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், மீன்பிடி மேம்பாட்டுத் திட்டத்தினுடைய அடிப்படையிலே கன்னியாகுமரி மாவட்டத்தை இணைத்து இருப்பதையும், அந்த மாவட்டத்தினுடைய மிக முக்கியமான அணையாக இருக்கிற பேச்சிப்பாறை அணையை வலுப்படுத்துவதற்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்க இருப்பதையும், சிறுபான்மைப் பள்ளிக்கூடங்களிலே 17 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் பணியாற்றிய ஆசிரியர்களை, இந்த ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இரண்டு மாத காலகட்டத்திலே, கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், அவர்களுடைய பணிகளை முறைப்படுத்தி, அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக 6½ கோடி ரூபாய், இந்தச் சட்ட மன்றத்திலே அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் 25 ஆண்டு காலம் நடைபெறாத திட்டங்கள் அல்லது 25 ஆண்டுகளினுடைய ஒட்டுமொத்தமான வளர்ச்சியினுடைய அடிப்படையாக இன்றைக்கு இவைகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியிலே பாளையங்கோட்டையில் உள்ள சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஒரு மாலை நேரக் கல்லூரியை அங்கே அமைத்து, அரசுக் கல்லூரி இல்லாத் குறை பிரச்சினையை அந்த மாவட்டத்தில் போக்கி, அங்கே இருக்கிற மாணவர்களுக்கு பி.எட். எம்.எட்., எம்.ஏ. எம்.எஸ்சி.,

எம்.காம். போன்ற படிப்புகளை படிக்கின்ற வாய்ப்பைத் தந்த எங்களுடைய இனிய தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும், கல்வித் துறைக்கும் என்னுடைய நன்றிகளை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சி தொழிற் துறையிலே அபிவிருத்தி அடையவேண்டும் என்ற எண்ணத்தோடு, செயல்படுவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மத்தியிலே சென்ற 3 ஆண்டு காலத்தில் 3 ஆட்சி மூன்று முறை வந்தது என்பதையும் 3 தொழிற் கொள்கைகளை கொண்டு வந்தது என்பதையும் மறுக்க முடியாது. அதுமட்டுமல்ல, அதனுடைய அடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவிலே முதலீடு செய்வதற்கு கொஞ்சம் தயக்கத்தைக் காட்டியது உண்டு. அவர்கள் இந்தியா என்பது வளரும் நாடாக இருந்தாலும் வேறு பல வளரும் நாடுகளிலே பன்னாட்டு தொழில் அமைப்பாளர்கள், தொழில்களை உருவாக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதனுடைய பிரதிபலிப்புகள் தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு மத்திய அரசைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் அதனுடைய முதலீடு குறைவாக இருந்தது என்பது மட்டுமல்ல, தமிழகத்திலே 1986-87-ல் 4.4 சதவிகிதம் முதலீட்டை அவர்கள் செய்த காலகட்டத்திலே மகாராஷ்டிராவிலே 16 சதவிகிதம் அவர்கள் முதலீடு செய்திருக்கிறார்கள். 1987-88-ல், 4.9 சதவிகிதம் தமிழ்நாட்டிலே முதலீடு செய்த காலகட்டத்திலே, மகாராஷ்டிராவிலே 17 சதவிகிதம் முதலீடு செய்திருக்கிறார்கள். ஆகவே இப்படி பல்வேறு மாநிலங்களிலே முதலீடு அதிகமாக இருந்த சூழ்நிலையிலே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் அவர்களுடைய முதலீடு மிகவும் குறைவாக இருந்தது. ஆனால், இன்றைக்கு பொலிட்டிக்கல் ஸ்டபிலிட்டி தமிழகத்தில் இருக்கிறது. குறைந்தபட்சம் 25 ஆண்டு காலத்திற்கு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே இங்கே ஆட்சி [illegible] பெறும் என்பதை இன்றைக்கு நாட்டிலே இருக்கிற [illegible] களை உருவாக்குகின்றவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11.25)

அதேபோல் இன்றைக்கு தமிழக மக்கள் அவர்களை [illegible] 'இன்டஸ்ட்ரியல் சிட்டி'. இங்கே தொழில்கள் அதிகமாக வருவதற்கு வாய்ப்பாக இருக்கிறது என்பதை [illegible] தெரிவித்து [illegible]





எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், முக்கியமாக அங்கே முந்திரிக் கொட்டைத் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அந்த முந்திரிக் கொட்டை தொழில் மூலமாக சுமார் 40,000 அன்புச் சகோதரிகள் பணியாற்றுகிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலைகளில் யார் முதலீடு செய்திருக்கிறார்கள் என்றால், கேரளாவிலிருந்து தான் முதலாளிகள் செய்திருக்கிறார்கள். எனவே இந்த நாட்டின் மீது அக்கறை கொண்டோ, அல்லது எங்கள் மீது அன்பு கொண்டோ அவர்கள் முதலீடு செய்யவில்லை. மாறாக, இந்தத் தமிழகத்தின் தொழில் துறை இன்று அமைதியாக இருக்கிறது என்பதும் இங்கேதான் சீப் லேபர் கிடைக்கின்றது என்பதையும் மையமாக வைத்துத்தான், அவர்கள் தொழில் முதலீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த முந்திரிப் பருப்பை இறக்குமதி செய்கின்ற அந்த கார்ப்பரேஷன் கொச்சியிலே இருக்கிறது. எனவே தமிழகத்தைப் பொறுத்த வரையில் முந்திரிப் பருப்புத் தொழில் அபிவிருத்தி அடைய வேண்டுமானால், கொச்சியிலே இருக்கக் கூடிய அந்தக் கார்ப்பரேஷனுடைய ஒரு பிரிவு தமிழகத்திலே வந்தாக வேண்டும்.

அதுபோன்று காயர் போர்டு, அதனுடைய அலுவலகம் எர்ணாகுளத்திலே இருக்கிறது. அங்கேதான் நம்முடைய காயர் இண்டஸ்ட்ரில் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு நாம் ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டியிருக்கிறது. அங்கேயிருந்து நிதியுதவிகளைத் தருகிறார்கள். [illegible] கொடுக்கிறார்கள். எனவே காயர் போர்டு [illegible] தொழிற்சாலை—கார்ப்பரேஷனுடைய ஒரு பிரிவு தமிழகத்திலே நிச்சயமாக வந்தாக வேண்டும்.

அதேபோன்று ரப்பர் தோட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் 17,000 எக்டேர் நிலத்தில் ரப்பர் தயாரிக்கப்பட்டாலும்கூட, அதனுடைய அமைப்பு என்பது எர்ணாகுளத்தில்தான் இருக்கிறது. அங்கேயிருந்து தான் நமக்கு 'இன்பர்மேஷன்'—செய்திகள் கிடைக்க வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவே அதனுடைய பிரிவுகள் எல்லாம் தமிழகத்திலே வர வேண்டும். இது மத்திய அரசுக்கு எட்ட வேண்டுமென்ற [illegible] இன்றைக்கு நான் இங்கே தெரிவிக்கிறேன் என் [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை ஒரே நாடு என்று [illegible] கன்னியாகுமரியிலிருந்து ரயில் [illegible] [illegible] தேவையாக நாம் டில்லிக்குச்

[திரு. கு. லாரன்ஸ்] [1991 செப்டம்பர் 25

செல்ல முடியாது. கன்னியாகுமரி பிராட்கேஜில் ரயில் புறப்பட்டது என்றால் அது நாகர்கோயிலோடு முடிந்து விடுகிறது. நாகர்கோயிலிலிருந்து வேறு ஒரு ரயிலிலே புறப்பட்டுத்தான் நாம் திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இது பிராட்கேஜ். திருநெல்வேலி மீட்டர்கேஜில் தான் நாம சென்னைக்கு வர வேண்டியிருக்கிறது. சென்னையிலிருந்து பிராட்கேஜில்தான் நாம் டில்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரியிலிருந்து கேரளா வழியாக அவர்கள் டில்லிக்குச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மத்திய சர்க்கார் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வழியாக டில்லிக்குச் செல்வதற்கு அவர்கள் ஒரு ரயில்வே திட்டத்தை நமக்குத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக இந்த அரசு பரிந்துரை செய்யவேண்டும். பரிந்துரை செய்யும் என்ற நம்பிக்கையோடு இதை எடுத்து வைக்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்வியிலே அதிகமாகப் படித்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற அமைப்பில் 80 சதவீத மக்கள் படித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்தின் எக்ஸ்டென்ஷன் சென்டர் நாகர்கோயிலில் இருக்கிறது. அதேபோன்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய எக்ஸ்டென்ஷன் சென்டர் அங்கேயிருக்கிறது. சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் எக்ஸ்டென்ஷன் சென்டர் அங்கேயிருக்கிறது. மாலை நேரக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் சென்னையிலே இருக்கின்ற கன்னிமாரா லைப்ரரி போன்றோ, அல்லது பிரிட்டிஷ் லைப்ரரி போன்றோ, அல்லது சென்னையிலே இருக்கின்ற அமெரிக்கன் எம்பசியிலே இருக்கின்ற லைப்ரரி போன்றோ எங்களுக்கு அந்த லைப்ரரி வசதிகள் அற்று இருப்பது பற்றி இங்கே நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே மேல்நிலைப் படிப்பு படிக்கின்ற பல்வேறு அன்புச் சகோதரிகள் எல்லாம் இந்தப் புத்தகங்களை பார்க்க வேண்டுமேயானால், அவர்கள் சென்னைக்குத்தான் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே கல்விக்கு அதிகமான முக்கியத்துவத்தை, அறிவு ரீதியாக சிந்திக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே சென்னையிலே இருப்பதைப் போன்று மாவட்டந்தோறும் மாணவ மாணவியர் படித்து புத்தகங்-



1991 செப்டம்பர் 28] [திரு. கு. லாரன்ஸ்]

களைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு சிறப்பான நூல் நிலையத்தை அமைக்கவேண்டும். அதற்கு முன்னுரிமையாக சென்னைக்கு சம அளவில் படித்தவர்கள் கொண்ட எங்களுடைய மாவட்டத்தில் மிகப் பெரிய லைப்ரரி ஒன்றை உருவாக்கி, நிறைவேற்றித் தரவேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்த அப்ரோபிரியேஷன் பில்லை ஆதரித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. சா. பழனிசாமி.

**திரு. நா. சா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 'அப்ரோபிரியேஷன் பில்' மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி எனது ஒரு சில கருத்துக்களை இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

[illegible] (முற்பகல் 11.30,

இன்று உலகிலே பொருளாதார வளர்ச்சி என்பது சந்தைப் பொருளாதாரம் என்று பொருளாதார முறையிலே உலக நாடுகள் இன்று முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள் மார்க்கெட்டிலே விற்பனைக்கு விடுகொடுக்கக் கூடியதாகவும், வெளி நாட்டுத் தொழில் நுட்பத்தோடு போட்டி போடக் கூடியதாகவும், தொழில் நுட்பத்திலே சிறந்ததாகவும் இருக்கவேண்டுமென்ற முறையில் இன்று உற்பத்தி முறை மாறியிருக்கிறது. பொதுஉடைமை பொருளாதாரத்தைப் பின்பற்றுகிற நாடுகள்தான் முன்னேறிய பாதையில் செல்லுகின்ற நாடுகள் என்று நினைத்து வந்த நிலை மாறி, 'கேப்பிடலிசம்' என்று சொல்லப்படுகிற பொருளாதார முறைதான் வெற்றி அடைந்திருக்கிறது என்று சொல்லுகிற நிலைமை உருவாகியிருக்கிறது. ஒரு காலத்திலே நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் லைசன்ஸ், பெர்மிட், கோட்டா முறைகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்ன நேரத்திலே, அது வலதுசாரி கொள்கையாக கருதப்பட்டு, அந்தக் கொள்கை நையாண்டி செய்யப்பட்டது. அவர் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு சொல்லிய அந்தக் கொள்கைதான் இன்று உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம் இந்தியாவிலே கூட தொழில் கொள்கையிலே [illegible] போக்கான்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 28

நிலையிலே இந்த உழவுத் தொழிலில் மாத்திரம் நாம் இன்னும் ஒரு புரட்சிகரமான மாறுதலை கடைபிடிக்காமல் இருந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இந்தத் தமிழ்நாட்டிலே 100 கோடி ரூபாய் முதலீடு போட்டு தொழில் செய்பவர்களுக்கு 50 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கி அவர்களை ஊக்குவிக்கின்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதேபோல 100 கோடிக்குக் குறைவாக முதலீடு செய்பவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் வரை மானியமாக கொடுத்து, அந்தத் தொழிலை ஊக்குவித்து, தமிழ நாட்டை தொழில்துறையில் ஒரு அரிய இடத்திற்கு கொண்டு வருவதற்காக அவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் அந்த முயற்சியை மனமார பாராட்டுகிறேன்.

அதேபோல நிலம் சம்பந்தமான கொள்கையிலே ஒரு சரியான முடிவினை எடுத்து, அந்த விவசாயத் தொழிலும் தொழில் துறைக்கு நிகரானதாக உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்கிற கொள்கையை நான் எதிர்க்கவில்லை. இருந்தாலும், இந்தக் கொள்கையானது நிலத்தோடு மட்டும் நிறுத்திவிடக் கூடாது, பல்வேறு சொத்துக்களிலேயும் இதைக் கருதிப் பார்க்க வேண்டும். கோடிக்கணக்கிலே சொத்துக்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அந்தச் சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்க முடியும் என்ற நிலையிலே நிலத்தை மட்டும் 15 ஸ்டேண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று நிலத்திற்கு ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களையெல்லாம் ஒன்றாக்கி இயந்திரமயமாக்கப்பட்ட நவீன முறையிலே விவசாயத்தை செய்ய வேண்டும் என்ற நிலையை நாட்டிலே உருவாக்க வேண்டும்.

எனவே இந்த நேரத்திலே கார்பொரேட் செக்டார் என்ற முறையிலே பெரிய தொழிற்சாலையை நடத்துகின்ற முறையிலே விவசாயத்தைக் கொண்டுவந்து பெரிய பண்ணைகளை அமைத்து உருவாக்கி, ஏற்றுமதி செய்யக்கூடிய வேளாண்மை பொருட்களை [illegible] செய்யக் கூடிய [illegible] மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்க [illegible]



1991 செப்டம்பர் 28] [திரு. நா. சா. பழனிசாமி]

(முற்பகல் 11.35)

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்கிறபோது மற்ற சொத்துக்களிலும் அப்படி கேட்பார்கள். வாடகைக்கு குடியிருப்பவர்கள் அந்த வீட்டை தங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ளக் கூடிய கேள்வி எழலாம். கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கே தமிழக முதல்வராக இருந்த நேரத்திலே ஓட்டுநர்களுக்கு ஆட்டோ சொந்தம் என்ற கொள்கையை ஒரு நாள் அறிவித்தார்கள். அறிவித்த மறுநாளே ஆட்டோவிற்கு சொந்தக்காரனெல்லாம் அந்த ஆட்டோக்களை எடுத்துக்கொண்டு போய் தங்கள் வீட்டிலே வைத்துக்கொண்டு விட்டார்கள். ஆட்டோ ஓட்டுகிற டிரைவர்களுக்கு பல நாள் ஆட்டோ ஓட்ட முடியாத நிலைமை உருவாகியது. அப்படி புரட்சிகரமாகச் சொன்ன கலைஞர் அவர்கள் மறுநாளே தான் சொன்ன கொள்கையை மாற்றி, ஆட்டோ ஓட்டுபவர்களுக்கு ஆட்டோ சொந்தமாக வாங்குவதற்கு பணம் கடன் கொடுக்கப்படும் என்று அவருக்கே உரிய ஒன்றைச் சொல்வது, பிறகு வார்த்தை ஜாலத்தால் அதை மாற்றுவது என்கிற நிலைமையிலே அதைச் சொல்லி லாபம் பெற்றார்கள். அப்படிப்பட்ட கலைஞருடைய நிலைமை நிச்சயமாக நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவியைப் பொறுத்த வரையில் வராது. அவர் சொல்வதைத்தான் செய்வார்கள் என்ற நம்பிக்கை இந்த தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இன்று பல பேர், கணவன்மார்கள் இறந்துவிடுகின்ற நேரத்திலே ஏழை விதவைப் பெண்கள், தங்களால் விவசாயம் செய்ய முடியாத விவசாய நிலத்தை குத்தகைக்கு கொடுக்கிறார்கள். அப்படி குத்தகைக்கு கொடுக்கின்ற போது, குத்தகைக்கு எடுப்பவர்கள் அந்த நிலத்தை குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, ஏழை பெண்களுடைய நிலத்தைக்கூட விட மறுக்கின்ற நிலை நாட்டிலே இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே குத்தகைக்கு உழுபவர்கள் எல்லாம் ஏழைகளாக இருந்துவிடுவதில்லை. குத்தகைக்கு நிலத்தை கொடுப்பவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்களாகவும் இருப்பதில்லை. அந்த நிலம் என்ற சொத்தை அவர்கள் தங்களுடைய மூதாதையர்களுடைய சொத்தாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பல பேர் நகர்ப்புறங்களிலே அவர்கள் அரசுப் பணிகளிலே இருக்கின்ற காரணத்தில் தங்களுடைய நிலத்தை [illegible]

வதற்கோ விட்டுவிடுகிறார்கள். மீண்டும் அவர்கள் ஓய்வு பெற்று அந்த இடத்திற்குச் செல்கின்ற போது, அந்த நிலத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் அந்த நிலத்தை விட்டு வெளி போக மறுக்கிறார்கள். அவர்களுடைய சொத்து அவர்களிட மிருந்து பறிபோய் விடுகிறது. இப்படிப்பட்ட நிலையிலே அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் இந்த உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அந்தக் கொள்கை ஏழை, எளிய மக்களை பாதித்துவிடக் கூடாத வகையிலே, அந்தக் கொள்கையானது அமல்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிவோடு, அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை ஒரு தொழிலாகச் செய்கின்றபோது அதில் உரிமையாளர்கள், நிர்வாகி, தொழிலாளி என்ற அமைப்பு விவசாயத் தொழிலிலே இன்று ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்று நிலம் ஒன்று தான் அநேகமாக மற்ற சொத்துக்களைவிட சமத்துவமான முறையிலே பகிர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மற்ற சொத்துக்களில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகள் இமாலய ஏற்றதாழ்வுகள் இன்று இருந்து கொண்டிருக்கிறது. தொழில் துறைக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் வங்கியிலே கடன் கொடுக்கப்படும், அரசாங்கம் முதலீடு செய்தும் கூட அந்தத் தொழில் துறையால் நம் நாட்டிற்கு பெருமை ஏற்படவில்லை. நம்முடைய நாட்டினுடைய பொருட்கள் எல்லாம் அந்நிய நாட்டு சந்தைகளிலே நல்ல விலைக்கு விற்க முடியவில்லை. அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியாத நிலை நம்முடைய நாட்டிலே இருந்து கொண்டிருப்பதால் தான் இன்று அந்நியச் செலாவணி தட்டுப்பாடு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயத்திலே பெரிய முன்னேற்றத்தை உருவாக்க முடியும். அதற்கு விவசாயத்திலே நவீன முறையைப் புகுத்த வேண்டும். நம்முடைய தொழிலுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தால் விவசாயம்தான் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தொழில் துறைக்கு அதிகமான நிதி திருப்பி விடப்படுகின்ற நேரத்தில் விவசாயத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி குறைவாகவே இருக்கிறது. இதை நம்முடைய மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்கள் சென்ற 16-ந் தேதி பாராளுமன்றத்திலே நிதி மசோதாவைத் தாக்கல் செய்து பேசுகின்ற நேரத்திலே குறிப்பிட்டிருக்



கிறார்கள்—"We have provided indiscriminate protection to our industry for too long and this has been at the cost of the poor and the farmers."

என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தொழில் துறைக்கு கொடுக்கப்படுகின்ற அதிகமான முக்கியத்துவத்தின் காரணமாக அதில் ஏழை எளிய மக்களும் விவசாயிகளும் தான் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற உண்மையையும் நம்முடைய மத்திய நிதி யமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் செய்யும் சலுகைகள் கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு வந்து சேர வேண்டும் என்றால் அது விவசாயத்துறையின் மூலமாகத்தான் வந்துவிட முடியும். நம்முடைய நாட்டிலே இன்னும் எவ்வளவு தான் தொழில் முன்னேற்றம் செய்தாலும் கூட வேளாண்மைத் தொழிலைத்தான் நம்முடைய நாட்டினுடைய பெரும்பான்மையான மக்கள் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நவீன இந்தியாவிலே ஏற்பட்டிருக்கின்ற விஞ்ஞான முன்னேற்றம், விஞ்ஞான சாதனைகளான இருசக்கர வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் நகர்ப்புறத்திலே தொழில் துறையிலே ஈடுபட்டு இருக்கின்றவர்கள் அனுபவிக்கின்ற அந்த விஞ்ஞான முன்னேற்றத்தினுடைய சாதனைகளை எல்லாம் தாங்களும் அனுபவிக்க வேண்டும் என்கிற ஆதங்கம் கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், கிராமப்பகுதியிலே விவசாயத் தொழில் செய்கின்ற காலத்தில், இப்படிப்பட்ட வசதி களை அந்த விவசாயத் தொழிலை வைத்து அடைய முடிய வில்லை என்ற காரணத்தினால், அவர்கள் நகரத்தில் ஏதாவது ஒரு தொழில் செய்து பிழைத்தால்தான் நாகரீகமாக வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்ற முறையில், நகரை நாடி வருகின்ற நிலை நம்முடைய நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த விவசாயத் தொழிலும், நகரத்தினுடைய தொழிலுக்கு நிகரான முறையிலே வளர வேண்டும்.

(முற்பகல் 11.40)

கிராம நிர்வாகம் என்பது இன்று வருவாய்த் துறை என்ற அமைப்போடும், உள்ளாட்சித் துறை என்ற அமைப்போடும் இணைந்திருக்கிறது. ஆனால் உள்ளாட்சித் துறைக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. கிராமத்தைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறைக்கு, வருவாய்த் துறைக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் கொடுத்து கிராம நிர்வாக அலுவலர்

உள்ளாட்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நிலவரி வசூல் நிதியை உள்ளாட்சித் துறைக்குக் கொடுத்தால்தான் உள்ளாட்சித் துறையிலே இன்று கிராமங்களில் இருக்கின்ற அடிப்படைத் தேவையான குடிநீர், சுகாதாரம், ரோடுகள் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். ஊராட்சி மன்றங்களில் இன்று எந்த ஊராட்சி மன்றத்திலும், ஒன்றியத்திலும் நிதி வசதி என்பதே இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதனால் எந்தத் திட்டத்தையும் செயற்படுத்த முடியவில்லை. ஆனால் ஊராட்சி மன்றங்களிலும், ஒன்றியங்களிலும் எந்தத் திட்டத்தையும் செயற்படுத்துவதாக இருந்தாலும் 10 சதவிதம் தங்களுடைய நிதியைக் கொண்டு செய்ய வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தி விட்டதால் பல்வேறு ஊராட்சி மன்றங்களில் அந்த 10 சதவித தொகையைக் கூட கொடுக்க முடியாததால் இன்று வேலை செய்ய முடியாத நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் இருக்கின்ற அம்பாரம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தையும், ஆளியாறு கூட்டுக் குடிநீர் திட்டத்தையும் அமலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புரவிபாளையம் என்ற இடத்திலே புளிப்பால் என்ற அணைத் திட்டத்தை பொதுப்பணித் துறையின் மூலமாக கட்டித் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியங்களிலே பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டன. இன்றைக்கு சமர்ப் பண்ணுகின்ற இந்த நேரத்திலே சில கருத்துக்களை பல்வேறு துறைகள் பற்றியும், பல்வேறு மானியங்கள் பற்றியும் இங்கொன்றும் அங்கொன்றுமாக கூறலாம் என்று எண்ணுகிறேன். அன்றைக்கு சுதந்திரம் அதாவது Democracy vested in the hands of kings. இன்றைக்கு Democracy vests in the hands of Bureaucracy என்று சொல்லப்படுகின்ற அளவில் அதிகாரிகளுடைய கையில்தான் இன்றைக்கு நம்முடைய சுதந்திரம் இருக்கிறது என்ற நிலை இருக்கின்றது. அந்த அளவுக்கு அவர்களுடைய



காரியங்கள் எல்லாம் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் பல கருத்துக்களைக் கூறிவிட்டபோதிலும் சில கருத்துகள் விடுபட்டுப் போய் விட்டன. ஆனால் அவைகள் மக்களின் முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால் அந்தக் கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் இதைக் கூறுகிறேன். பத்திரிகையில் படிக்கிறேன், மதுரை இராஜாஜி மருத்துவமனையிலும் சரி, சென்னை பொது மருத்துவமனையிலும் சரி அங்கே மருந்துகள் இல்லை, சலையன் பாட்டில்கள் இல்லை, அங்கே போகின்ற புற நோயாளிகளிடம் அதாவது அவுட் பேஷண்டுகளிடம் எழுதி கொடுத்து விடுகிறார்கள். வெளியே போய் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது என்ற செய்திகள் பத்திரிகைகளிலும் வருகின்றன, மக்கள் மூலமும் வருகின்றன. அங்கே பணியாற்றுவதற்கு ஒரு டீன் இருக்கிறார், டி.எம்.இ. இருக்கிறார் ; டி.எம்.எஸ். இருக்கிறார்; இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இருந்தது உண்மை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அதற்காக அதிகமான நிதியை ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள். இப்போது மதுரையில் ஏற்பட்ட அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் தனியாக மீண்டும் அதற்கு இப்போது பணம் ஒதுக்கப்பட்டு இன்றையதினம் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. ஆனாலும் என்னுடைய ஆதங்கம் என்னவென்று கேட்டால் எங்களுக்கு வீட்டு வசதி இல்லை, நாங்கள் நினைத்த இடத்திற்கு டிரான்ஸ்பர் கிடைக்கவில்லை, இந்தப் படி இல்லை ; அந்தப் படி இல்லை ; என்று கேட்கிற உயர்மட்ட அதிகாரிகள் இப்படி நோயாளிகளுக்கு உரிய சலைன் பாட்டில்கள் இல்லை ; இந்த மருந்துகள் இல்லை ; அந்த மருந்துகள் இல்லை ; என்று சொல்லி குரலைக் கொடுத்து அதை உடனுக்குடன் கிடைக்கக்கூடிய வழிகளைச் செய்வதற்கு ஆவன செய்திருப்பார்களானால், அவர்களை நாம் பாராட்டலாம். அதையெல்லாம் செய்யவில்லை. அந்த கடமையுணர்விலிருந்து அவர்கள்

தவறி விட்டார்கள், என்பதைதான் நான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன். நமது புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு நிதி ஒதுக்கவில்லை என்றோ; இதில் அசிரத்தையாக இருக்கிறார் என்றோ நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலைகள் நடக்கின்றன. மக்கள் குறை கூறுகிறார்கள், குமுறுகின்ற உள்ளத்தோடு வந்து சொல்லுகின்றேன் என்கிறார்கள், ஆகவே அதனை நான் குறிப்பிடுகின்றேன்.

முற்பகல் 11-45

சென்னை பொது மருத்துவமனையில் ஒரு ஆப்பரேஷன் செய்து கொள்ள போயிருந்தேன். ஒரு ஹானரரி சர்ஜன் ரங்க பாஷியம் அழகாக ஆப்பரேஷன் செய்தார். அங்கே டீன் ரவுண்ட்ஸ் வருகிறார், சூப்பரின்டெண்டிங் நர்ஸ் ரவுண்ட்ஸ் வருகிறார். கிளீன் பண்ணி இருக்கிறார்களா; சுத்தமாக இருக்கிறதா என் றெல்லாம் பார்ப்பதற்கு வருகிறார்கள், வயிற்றிலே ஆப்பரேஷன் பண்ணிக்கொண்டு, அந்தக் கழிவுகள் எல்லாம் வருவதற்கு ஒரு குழாயைப் போட்டு டப்பா மாதிரி ஒன்றை வைத்து தொங்க விடுகிறார்கள். டாக்டர் சொல்கிறார், இன்பெக்ஷன் வந்துவிடும், ஆகவே, கேர்ஃபுல்லாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று. அவர் அவ்வளவு பயப்படுகிறார். என்னைக் கொண்டுவந்து அந்த ரூமிலே போட்டவுடனே அதை எதிலே வைத்தார்கள் என்றால், எத்தனையோ வருடத்திற்கு முன்னால் சப்ளையான குப்பைக் கூடை, அதை கவிழ்த்து வைத்து அதிலே இதை வைத்தார்கள். இதைப்பார்வையிட வருகிற டீனும் ஒன்றும் சொல்ல மாட்டேங் கிறார்; சூப்பரின்டெண்டிங் நர்ஸும் ஒன்றும் சொல்ல மாட்டேங் கிறார்; அப்புறம் இன்பெக்ஷன் வராமல் என்ன செய்யும். ஆகவே, இப்படிப்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. எனக்கே, அதாவது ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த நிலைமை என்றால், சாதாரண ஆட்களுக்கு எப்படி இருக்கும். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலேயே நிலைமை அப்படி இருந்தது. ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம் சொல்லவேண்டுமென்றால், டிரிங்கிங் வாட்டர். ஆஸ்பிடலிலே ஆங்காங்கே ஹீட்டர்கள் வைத்ததற்குரிய அடையாளங்கள் இருக்கின்றனவே தவிர அவைகளெல்லாம் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலை



இருக்கிறது. குடிதண்ணீர் வேண்டுமென்று கேட்டால், நர்ஸுகள் இருக்கின்ற ரூமிலே சிரிஞ்சுகள் சுடவைக்கின்ற ஹீட்டரில், அந்த பேசினில், யூஸ்டு சிரிஞ்சுகளெல்லாம் அதிலேயே கிடக்கும். அந்த ஹீட்டருக்கு மத்தியிலே ஒரு சலைன் பாட்டிலில் தண்ணீர் ஊற்றி அதை சுடவைத்து எடுத்து வருகின்ற நிலைமைகளெல்லாம் இருக் கின்றன. ஆகவே, இந்த ஆட்சிக் காலத்திலேயாவது இதற்கு நீங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து, குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல், உள்ளே தங்குகின்ற நோயாளிகளுக்கு, இலகுவான முறையிலே, சுகாதாரமான முறையிலே தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு, ஹீட்டர்களை வைப்பதற்கும் ஏற்பாடு களைச் செய்யவேண்டும். ஏனென்றால், சுடுதண்ணீர் கிடைக்க வில்லை. நோயாளிகள் ஹீட்டர் வைத்துக்கொள்ளக் கூடாது; ஸ்டவ் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சட்டமே இருக்கிறது. எனவே, இதுகுறித்து கவனம் செலுத்தி, அதிக முக்கியத்துவம் கொடுத்து அவைகளை நீங்கள் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே வராண்டாவுக்கு வராண்டா இரும்பு கேட் போட்டு அதிலே வெளியிலிருந்து பார்க்க வருபவர்களையெல்லாம் ரெகு லேட் செய்வதற்கு வாட்ச்மேன்களைப் போட்டு வைத்திருந்தார் கள். அதிலேதான் அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தினார்களேயொழிய, அத்தியாவசியமான குடிநீர்ப் பிரச்சினைக்கு அவர்கள் கவனம் செலுத்தவில்லை. ஆகவே, இதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஹாஸ்டலிலும் இந்த மாதிரி நிலைமைகள்தான் இருக்கின்றன. குடிக்கின்ற தண்ணீரிலே புழு வருகிறது. நாங்கள் கேட்டால் அங்கே உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், டேங்கை சுத்தம் செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். லாரிகளிலே கூவத்தி லேயிருந்து அந்தத் தண்ணீரைக் கொண்டு வருகிறார்களா அல்லது எங்கேயாவது சாக்கடையுடன் குடிதண்ணீர் வருகிற பைப்பிலே, ஏதாவது கலந்து விட்டதா என்று தெரியவில்லை. இதையும் நீங்கள் உடனடியாகக் கவனித்து நல்ல குடிநீரை தரு வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதனால் அந்தத் தண்ணீர் அப்படி இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். ஏனென்றால் எங்களுக்கெல்லாம் ஒரே பயமாக இருக்கிறது. ஏற்கெனவே ஒரு முறை,

இந்தத் தண்ணீரைக் குடித்ததால் எனக்கு காலரா அட்டாக் ஆகி நான் ஆஸ்பிடலில் அட்மிட் ஆனேன். எங்களுக்கு இதற்கு இன்னும் எதிர்ப்பு சக்தி வரவில்லை. சென்னையிலே வாழ்கின்றவர்களுக்கு அது சரியாகிவிட்டது. எனக்கு இன்னும் அட்ஜஸ்ட் ஆகவில்லை. ஆகவே, நீங்கள் அந்தத் தண்ணீருக்கு கொஞ்சம் மருந்து போட்டு நல்லபடியாக சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்புறம் இந்த ஹெட் ஆப் டிபார்ட்மெண்ட்ஸ் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு துறையிலே உள்ள அதிகாரிகளும் ஐ.ஏ.எஸ். படித்துவிட்டு இருப்பவர்களைப் பார்த்தால், கலெக்டராக இருப்பதற்கு 3 வருடம் கொடுக்கிறார்கள். அதேமாதிரி டைரக்டர் மற்ற பதவிகளுக்கு வருகிறவர்களுக்கு எல்லோருக்குமே மூன்று வருடம் சேஞ்ச் ஆகி வருவது மாதிரி வாய்ப்புக் கொடுத்தால், இதனால் நிறைய பேருக்கு வாய்ப்பு கிடைக்கும். அவர்களும் திறம்பட செயல்பட்டு, தங்கள் தங்கள் திறமையைக் காட்டுவதற்கு, உயர்மட்ட அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ் டிபார்ட்மெண்டை பார்த்தீர்களானால் ஒரு அழகான சாதனையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு நிகழ்த்தி இருக்கிறார்கள். அதை நவீனப்படுத்துவது குறித்து நான் சொல்ல வரவில்லை. அதுவும் அத்தியாவசியமான ஒன்று தான். காலம் கடந்து அது செய்யப்படுகிறது. ஆகவே, இந்த நேரத்திலேயாவது இதைச் செய்தார்களே என்று நான் அவர்களைப் பாராட்டுகிறேன். நான் சொல்ல வருவது என்னவென்றால், பணியிலே இருக்கும்போது, முக்கியமான கட்டங்களிலே தங்களுடைய உயிருக்கு ஆபத்து என்றுகூட எண்ணாமல் அந்த இடத்திலே தங்களுடைய பணியை ஆற்றி, அதிலே உயிர் இழக்கின்றவர்களுக்கு, அவர்களுடைய ரிடையர்மெண்ட் வயசு வருகிற வரைக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கு அந்தச் சம்பளத்தையும் கொடுத்து, குடும்பப் பென்ஷன் தருவேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கின்றார்கள். இது ஒரு மகத்தான திட்டம். உயிருக்குப் பாதுகாப்பு இல்லாதபோதிலும் கூட, தன்னுடைய குடும்பத்திற்கு, தன்னைச் சார்ந்தவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது என்ற ஒரு நிலை இருக்குமேயானால் நிச்சயமாக காவல்துறையிலே பணியாற்றுகின்றவர்கள் தங்களுடைய கடமையை உள்ள உறுதியோடு செய்வார்கள். அப்படி-





யில்லாததால்தான், இந்த விடுதலைப் புலிகள் வருகின்றபோது, கடற்கரைகளிலே வருகின்றபோது புதுக்கோட்டை என்று நினைக்கிறேன்; புதுக்கோட்டையோ தஞ்சாவூரோ தெரியவில்லை. காவல்துறையினர் பின்னாலே கையை வைத்துக்கொண்டு நடந்தார்கள் என்ற செய்திகளை பத்திரிகைகளிலே நான் படித்தேன். அந்த விடுதலைப் புலிகள் ஏ.கே. 47-ஐ காட்டுகின்ற நேரத்திலே அவர்கள் அப்படி நடந்து கொண்டார்கள் என்று படித்தேன். இனிமேல் அப்படிப்பட்ட நிலை வராது. எதிர்த்து போராடுகின்ற ஒரு நிலை வரவேண்டுமென்று சொன்னால் நவீனப்படுத்தப்பட வேண்டும்; நவீன ஆயுதங்கள் தரப்பட வேண்டும். இப்படிப்பட்ட பாதுகாப்பும் இருக்க வேண்டும். அதை இவர்கள் செய்திருக்கின்றார்கள். எனவே அந்தச் செய்கையை நாங்கள் பாராட்டுகிறோம். அதே வேளையிலே இந்தத் திட்டம், நம்முடைய தமிழ்நாட்டிலே வந்து தன் இன்னுயிரை இழந்த எங்களது அருமைத் தலைவர் ராஜீவ் காந்தியினுடைய மரணத்தோடு, தங்கள் உயிரையும் இழந்தார்களே, காவல்துறையைச் சார்ந்தவர்கள், அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அதோடு இராமநாதபுரத்திலே விடுதலைப் புலியினை எதிர்த்து, காவல்துறையைச் சேர்ந்த ஒரு காவலர் இறந்து இருக்கிறார். இவர்களுக்கும் ஒரு எக்ஸப்ஷனல் கிரௌண்டாக, ஸ்பெஷல் கிரௌண்டாக ட்ரீட் பண்ணி, ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்று எண்ணி அவர்கள் [illegible] செயல்பட்டு இருக்கமாட்டார்கள். எதையுமே எ[illegible] செயல்பட்ட அவர்களுடைய அந்தச் சேவையை [illegible] பாராட்டி அவர்களுக்கும் அந்தத் திட்டத்தின் நலன் போய்ச் சேருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்புறம், ஃபிரைவிங் ஸ்குவாட், செக் போஸ்டுகளெல்லாம் இருக்கின்றன. அரிசியைப் பொறுத்தவரையில், பரவலாக சிதம்பரனார் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், நெல்லை மாவட்டம் போன்ற மாவட்டங்களிலேயிருந்து, என் தொகுதியிலேயுள்ள காவல்கிணறு விலக்கைத் தாண்டி, கன்னியாகுமரி போய், அங்கேயிருந்து கேரளாவிற்குக் கடத்தப்படுகிறது. ஆனால் லார்ஜ் ஸ்கேல். இதற்கு எல்லோருமே உடந்தையாக இருக்கிறார்கள். செக் போஸ்ட் இருக்கிறது, ஃப்ளையிங் ஸ்குவாட் இருக்கிறது, போலீஸ் இருக்கிறது, ரெவின்யூ இருக்கிறது, எல்லாமே இருக்கிறது. நாகர்கோயிலிலே ஒரே நாளிலே 43 லாரிகள் அரிசி பிடிபட்டு இருக்கிறது. அப்பொழுது அது எந்த அளவிற்குப் போகிறது என்பதை நாமே

புரிந்து கொள்ள முடியும். இந்த அரிசியைப் பிடிக்கும்பொழுது
புரிந்து கொள்ள முடியும். இந்த அரிசியைப் பிடிக்கும்பொழுது,
என் தொகுதியிலேயும் ஆட்கள் இருக்கத் தானே செய்திருப்பார்கள். இந்த நெல்லை மாவட்டத்திலேயும், இந்தப் பகுதியிலேயும் எப்படிப் போயிற்று என்பதை நாம் சிந்தித்துப் பார்த்து இதைக் கொஞ்சம் செம்மைப்படுத்த வேண்டும்.

(முற்பகல் 11-50)

கேரளாவில் உள்ள தண்ணீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்புவதற்கு மறுக்கிறார்கள். அது கடலுக்குள்ளே போய்ச் சேருகிறது. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள அரிசி பூராவும் கன்னியாகுமரி மாவட்டத்து வழியாகக் கேரளாவுக்குக் கடத்திச் செல்லப்படுகிறது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அங்கே உள்ள செக் போஸ்ட், என்னுடைய கான்ஸ்டிடியன்ஸியிலே இருந்தே அது தொடங்கப்பட்டு விட வேண்டும். அது நல்முறையில் ஸ்ட்ரென்தன் பண்ணப்பட வேண்டும். இவ்வளவு மோசமான ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் அதற்கு அதிகக் கவனம் செலுத்தி, என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திசையன்விளையிலே பஸ்ஸிலே இரண்டு பெண்கள் 4 மூட்டை அரிசியை ஏற்றிக் கொண்டு போயிருக்கிறார்கள். கேரளாவிற்கு கொண்டு போய்க் கொடுத்தால் கிலோவிற்கு இரண்டு ரூபாயோ ஏதோ கிடைக்கும் என்று அப்படிச் செய்திருக்கிறார்கள். இதை அங்குள்ள ஆர்.ஐ., தாசில்தார் எல்லாம் பிடித்து, கேஸ் போட்டிருக்கிறார்கள். அந்தப் பெண் என்னிடம் வந்து அழுதவுடனே நான் போய்க் கேட்டேன், "என்னய்யா, என்ன பிரச்சினை இதில் ஏதாவது உதவி செய்ய முடியுமா?" என்று. அந்த அம்மாள் சொல்கிறது, "நான் வட்டிக்கு வாங்கி, இதிலே ஏதோ இலாபம் கிடைக்கும் என்று நினைத்துச் செய்து விட்டேன், இப்படி அரிசி விற்கக் கூடாது என்று எனக்குத் தெரியாது, இது சட்டத்திற்குப் புறம்பானது என்று எனக்குத் தெரியாது; ஆகவே நான் இதை இப்படிச் செய்தேன். என்னை மன்னித்து விட்டு விடுங்கள்" என்று. இப்படிக் கேட்கும் பொழுது நான் போய் ரெப்ரசெண்ட் பண்ணினேன். அப்பொழுது அந்த ஆர்.ஐ. சொல்கிறார், "இது ரேஷன் கடையிலேயிருந்து வந்த அரிசி, இந்தப் பச்சரிசி, இன்ன ரக அரிசி என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது; ஆகவே நான் இதை விட முடியாது"



என்று. நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்கின்ற கேள்வி என்னவென்று கேட்டால், திட்டவட்டமாக இந்த அரிசி ரேஷன் கடையிலே உள்ள அரிசி, இது திசையன்விளையிலே உள்ள கடையிலே கிடைத்தது என்று சொன்னால், இந்த அரிசி எப்படி அந்தக் கடைகளுக்குப் போவது? அதை இன்வெஸ்டிகேட் பண்ண வேண்டும் அல்லவா? அந்தப் பெண்ணிற்காக நான் கலெக்டரிடத்திலே கூட ரெப்ரசெண்ட் பண்ணினேன். அந்தப் பெண் என்னிடம் சொன்னது, "நான் சாராய வியாபாரத்திலே ஈடுபட்டிருந்தேன், எனக்கு ஏழெட்டுப் பிள்ளைகள், என்னுடைய புருஷன் என்னை விட்டுவிட்டு வேறே மாநிலத்திற்கு ஓடிப் போய்விட்டான். ஆகவே, இந்தப் பிள்ளைகளின் பஞ்சக் கொடுமையைத் தீர்ப்பதற்காகத்தான், பசிக் கொடுமையைத் தீர்ப்பதற்காகத்தான் ஏதாவது ஒரு வேலையைச் செய்யலாமே என்று வட்டிக்குக் கடன் வாங்கி இந்த வேலையைச் செய்தேன். இது இப்பொழுது தப்பு என்று சொல்லி விட்டார்கள். வேறு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் எனக்கு இந்த முதல் போய் விட்டது என்று சொன்னால், நான் நொடித்துப் போய் விடுவேன், இன்னும் கேவலமான விபச்சாரம் மாதிரி உள்ள தொழிலுக்குத் தான் நான் போக வேண்டிய ஒரு நிலை வரும்" என்று சொல்லி அழுத காரணத்தினால், "இன்றைக்கு இரவுக்கு என்னுடைய பிள்ளைகளுக்குக் கஞ்சி கொடுப்பதற்கு அரிசி தாருங்கள்" என்று கேட்ட காரணத்தினாலேதான் நான் அந்தத் தாலுக்கா ஆபீசுக்குப் போய் ரெப்ரசெண்ட் பண்ணினேன். இல்லாவிட்டால் நான் போய் இருக்கமாட்டேன். ஆனால், இது ரேஷன் கடை அரிசி என்று சொல்லி, அந்தப் பெண்ணை விடவில்லை. அந்த வழக்கை அவர்கள் பதிவு செய்தார்கள். ரேஷன் கடை அரிசி என்றால் அது எப்படி வந்தது என்பதை அவர்கள் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆகவே, அந்தப் பகுதியிலே அப்படி நடக்கிறது. அதற்காக அந்த அதிகாரிகளை நீங்கள் முடுக்கி விட்டு, எப்படி அந்தப் பகுதிகளிலேயுள்ள அந்தக் கடைகளுக்கெல்லாம் ரேஷன் கடை அரிசி செல்கிறது என்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, ட்ரான்ஸ்போர்ட்டைப் பற்றிச் சொல்ல வேண்டும். ட்ரான்ஸ்போர்ட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அதன் விளைவாக, திறந்தப்

பட்ட சில பேருந்துகள் என்னுடைய தொகுதியிலேகூட ஓட ஆரம்பித்திருக்கின்றன. பல்வேறு பகுதிகளிலேயிருந்து அந்தவித மான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நஷ்டம் வருகின்ற அளவிலே அது செயல்படுகிறது என்று சொல்லுகின்ற ஒரு நிலை இருந்தது மானிய அறிக்கையிலே. நான் கூடச் சொன்னேன்; நஷ்டத்திலே ஒரு எம்.டி. நடத்துவார் என்றால் அவரை மாற்றி விட்டு வேறு ஆட்களைப் போட்டு, திறமையுள்ளவர்களைப் போட்டு அதைச் செயல்படுத்திப் பாருங்கள் என்று சொன்னேன். இப்பொழுது கொஞ்சம் மாறுதல்களையெல்லாம் செய்திருக் கிறார்கள். பாராட்டுகிறேன். சில கிராமங்களுக்கு இந்த பஸ்களை விட முடியாது. நம்முடைய சமுதாயத்தில் ஒரு பெரிய கொடுமை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்பொழுது ஊரிலேயிருந்து 6, 7 கிலோமீட்டர்களுக்குத் தள்ளித் தள்ளிக் கொண்டு போய்க் கட்டி 300 வீடுகள், 200 வீடுகள், 100 வீடுகள் என்று இருக்கின்றன. இவர்கள் வேலை செய்வதற்கும், அங்கேயிருந்து நடந்து தான் இங்கே வர வேண்டி யிருக்கிறது. பேறு காலம், ஆஸ்பத்திரி இப்படி எதற்கு வேண்டு மானாலும் நடந்துதான் இங்கே வர வேண்டியிருக்கிறது. கோயில் குளம் என்றாலும் நடந்துதான் வர வேண்டியிருக்கிறது. ஆக, இந்த சின்ன இடத்திற்கெல்லாம் உங்களுடைய விதிமுறைகள் பஸ் விடுவதற்கு வழிவகுக்காது. இப்பொழுது இந்த வேன், டிராக் டர்களுக்கெல்லாம் வரியைக் கூட்டி விட்ட காரணத்தினாலே அது பாதிக்கப்படுகிறது. நான் குடியிருக்கிற ஊர் வாகைநேரு என்ற ஒரு சின்னக் கிராமம். திசையன்விளைக்கும் அதற்கும் பஸ் போக்குவரத்து ஜாஸ்தி இடையாது. 1½ ரூபாய் கொடுத்தால் டிராக்டர்களில் அங்கே விட்டு விடுவான். இவைகளுக்கு வரியைக் கூட்டி விட்டதால் இவைகள் தவிர்க்கப்படுகின்றன. பஸ்ஸும் இல்லை என்று சொன்னால், இரவு 7 மணிக்குப் பிறகு என்னுடைய பகுதியிலே பஸ் கிடையாது. என்னைப் போன்றவர்களும் அதைத்தான் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. கிராமப் பகுதியிலே நிறைய இடங்களிலே அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே, இந்த வேன், டிராக்டர்கள் ஆகிய இவைகளுக்கெல்லாம் கொஞ்சம் கனிவோடு கருணை காட்டி அந்த வரியைக் கொஞ்சம் குறைக்க வேண்டும். டூரிஸ்ட் பஸ், பெரிய பஸ்கள் இருக்கின்றன பாருங்கள், வீடியோ கோச்செல்லாம் வைத்து—இவர்களுக்குப் பஸ்ஸுக்கு உரிய வரியைப் போடலாம். ஏனென்றால் அவர்கள் நம்முடைய கார்ப்பரேஷன் பஸ்களுக்குப் போட்டியாக இன்த டிக்கெட் அழைத்து, சென்னைக்கு வருகிறீர்களா, திருச்சிக்கு





வருகிறீர்களா என்று அழைத்து அழைத்து பொருள் ஈட்டுகிறார் களே அன்றி அவர்கள் ஒன்றும் நஷ்டத்தில் ஓட்டவில்லை. அவர் களுக்கு இந்தச் சலுகையைக் குறைத்துக் கொண்டு, இவர்களுக்குக் கொஞ்சம் அந்த வரியைக் குறைத்தால் உதவிகரமாக இருக்கும். மூன்று இலட்சம் பேர் அதிலே தொழில் வாய்ப்பையும் பெறு கிறார்கள். அந்த ஓனர், கிளீனர், டிக்கெட் ஏற்றுகிறவர்கள் என்று சொல்லி அதிலேயும் அந்த வேலை வாய்ப்புகளெல்லாம் இருக் கின்றன. கிராமப்புற மக்களுக்கு இந்த டிக்கெட் போட்டு இவர்கள் அடிக்கும்பொழுது பயன் உள்ளதாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

பிறகு, கல்வித் துறை, கல்வித் துறையிலே கடந்த கருணாநிதி ஆட்சியிலே 'கன்சாலிடேட்டட் பே'-யிலே செகண்டரி கிரேட் டீச்சர்களை 800 ரூபாய் சம்பளத்திலே போட்டார்கள். இப் போது நடைமுறையில் எப்படி இருக்கிறது என்று பார்த்தோ மானால், ரெகுலராக ஏற்கெனவே இருந்த 'வேகன்சி' இருக்கிற தல்லவா? அது காலியாக ஆக—யாராவது 'ரிடையர்மென்ட்' ஆகிவிட்டால், செத்துப் போய் விட்டால்—அந்த இடங்களிலே 'கன்சாலிடேட் பே' டீச்சர்லை போடுகிறார்கள். அப்படி 'கன்சாலிடேட்டட் பே' டீச்சர்ஸ் போடும்போது, அவர்களை எப்படி அறிவிப்பார்கள் என்றால், எங்கேயாவது காடு கரைகளில், பள்ளிக்கூடமே இல்லாத ஒதுக்குப் புறங்களில், ஓராசிரியர் பள்ளி மாதிரி வைத்து, மூன்றாண்டு பணிபுரியுங்கள்; பிறகு நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். 'ரெகுலர்' வேகன்சியிலே அவ்வாறு போடுகிறார்கள்.

சிறுபான்மைப் பள்ளிகளின் பிரச்சினையை சரியாக யாருமே புரிந்து கொள்ளவில்லை. கருணாநிதி ஒரு வாரியமே போட்டிருந்தார், சிறுபான்மை வாரியம் என்று சொல்லி, அந்த வாரியம் சரியாக அதன் வேலையை செய்ததா, செய்யவில்லையா என்பது ஒன்றுமே புரிய வில்லை. இன்றைக்கு சிறுபான்மைப் பள்ளிகள் என்று சொல்லும்போது, இவர்கள் எல்லாம் 'பயனீர்'—ஆக இந்தக் கல்வித் துறையிலே இருந்து, கல்வியை நல்ல முறையிலே தந்து கொண்டிருக்கிற ஒரு ஸ்தாபனமாக இருக்கிறார் கள். இந்தப் பள்ளிகள் எல்லாம் 40 வருடங்களான, 20 வருடங்க ளான பள்ளிகளாக இருக்கின்றன. பல ஆண்டுகளாகப் பணி புரிந்து, நல்ல பெயர் வாங்கிய பள்ளியாக இருக்கின்றன. இன் றைக்கு 45 அல்லது 50 'ஸ்டூடண்ட்ஸ்' வைத்து ஒரு செக்ஷன்

[திருமதி ரமணி நல்லதம்பி] [1991 செப்டம்பர் 28

ஓபன் பண்ணி, அதற்கு ஒரு 'கிராண்ட்' கொடுக்கவில்லை என்று
சொன்னால் எனக்கு என்னமோ அது நியாயமாகத் தெரிய
வில்லை. இவர்களுக்கு அரசால்—அந்த 'ஸ்டூடண்ட்ஸ'க்கு
கொடுப்பது அரசினுடைய கடமைதான்; படிப்பு கொடுக்க
வேண்டியது. அங்கே அரசினுடைய பள்ளிக் கட்டடங்கள்
இல்லை; 'அகாமடேஷன்' செய்ய வேண்டிய நிலைமை
இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பள்ளிகளுக்கெல்லாம்,
அவர்களுக்கு வேறு வாய்ப்பு இல்லாதிருக்கிற காரணத்தினால்,
நல்ல முறையில் நடத்துகிற, நல்ல 'ரிசல்ட்' தருகிற பள்ளி
களுக்கு இவைகளை 'சேங்க்ஷன்' செய்து தர வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, நிறைய மேல்நிலைப் பள்ளிகளிலே கடைநிலை
ஊழியர்களே கிடையாது. பியூன் கிடையாது; அட்டெண்டர்
கிடையாது. இதையெல்லாம் வாத்தியாரா செய்வார்? ஆகவே,
அரசாங்கம் இதைக் கருத்தில் கொண்டு, எந்தெந்தப் பள்ளி
களுக்கு அந்தக் குறைபாடுகள் இருக்கின்றனவோ, அந்தந்தப்
பள்ளிகளுக்கு ஒரு வாட்சிமேன் அல்லது பியூன் என்று
போட்டீர்கள் என்றால்—எதையாவது ஒன்றைக் கொடுக்கலாம்—
எல்லா வேலைகளையும் சேர்த்து நீயே செய் என்று சொல்லி
போடலாம். ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள்
உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிறைய இடங்களில் என். எம். ஆர். களை போட்டுவிட்டு,
அவர்களை நிரந்தரமே செய்வதில்லை. நம்முடைய சட்ட
மன்றத்திலே கூட, எடுத்துக் கொண்டால்..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
கல்வியமைச்சர்.

* மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கல்வித் துறையில் ஆசிரியர்கள் நியமனம் கன்சாலிடேட்டட்
ரெம்யூனரேஷன்' முறைப்படி நியமிக்கப்படுகிறார்கள் என்றார்
கள். மற்றும், சிறுபான்மைப் பள்ளிகளைப் பற்றிச் சொன்னார்
கள். கல்வி நிறுவனங்களைப் பற்றிச் சொன்னார்கள். சிறுபான்
மைக் கல்வி நிறுவனங்களில் அவர்கள் தொண்டு செய்கிறார்கள்;
தொடர்ந்து 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள், 50 ஆண்டுகள் என்று
அப்படிப்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன. இன்றைக்கு அதைப்
பயன்படுத்திக் கொண்டு, வியாபார ரீதியாக தொடங்கி இருக்கிற
நிறுவனங்களும் இருக்கின்றன. ஆகவே, அவர்கள் தங்களுடைய



1991 செப்டம்பர் 28] [திரு. இராம. வீரப்பன்]

பள்ளிகளிலே புதிய வகுப்புகளை உருவாக்குகிறபோது, புதிய
ஆசிரியர்களை நியமிக்கின்றபோதும், அவர்களுக்குள்ள உரிமை
யின்படி, முன்னாலே அரசினுடைய அனுமதி பெற்றுக் கொண்டு
செய்வதில்லை. ஆகவே, அவர்களே புதிய வகுப்புக்களை
உருவாக்குகிறார்கள்; புதிய ஆசிரியர்களை நியமித்துக் கொள்
கிறார்கள். இன்னும் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, அதற்குள்ள
ஊதியத்தை அரசாங்கம் தர வேண்டும் என்று கேட்கிற உரிமையை
வைத்திருக்கிற அந்த நிறுவனங்கள், அரசாங்கம் ஆசிரியர்களை
எப்படி தேர்ந்தெடுக்கிறது என்கிற விதிமுறைகளுக்குட்பட்டு
அவர்கள் நடந்துகொள்ளவில்லை. பல ஆண்டுகளாக, 15
ஆண்டுகள், 20 ஆண்டுகள் வேலை பயிற்சி நிறுவனங்களிலே பதிவு
செய்து கொண்டு, வேலை பெற முடியாமல் ஒரு பக்கத்திலே
இருக்கிறார்கள். ஆனால், இந்த சிறுபான்மை நிறுவனங்களில்,
இவைகளிலே இருந்து எடுக்க வேண்டும் என்கிற அவசியமே
இல்லாமல் ஒரு சிலர் உடனடியாக வேலைக்கு எடுக்கப்பட்டும்
விடுகிறார்கள். ஒரு பக்கத்திலே ஆண்டாண்டு காலம் வேலை
யற்றவர்கள்; இன்னொரு பக்கத்திலே இன்றைக்கு, நேற்று
அல்லது ஓராண்டுக்கு முன்னாலே பயின்றவர்களுக்கு வேலை
வாய்ப்பும் கிடைக்கிறது. எல்லோருக்கும் வேலை கிடைக்க
வேண்டும் என்பதுதான். ஆனால், அதிலேயும் முன்னுரிமை
அளிக்கப்படாமல், அரசினுடைய விதிமுறைகளைப் பின்
பற்றாமல்; சில நிறுவனங்கள் அப்படியே அவர்களை நியமித்துக்
கொள்கிறார்கள். அவ்வாறு நியமித்துக் கொண்டதற்குப் பிறகு
அரசினிடத்திலே வந்து, எங்களுக்கு அங்கீகாரம் கொடுங்கள்;
வகுப்புகளை அங்கீகரித்துக் கொள்ளுங்கள்; இதற்குப் பணம்
தாருங்கள்; சம்பளம் தாருங்கள் என்று கேட்கிறார்கள்.
அரசாங்கத்தினுடைய நிதிநிலை உங்களுக்குத் தெரியும். இங்கே
உங்களிடத்திலே எவ்வளவு மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்
கிறோம் என்பது தெரிகிறது. நான் இப்போது ஒன்றைச்
சொல்கிறேன். இந்தக் கல்வித் துறைதான் மிகப் பெரிய
பணக்காரத் துறை. ஆனால், இதுதான் மிகுந்த வறுமையோடு
போராடிக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர்
அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1,300 கோடி
ரூபாய் இதற்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் பள்ளிக்
கூடம் கட்டுவதற்கு முடியவில்லை. நீங்கள் கேட்கிற ஆசிரியர்
களைப் புதிதாக நியமனம் செய்ய முடியவில்லை. அதற்காக
அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே சிறுபான்மை

[திரு. இராம. வீரப்பன்] [1991 செப்டம்பர் 28

நிறுவனங்கள் கொஞ்சம் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு Commitment ஒரு புதிய ளைமையை அரசாங்கத்திற்குத் தருகிறபோது, தயவு செய்து அரசாங்கத்திடம் தெரிவித்து விட்டாவது, அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது கூட இல்லை; தெரிவித்து விட்டாவது அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எல்லா நிறுவனங்களுக்கும் இது பொருந்தும்.

(நண்பகல் 12-00)

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை பள்ளிகளைப் பொறுத்த வரையில் வழக்குகள் நீதிமன்றத்திலே இருந்தபோதும்கூட, முதல் அமைச்சர் அவர்கள் அந்த ஆசிரியர்களுக்கு என்னுடைய கோரிக்கையை ஏற்று, ஊதியத்தை இந்தக் கல்வி ஆண்டின் முதல் மாதத்திலே தரவேண்டுமென்று கேட்டு இருந்தேன். தந்து இருக்கின்றார்கள். அதற்கான மிகுந்த நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். நான் என்ன சொல்லுகிறேன் என்று சொன்னால், அங்கே வேறு பள்ளிகள் இடையாது. நீங்கள் பிக்ஸ் பண்ணியிருக்கும் அளவுக்கும் அதிகமான மாணவர்கள் தான் அங்கே பயின்று கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் ஒரு பிரச்சினையாக எழுப்பிவிட்ட காரணத்தாலேயே அதற்குப் பதில் அளிக்க, விளக்கமளிக்க வேண்டியதற்காகச் சொல்கிறேன். அப்படி இன்றைக்கு ஆயிரக்கணக்கான பள்ளிகளில் ஆசிரியர்கள் தேவைப் படுகிறார்கள். ஒரு ஆண்டிற்கு 6,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். இன்றைக்கு நம்மால் ஆயிரம் ஆசிரியர்களைத்தான் ஒதுக்க முடிந்திருக்கிறது. ஆகவே, இருப்பதைத்தான் பகிர்ந்து கொள்ளவேண்டும். அவர்களுக்குள்ள சிறுபான்மை உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு, எங்களுக்கு முதலிலே கொடுங்கள் என்று கேட்டால் அப்படிக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் இருக்கிறது. இன்றைக்கு நீங்கள் சொல்கிறதுபோல், பள்ளிக்கூடங்கள். அரசாங்கப் பள்ளிக்



1991 செப்டம்பர் 28] [திரு. இராம. வீரப்பன்]

கூடங்கள் ஆகியவற்றில் 400 அல்லது 500 மாணவர்கள் இருக்கிறார் கள். ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்களுக்கு மேல் இருப்பது அவ்வளவு முறையல்ல. அது சரியாகவும் இருக்காது. நெறி முறையல்ல. ஆனால் நம்மாலே அதற்குரிய ஆசிரியர்களை தர முடியவில்லை. இருக்கிற கஷ்டத்தைச் சொல்லுகிறேன். தயவு செய்து எல்லா நிறுவனங்களும், அவர்கள் சிறுபான்மை நிறுவனங் களாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளிகள் அரசு உதவி பெறுகிற நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கொஞ்சம் சூழ்நிலைக் கேற்ப, அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறியதற்கு நன்றி. டிரெயினிங் ஸ்கூல் பற்றிப் பேசு கின்றபோது. வேலைவாய்ப்புக்காக மட்டும்தான். பெண்கள் படிக்கின்றார்கள் என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கள் பகுதியில் ஒரு மாப்பிள்ளை பெண்ணைக் கேட்கிறான் என்றால், கற்று, தேர்ச்சி பெற்றிருந்தால், ஒரு வீட்டிற்கு தனக்கு நேர்ந்து விட்டால் தன்னுடைய குழந்தை களையும், குடும்பத்தையும் பார்த்துக் கொள்வாள் என்ற நிலையிலேதான் அந்தக் கல்வி அமைந்திருக்கிறது. எல்லோரும் வேலைக்குப் போகவேண்டுவதற்காகப் படிக்கவில்லை. ஆகவே, படிப்பில்லாத பெண்களை மாப்பிள்ளைகள் விரும்புவது இல்லை. [illegible] ஒரு குவாலிபிகேஷன். ஒரு இக்கட்டான சூழ் நிலை வரும்போது, தேவைப்படும்போது, இருக்கட்டுமே என்று தான் அந்தக் கல்வி பயன்படுகிறது. ஆகவே, அந்தக் கல்வியை அந்த டிரெயினிங் ஸ்கூலை. பெண்கள் படிப்பதற்கான அந்தப் பயிற்சியை, அரசு பள்ளிகளிலே தாராளமாகத் தரக்கூடிய முறையில், வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பீர்களேயானால், தனியார் பள்ளிகளுக்குப் போவதும், பெங்களூரிலே படித்தேன். அங்கே படித்தேன், இங்கே படித்தேன் என்று சொல்வதும், போன்ற வாய்ப்புகள் தவிர்க்கப்படும். பெண்களுக்கு இப்படிப் பட்ட ஒரு பாதுகாப்பைத் தருகின்ற வகையிலே. வேலை உத்தர வாதம் அல்ல, அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு ஏதாவது எமர்ஜென்சி தேவைப் படும் என்கிற நிலையிலே அந்தக் கல்வியை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் அம்மா கூட டீச்சர் டிரெயினிங் கற்றவர் தான். இன்று வரை வேலை பார்க்கவில்லை.

தலைமையிலேயும் அதுபோல ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து இந்தச் சட்டத்தை சரியாக செயல்படுத்துகிறார்களா இல்லையா என்பதைக் கண்காணிக்க வேண்டும். புதிதாக கூட நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். இதை செய்தாலே நாம் ஒரு மாபெரும் சேவையை இந்த சமுதாயத்திற்குச் செய்தவர்களாவோம். அப்படிப்பட்ட ஒரு குழுவை மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அமைத்திட வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஆக, நேசமற்ற நிலையிலே இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நான் மிகவும் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

* திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்தச் சட்ட முன்வடிவின் மீது ஆய்வாக என்னை இந்த அவையில் பேச வாய்ப்பளித்தமைக்காக முதலில் மனமார்ந்த என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அடிப்படையாக இருக்கின்றது யார் என்றால், சில பெருமானைப் பற்றி ஒன்றை சொல்லுவார்கள். அவருடைய புகழைப் பாடுகின்றபொழுது "தென் நாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று சொல்லுவார்கள். அதைப் போல எங்களைப் பொறுத்த அளவிலே, குறிப்பாக மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த அளவிலே நாங்கள் எல்லாம் சொல்ல வேண்டுமேயானால் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய புகழைப் பாட வேண்டுமேயானால் 'தென் தமிழ்நாட்டை ஆளுகின்ற தாயே போற்றி. எந்நாட்டவரும் வியக்கும் நிர்வாகத் திறன் மிக்க எங்கள் தெய்வமே போற்றி' என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பல்வேறு பிரச்சினைகளை எல்லாம், என்னுடைய தொகுதி அளவிலே இருக்கின்ற, அண்ணா மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளை எல்லாம் இங்கே சொல்வதற்கு எனக்கு வாய்ப்பாக இந்த நேரம் அமைந்திருக்கிற காரணத்தினால், குறிப்பாக எங்களுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த நிதி நிலை அறிக்கையானது தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களும் வரவேற்கக்கூடிய ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாக இருக்கின்ற





சூழ்நிலையில், ஏழையெளிய பல்வேறு மக்களுக்கு எல்லாம் அவர் சலுகைகளை அளித்து, புதிய பொருளாதாரத் திட்டங்களையும் பல துறைகளில் பல்வேறு தொழிற்சாலைகளைத் தொடங்குகிற வாய்ப்பு கொடுத்திருக்கிற மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில், இன்றையதினம் கடந்த 25 நாட்களாக பல்வேறு மானியக் கோரிக்கைகள் மீது இங்கே விவாதம் நடைபெற்றது.

ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும், குறிப்பாக பல்வேறு புதிய திட்டங்களையும், புதிய சலுகைகளையும் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருந்தாலும், எங்களுடைய அண்ணா மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே அவர்கள் பல்வேறு திட்டங்களை, பல்வேறு புதிய சலுகைகளை எல்லாம் அறிவித்திருப்பதை நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், நான் மட்டுமல்லாமல் எங்கள் அண்ணா மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மனமுவந்து அதனை இன்று வரவேற்பார்கள். அதுமாத்திரமல்லாமல், திண்டுக்கல் என்று சொன்னால், அனைத்து இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய [illegible] உள்ளவும் மறக்காத நிலைக்கு திண்டுக்கல் நினைக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பற்றி அறிந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றாக தெரியும் என்ற வகையில் இன்றையதினம் திண்டுக்கல்லை எடுத்துக்கொள்வோமானால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1971 ஆம் [illegible] தன்னுடைய கட்சிக்கு அங்கீகாரம் அளித்தது [illegible] என்ற வகையிலே அந்த திண்டுக்கல் நகரத்திற்கும் பல்வேறு சலுகைகளை வழங்கி, ஒரு புகழ்மிக்க மாவட்டமாக்கி பெருமையைச் சேர்த்தார்கள் என்பது இந்தத் தமிழகத்திலே உள்ள அனைவருக்கும் தெரியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வகையிலே திண்டுக்கல் மக்கள் செய்த அந்த அங்கீகாரத்திற்கு, அந்த நன்றிக்கு, செய்நன்றி அறிதல் என்பதனுடைய பொருளை அறிந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் "செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது" என்ற [illegible], தனக்குச் செய்த உதவிக்காக பல்வேறு திட்டங்களை எல்லாம் அங்கே கொண்டு வந்தார்கள். அந்த வகையிலே பார்க்கின்றபோது அண்ணா மாவட்டம் என்று அந்த திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தைப்

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 28

தட்டும் ஒலி) இந்த நூற்றாண்டிலே தமிழகத்திலே இத்தகைய ஒரு பெண்மணி தோன்றியதும் இல்லை. இனி தோன்றப் போவதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இவர் களுடைய உயிரைப் பாதுகாப்பது என்பது மிக, மிக, மிக, மிக, அவசியமான ஒன்று, தமிழ்நாட்டில் இருக்கிற 6 கோடி மக்களும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிற அவர்களைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லலாம். அவர்கள் நின்றால் அது மாநாடு, நடந்தால் அது பேரணி (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு மாபெரும் மக்கள் செல்வாக்கைப் பெற்றி ருக்கின்ற அவர்களுக்கு ஒரு சின்ன ஆபத்து வந்தாலுமேபோனால் அது ஏற்கெனவே மாபெரும் கறையை ஏற்படுத்தி இருக்கிற தமிழ்நாட்டில் இன்னொரு மிகப்பெரிய கறையை இந்திய வரலாற் றிலே ஏற்படுத்திவிடும். எனவே எத்தனை கோடி பணம் செலவா னாலும் பரவாயில்லை. நம்முடைய காவல் துறையை மிக மிக தவீரப்படுத்தி அந்தப் பாதுகாப்பை ஏற்படுத்தவேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் இன்றைக்கு சிறப்பாக நடைபோட்டுக்கொண்டிருக் கிறது. இந்த மாமன்றத்தில் மாபெரும் தலைவர்களின் படங் களை எல்லாம் திறந்து வைத்தார்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். தந்தை பெரியாரின் படத்தை, பேரறிஞர் அம்பேத்காரின் படத்தை, தேவர் திருமகன் முத்துராமலிங்கத் தேவர் படத்தை, மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய படத்தை, இப்படியெல்லாம் மிகப்பெரிய தலைவர்களுடைய படத்தை எல் லாம் இந்த மாமன்றத்தில் திறந்து வைத்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இன்னும் ஒரே ஒரு இடம் மட்டும் தான் இங்கே காலியாக இருக்கிறது. இந்தப் படங்களை எல்லாம் திறந்து வைத்த அந்த மாமனிதருடைய படத்தை புரட்சித்தலை வருடைய படத்தை அந்த இடத்திலே திறந்து வைத்தால் . . .

(மணி ஒலிக்கல் 12-10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தொடரின் போது ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் விவாதத்





1991 செப்டம்பர் 28] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

திற்குப் பதில் கூறுகையிலேயே, அப்போதே இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படம் இந்த மாமன்றத்திலே திறக்கப்படும் என்று அறிவித் திருந்தேன். அந்தப் படம் ஒரு சிறந்த ஓவியரால் வரையப் பட்டுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையான படம் தயாரான உடனேயே இந்த மாமன்றத்தில் அந்த வெற்றிடத்தில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து அறநிலையத் துறையிலே ஒரு புதிய எழுச்சியை இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள். கோயில்கள் கேட்பாரற்று கிடக்கின்ற அந்த நிலையை மாற்றி பாழ்பட்டுக் கிடக்கின்ற பல கோயில் களிலே திருவிளக்கு ஏற்றவேண்டும் என்று இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சிறப்பு முயற்சியை மேற்கொண்டு அதற்காக தொழில் அதிபர்களிடமும், பலரிடமும் — கேட்டுக்கொள்வதாகச் சொல்லி அந்த துறையினரே செய்து தந்தால் அதை பயன்படுத் துவதற்கு செய்துகொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அதிலே ஏதோ ஒரு பெரிய தவறு நடந்துவிட்டதாக கருணாநிதியினுடைய அடிவருடிகளாக இருக்கின்ற ஒரு சிலர் வேறு விதமாக பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக் கிறார்கள். நான் அவர்களுடைய பெயர்களை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. அதனாலே ஒரு பெரிய மத சார்பற்ற நிலைமை மாறுகிற மரபு வந்து விட்டதாக இன்றைக்கு வெளியிலே அப்படி ஒரு பிரச்சாரத்தைச் சிலர் திட்டமிட்டுச் செய்துகொண்டு இருக் கிறார்கள்.

பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் சட்டத்துறை அமைச் சராக இருந்தபோது, முதல் சட்டத்துறை அமைச்சராக நம்முடைய அவையிலே இருந்தபோது ஒன்றைச் சொன் னார்கள். கோயில்களிலே வழிபாடு செய்கிறபோது, அர்ச்ச கர்களை இருக்கின்றார்களே அந்த அர்ச்சகர்களுக்கு பயிற்சி ஏற்படுத் துவதற்கு இந்தியா முழுவதிலும் ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டும், அந்தக் கல்லூரியிலே ஒரு குலம் என்று இல்லாமல் எல்லோருமே பயில்கின்ற அளவுக்கு நிலைமைகள் உருவாக வேண்டும் என்று சொன்னார்கள். அது 50 ஆண்டு காலத்

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 28

திற்குப் பிறகு இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே தமிழ் நாட்டிலேதான் முதன்முறையாக செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு ஆன்மிகக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருகிறபோது அதிலே ஒதுக்கீடு வரலாம். அதிலே அவர்களும் பயிலலாம். அதிலே எல்லோருமே பயில்வதற்கு வழியிருக்கிறது. யார் வேண்டுமானாலும் வரலாம் என்ற நிலையை, புரட்சியை இந்தத் துறையிலே உருவாக்கியிருக்கிறார்கள். இதைச் சொல்லி, சுட்டிக் காட்டி, பாராட்ட மறுப்பவர்கள் அதை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மிகுந்த வேதனை அளிக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எப்போதுமே ஐந்தாவது நிமிடத்தில் மணியடித்துவிடுவார்கள்.

இன்னொன்றைச் சொல்லவேண்டும். பல்வேறு சிறப்புச் செய்திகளை நாம் இங்கே தெரிவித்திருக்கிறோம். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசிலே சில முறையற்ற செயல்கள் செய்திருப்பதை எல்லாம் இங்கே நம்முடைய உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசிலே கடந்த முறை முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள். அவர்களுடைய கட்சி அலுவலகம் இருக்கிறதே, அறிவாலயம். அந்த அறிவாலயத்திற்குப் பக்கத்திலே ஒரு பெட்ரோல் பங்க் இருக்கிறது. அந்த எதிரில் இருந்த கட்டடத்திற்கு அந்தப் பெட்ரோல் பங்க் தடையாக இருக்கின்றது என்ற காரணத்திற்காக அவர்களைக் கட்டாயப் படுத்தி, உங்களுக்கு வேண்டுமானால் அண்ணா நகரிலே 12 கிரவுண்ட் நிலம் தருகிறோம். அந்த 12 கிரவுண்டிலே அந்தப் பெட்ரோல் பங்க்-ஐ மாற்றிக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கும் கட்டாயப்படுத்தித் தந்திருக்கிறார்கள். அது முறைகேடான ஒன்று. தனிப்பட்ட ஒரு கட்சியினுடைய நலத்திற்காக இங்கே இருக்கின்ற பெட்ரோல் பங்க்-ஐ நீங்கள் அண்ணா நகருக்கு மாற்ற வேண்டும் என்று அங்கே 12 கிரவுண்ட் வழங்கியிருக்கிறார்கள். இப்படி ஒரு மாபெரும் மோசடியை அன்றைக்கு வீட்டுவசதித் துறையிலே செய்திருக்கிறார்கள். இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று இங்கே நான் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 28] [திரு. செ. கு. தமிழரசன்]

பல்வேறு நலத் திட்டங்களை தம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசு செய்திருக்கிறது. பேரறிஞர் அம்பேத்கார் அவர்களுடைய கனவுகளை நனவாக்குகின்ற வகையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு திட்டங்களை இந்த அரசிலே செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிதி ஒதுக்கீடு அவர்களுக்கு போதாது. இவ்வளவு கோடி மக்களுக்கு இவ்வளவுதான் நிதி ஒதுக்கீடா? என்று இன்றைக்கு எதிர்க்கட்சி பத்திரிகைகளிலே சில செய்திகளைப் போட்டு, அதையும் பெரிதுபடுத்தி, அந்த சமுதாயத்து மக்களைத் தூண்டி விட வேண்டுமென்று சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த 112 கோடி போதாது. இந்த 112 கோடி என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனியாக சிறப்புத் திட்டம்தான். ஆனால் மற்ற எல்லா துறைகளின் மூலமும் வழங்குகிற நிதியில் அவர்களுக்குப் பங்கு இருக்கிறது என்பதை அறிந்தவர்கள் யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட எல்லா திட்டங்களையும், எல்லா துறைகளிலும் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே நினைவு படுத்திப் பாராட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

[illegible]

இன்னொன்றையும் நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக சொல்ல விரும்புகிறேன். எவ்வளவோ திட்டங்களை செய்திருந்தாலும், சட்டப்பூர்வமாக இட ஒதுக்கீடு, 18 பர்சன்ட் எல்லா இடங்களிலும் இருக்கிறது. பதவி உயர்வு, பணிகள் போன்ற எல்லா நிலைமைகளும் இருக்கின்றன. ஆனால் 44 ஆண்டு கால சுதந்திரத்திலே இன்னமும் எந்தத் துறையிலும் இந்த 18 பர்சன்ட் என்கிற விழுக்காட்டைப் பூர்த்தி செய்வதே இல்லை. 18 விழுக்காட்டுக்கு மேலே தாண்டுவதில்லை. உதாரணத்திற்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் குரூப் 1 சர்வீஸ் இருக்கிறது. அதிலே எவ்வளவு நிறைவு செய்திருக்கிறார்கள் என்றால், 10 விழுக்காட்டை கூட நிறைவு செய்யவில்லை. அதுபோல, தனியார் நிறுவனங்களிலே, கல்லூரிகளிலே, பொது நிறுவனங்களிலே எல்லாம் இந்த 18 பர்சன்ட் நிறைவு செய்யப்பட வேண்டும். ஆக, இப்போது இருக்கின்ற இந்த சலுகைகளை அவர்கள் அனுபவிப்பதற்கு வேண்டிய கண்டிப்பான ஒரு சட்டத்தை, கண்காணிக்கின்ற ஒரு குழுவை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே—பாராளுமன்றத்திலே பிரதமர் தலைமையில் அப்படிப்பட்ட ஒரு குழு இருக்கிறது—இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய

தலைமையிலேயும் அதுபோல ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து இந்தச் சட்டத்தை சரியாக செயல்படுத்துகிறார்களா இல்லையா என்பதைக் கண்காணிக்க வேண்டும். புதிதாக கூட நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். இதை செய்தாலே நாம் ஒரு மாபெரும் சேவையை இந்த சமுதாயத்திற்குச் செய்தவர்களாவோம். அப்படிப்பட்ட ஒரு குழுவை மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அமைத்திட வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஆக, நேரமற்ற நிலையிலே இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நான் மிகவும் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

* திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்தச் சட்ட முன்வடிவின் ஓர் அங்கமாக என்னை இந்த அவையில் பேச வைத்தமைக்காக முதலில் மனமார்ந்த என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அடிப்படையாக இருக்கின்றது யார் என்றால், சிவபெருமானைப் பற்றி ஒன்றை சொல்லுவார்கள். அவருடைய புகழைப் பாடுகின்றபொழுது "தென் நாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று சொல்லுவார்கள். அதைப் போல எங்களைப் பொறுத்த அளவிலே, குறிப்பாக மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த அளவிலே நாங்கள் எல்லாம் சொல்ல வேண்டுமேயானால் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய புகழைப் பாட வேண்டுமேயானால் 'தென் தமிழ்நாட்டை ஆளுகின்ற தாயே போற்றி. எந்நாட்டவரும் வியக்கும் நிர்வாகத் திறன் மிக்க எங்கள் தெய்வமே போற்றி' என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பல்வேறு பிரச்சினைகளை எல்லாம், என்னுடைய தொகுதி அளவிலே இருக்கின்ற, அண்ணா மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளை எல்லாம் இங்கே சொல்வதற்கு எனக்கு வாய்ப்பாக இந்த நேரம் அமைந்திருக்கிற காரணத்தினால், குறிப்பாக எங்களுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த நிதி நிலை அறிக்கையானது தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களும் வரவேற்கக்கூடிய ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாக இருக்கின்ற





சூழ்நிலையில், ஏழையெளிய பல்வேறு மக்களுக்கு எல்லாம் அவர் சலுகைகளை அளித்து, புதிய பொருளாதாரத் திட்டங்களையும் பல துறைகளில் பல்வேறு தொழிற்சாலைகளைத் தொடங்குகிற வாய்ப்பு கொடுத்திருக்கிற மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில், இன்றையதினம் கடந்த 25 நாட்களாக பல்வேறு மானியக் கோரிக்கைகள் மீது இங்கே விவாதம் நடைபெற்றது.

ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும், குறிப்பாக பல்வேறு புதிய திட்டங்களையும், புதிய சலுகைகளையும் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருந்தாலும், என்னுடைய அண்ணா மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே அவர்கள் பல்வேறு திட்டங்களை, பல்வேறு புதிய சலுகைகளை எல்லாம் அறிவித்திருப்பதை நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், நான் மட்டுமல்லாமல் எங்கள் அண்ணா மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மனமுவந்து அதனை இங்கு வரவேற்பார்கள். அது மாத்திரமல்லாமல், திண்டுக்கல் என்று சொன்னால், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய உயிர் உள்ளளவும் மறக்காத நிலைக்கு திண்டுக்கல் நினைக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐப் பற்றி அறிந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றாக தெரியும் என்ற வகையில் இன்றையதினம் திண்டுக்கல்லை எடுத்துக்கொண்டோமானால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1971-ஆம் ஆண்டு தேர்தலில் தன்னுடைய கட்சிக்கு அங்கீகாரம் அளித்தது திண்டுக்கல் என்ற வகையிலே அந்த திண்டுக்கல் நகரத்திற்குப் பல்வேறு சலுகைகளை வழங்கி, ஒரு புகழ்மிக்க மாவட்டமாக்கி பெருமையைச் சேர்ந்தார்கள் என்பது இந்தத் தமிழகத்திலே உள்ள அனைவருக்கும் தெரியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வகையிலே திண்டுக்கல் மக்கள் செய்த அந்த அங்கீகாரத்திற்கு, அந்த நன்றிக்கு, செய்நன்றி அறிதல் என்பதனுடைய பொருளை அறிந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது" என்ற குறளுக்கேற்ப, தனக்குச் செய்த உதவிக்காக பல்வேறு திட்டங்களை எல்லாம் அங்கே கொண்டு வந்தார்கள். அந்த வகையிலே பார்க்கின்றபோது அண்ணா மாவட்டம் என்று அந்த திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தைப்

[திரு. ச. காந்திராஜன்] [1991 செப்டம்பர் 28

பிரித்தார்கள். அதற்குப் பின்னாலே 2½ கோடி ரூபாய் அளவிலே
மாவட்டக் கலெக்டர் அலுவலக வளாகத்திற்கு அவர்கள் பணத்தை
ஒதுக்கி, இன்றையதினம் கட்டிடங்கள் கட்டப்பட்டு, அங்கே நல்ல
முறையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12.20

அடுத்து பேரணைத் திட்டம். திண்டுக்கல்லைப் பற்றிச்
சொல்லுகின்றபோது ஒன்றைச் சொல்லுவார்கள். கல்லுக்குப்
பெண்ணைக் கொடுத்தாலும் கொடுப்போம், திண்டுக்கல்லுக்குப்
பெண்ணைக் கொடுக்க மாட்டோம் என்று. திண்டுக்கல் பகுதியில்
ஒரு பழமொழி இருக்கிறது. அந்த அளவுக்கு திண்டுக்கல்லில்
குடிநீர்ப் பஞ்சம் மிகவும் மோசமாக இருந்த சூழ்நிலையில்,
பேரணைத் திட்டம் என்று ஒரு குடிநீர் திட்டத்தை, 9 கோடி
ரூபாய் ஒதுக்கீடு செய்து, அந்த மாவட்டத்திற்கு வழங்கினார்கள்
என்று சொல்லும்போது நாங்களெல்லாம் என்றென்றும் போற்றி
வணங்குகின்ற தெய்வமாக இருக்கின்ற அந்த உத்தமத் தலைவ
ருடைய நற்பண்புகளை இந்த நேரத்தில் நினைக்கக்கூடியவர்
களாக இருக்கிறோம். அன்றையதினம் மரியாதைக்குரிய
முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா மாவட்டத்திற்கு ஒரு
பல்கலைக் கழகத்தைத் தனியாகக் கொடுக்க வேண்டுமென்ற
காரணத்தாலே கொடைக்கானலிலே அன்னை தெரசா மகளிர்
பல்கலைக் கழகம் என்று ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்று
வித்தார்கள். அதனுடைய விழா நடக்கின்றபோது, அந்த
விழாவிலே நான்கூட பார்வையாளனாக, பொதுமக்களில்
ஒருவனாகக் கலந்துகொண்டேன். அவர்கள் ஒன்றைச்
சொன்னார்கள். இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே
தியாகம் செய்ய தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக்
கொண்டிருக்கிற அன்னை தெரசா அவர்களின் பெயரில் நான்
இந்த மகளிர் பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதை பெரும்
பாக்கியமாகக் கருதுகிறேன் என்று சொல்லி, அன்றையதினம்
அந்தப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால்
அதற்குப் பின்னால் வந்த ஆட்சியைச் சேர்ந்தவர்கள், கொடுத்துக்
கொடுத்து சிவந்த கரமாக விளங்கிய புரட்சித் தலைவர் ஆட்சியில்
நடந்ததை எல்லாம் எடுத்து எடுத்து பழக்கப்பட்ட கயவர்கள்
கூட்டம் அங்கே இருந்த அன்னை தெரசா பல்கலைக் கழகத்தைச்
சென்னைக்கு மாறுதல் செய்து, கொண்டு வந்துவிட்டார்கள்.
அப்படி மாற்றம் செய்ததைப் பற்றி நாங்கள் ஆட்சேபனை செய்
தோம். காரணம், எங்களுடைய மாவட்டத்தில் ஒரே ஒரு



1991 செப்டம்பர் 28] [திரு. ச. காந்திராஜன்]

பல்கலைக் கழகம்தான் இருக்கிறது, அவை மாறுதல் செய்யாதீர்
கள் என்று நாங்களெல்லாம் கோரிக்கை வைத்தோம். ஆனால்
அவற்றை எல்லாம் செவிமடுக்காமல், அன்றைய தினம் அந்தப்
பல்கலைக் கழகத்தை மாற்றி விட்டார்கள். ஆனால் இன்றைய
ஆளுநர் அவர்கள் உரையில் எங்களுடைய மரியாதைக்குரிய
புரட்சித் தலைவி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எந்தக்
கருணாநிதி அவர்கள் அண்ணா மாவட்டம் என்பதை எடுத்து
விட்டு, மறுபடியும் காயிதேமில்லத் மாவட்டம் என்று வைத்தார்
களோ, அந்த மாவட்டத்திற்கு மீண்டும் அண்ணா மாவட்டம்
என்று பெயரிட்டுள்ளது எங்களுக்கெல்லாம் ஒரு நல்ல வரப்
பிரசாதமாக இருக்கிறது. அதற்காக நாங்கள் எல்லாம் நன்றிக்
கடன் பட்டவர்களாக இருக்கிறோம். எங்களுடைய அண்ணா
மாவட்ட மக்கள் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள்
அனைவரும் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவர்
களாக இருக்கிறோம். நாங்களெல்லாம் இதைப்பற்றி மரியாதைக்
குரிய புரட்சி தலைவி அவர்களிடம் நினைவுபடுத்தாதது
எங்கள் தவறுதான். எனவே மாண்புமிகு புரட்சித்தலைவி
அவர்கள் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை மீண்டும்
கொடைக்கானல் நகரில் அல்லது அண்ணா மாவட்டத்தில்
அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு
எங்களுடைய கோரிக்கையாக நான் விடுக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12.25

[ ]

அதற்கு மேலாக இன்றையதினம் ரூ. 9 கோடியை ஒதுக்கி
பேரணைத் திட்டத்தை திண்டுக்கல்லுக்குக் கொடுத்தார்கள்.
அதற்கு பின்னாலே வந்த அரசாங்கம் அதிலே ஒரு கோடி ரூபாய்
மீதம் இருந்தாலும், திண்டுக்கல் நகரைப் பொறுத்தவரையில்
புரட்சித் தலைவர் அவர்கள் வைத்த இராணி மங்கம்மாள் என்ற
பெயரைக் கொண்ட வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதிக்கு
இன்றையதினம் வரை குடிநீர்க் குழாய்கள் கொடுக்காததை
இன்று மாண்புமிகு மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்
களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.
காரணம், இவ்வளவு பணம் மீதி இருந்தாலும் கூட, அவர்
கள் அந்தத் திட்டத்திற்குத் தவிர மற்ற திட்டம்
செலவழிக்காமல் முறைகேடாகப் பயன்படுத்தியிருந்தார்கள் என்பதையும்
அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேலும் எங்கள் மாவட்டத்தில் சுற்றுலா மையமாக அமைந்
திருக்கிற கொடைக்கானல் ஏரியைச் சுற்றி பல்வேறு கட்டிடங்கள்
தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன. ஐந்தாறு ஆண்டுகளுக்கு

மலையடிவாரத்தில் அங்கே நடக்கும் கோடை விழாவிற்கு நான் சென்றபோது, அப்போது அமைச்சராக இருந்தவர்கள் ஏரிக்கு அப்பால் 300 முதல் 500 அடி வரை அந்த இடத்தில் கட்டிடம் கட்டக் கூடாது, அதற்கான திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்று சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து அதற்குப் பின்னாலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு, அந்த ஏரியின் அழகைக் குலைத்துக் கொண்டிருக்கிற வண்ணம் தொடர்ந்து நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மாவட்டத்தின் மையத்தில் அமைந்திருக்கிற சுற்றுலா மையத்தை சிறப்பாகப் பராமரிக்க வேண்டுமானால், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பே மதுரை வடக்கு மாவட்ட நீதிமன்றம் திண்டுக்கல்லில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்குப் பின்னால் 1984-ல் திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு, திண்டுக்கல்லில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டபோதிலும், இன்றுவரை அங்கே தலைமை குற்றவியல் நீதிமன்றம் கொண்டுவரப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே கூட, காமராஜர் மாவட்டம் மற்றும் பல்வேறு மாவட்டங்களுக்கு கொடுத்திருப்பதைப்போல, எங்களுடைய அண்ணா மாவட்டத்திற்கு தலைமை குற்றவியல் நீதிமன்றத்தை அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்த குற்றவியல் நீதிமன்றம் இன்னமும் மதுரையில்தான் இருக்கிறது. அதை திண்டுக்கல்லுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லம் கட்டப்பட்டு வருகின்றது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இருந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நீதிபதி அவர்களுக்கும் இல்லங்கள் கட்டப்படும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மட்டும் இல்லம் இப்போது கட்டப்படுகிறது. மாவட்ட நீதிபதிக்கும் இல்லம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடகனாறு அணைக்கட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு பெரிய திட்டத்தை நான் கோரிக்கையாக வைத்திருக்கிறேன். எனவே குடிநீர்ப் பஞ்சம்



மிகுந்த எங்கள் பகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனமிரங்கி அந்தத் திட்டத்தைத் தரவேண்டுமென்று என் தொகுதி மக்கள் சார்பாக கேட்டு, இன்னும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேச இருந்தாலும், எனக்கு குறுகிய நேரமே கண்டிப்புடன் கொடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. கோவிந்தராசு.

திரு. மா. கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று எனக்கு பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மாண்புமிகு கொறடா அவர்களே, பேச வாய்ப்பளித்ததற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் தலைவர் அவர்களே என்று சொன்னவுடன் பேச்சைத் துவக்கிவிட வேண்டும்.

திரு. மா. கோவிந்தராசு : வரலாற்றுப் பொன்னேட்டில் பொறிக்கப்பட்டுவிட்ட புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியிலே நானும் இங்கே ஒரு உறுப்பினர் என்ற உயர்வான அந்தஸ்தை அளித்திட்ட காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் என்னையே சமர்ப்பித்து, அந்த தெய்வத்தை வணங்கிப் பேசுகின்றேன்.

நம் நாட்டு மக்கள் தாத்தாவைப் பார்த்திருக்கிறார்கள்—மகாத்மா காந்தியடிகளின் வடிவிலே; மாமாவைப் பார்த்திருக்கிறார்கள்—ஜவஹர்லால் நேருவின் வடிவிலே; தந்தையைப் பார்த்திருக்கிறார்கள்—பெரியாரின் வடிவிலே; அண்ணனைப் பார்த்திருக்கிறார்கள்—பேரறிஞர் அண்ணாவின் வடிவிலே; இப்போது அம்மாவைப் பார்க்கிறார்கள்—புரட்சித் தலைவியின் வடிவிலே.

பிற்பகல் 12-30.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார்கள் அறிஞர் அண்ணா அவர்கள். நாமும் இப்போது காண்கிறோம். ஏழைகளிடம் சென்றால், எங்கள் அம்மா அவர்களிடம் எழுகிற அப்பழுக்கில்லா ஆனந்தச் சிரிப்பு, மட்டற்ற மகிழ்ச்சியைக் காண்கிறோம், அவர்கள் ஒன்றும் செய்ய வேண்டாம்.

அவர்கள் நன்றாக இருந்தாலே போதும் என்று கூறுகிறார்கள். நாங்கள் செல்லுகிற மூலை முடுக்குகளில் எல்லாம், சந்து பொந்துகளில் எல்லாம், பட்டி தொட்டிகளில் எல்லாம், சிற்றூர் பேரூர்களில் எல்லாம், சிறு நகரங்கள் பெரு நகரங்களில் எல்லாம், இப்படி எங்கே சென்றாலும் அங்கேயுள்ள மக்கள் அம்மா எங்களுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம், அவர்கள் நன்றாக இருந்தாலே போதும், அந்த மகராசியை நீங்கள் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பாவிகள் ஏதாவது செய்துவிடப் போகிறார்கள், அவர்களை வெளியே எங்கும் வர வேண்டாம் என்று சொல்லுங்கள், அவர்கள் நன்றாக இருந்தாலே அதுவே எங்களுக்குப் போதும் என்று எல்லோரும் கூறுகிறார்கள். அவர்கள் அந்த மாதிரி கூறுகிற அளவிற்கு உள்ள அந்தக் கள்ளம் கபடம் இல்லாத ஏழைகளிடத்திலே, அவர்களுடைய மட்டற்ற மகிழ்ச்சியிலே அவர்களுடைய ஆனந்தச் சிரிப்பில் அம்மாவை நாங்கள் பார்க்கிறோம்; தெய்வத்தை நாங்கள் பார்க்கிறோம். இதையேதான் அவர்களும் கூறினார்கள். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று கூறினார்கள். "காண்கிறோம்" என்று கூறவில்லை. ஒரு எதிர்காலத்தை, வருங்காலத்தைப் போட்டார்கள். "காண்கிறோம்" என்று நிகழ் காலத்தைச் சொல்லவில்லை. எதிர் காலத்தை எதிர் நோக்கி "காண்போம்" என்று போட்டார்கள். ஏனென்றால் வருங்காலத்திலே அந்த ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண வைக்கின்ற ஒரு உன்னதத் தலைவி வரப் போகிறார்கள், அவர்களாலே ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று வருங்காலத்தை எதிர்நோக்கி "காண்போம்" என்று போட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வருங்காலம் வாழ வைக்கும் தெய்வத்தின் காலம், புரட்சித் தலைவியின் பொற்காலம், அதிலே ஏழைகள் சிரிப்பார்கள், மட்டற்ற மகிழ்ச்சி கொள்வார்கள் அப்போது இறைவனைக் காண்போம் என்றார்கள். அது இப்போது அவர்கள் எண்ணப்படி இங்கே பிரகாசமாக நிறைந்த மூர்த்தியாக இருக்கிறது. முன்பு காண்போம் என்றார்கள். இப்போது காண்கிறோம். காண்போம் என்றவர்களும் காண்கிறார்கள் நாமும் காண்கிறோம். இதனாலே புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு நன்றியைக் கூறும் அதே வேளையிலே ஒரு அறிவுரையையும் கூற கடமைப்பட்டிருக்கிறேன். சிறுவன் அறிவுரை என்று கூறுவதை மன்னித்து விடுங்கள். அதாவது அவர்களுக்குக் கூறுகிறேன். நீங்கள் காண்



போம் என்று கூறியிருக்கிறீர்கள். ஏழையின் சிரிப்பில் அதாவது, இறைவனைக் காண்போம் என்பதைச் சற்றுத் திருத்தி "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்" என்று இப்போது கூறுங்கள் என்று இப்போது அவர்களுக்குக் கூறுகிறேன். "ஏழையின் கோபம் சாத்தானைக் காட்டும்" என்பது அவர்களுக்கும் தெரியும். ஏழை மனம் கோபப்பட்டால் என்னென்னமோ நடக்கும். அது நடந்துவிட்டது. அவர்களுடைய காலம் கடந்துவிட்டது. எங்கெங்கு சென்றாலும், யார் யார் வாய்க் கேட்டாலும், அம்மா, அம்மா. டவுனுக்குப் போங்க. ஒரு ரிக்ஷாக்காரரிடம் போங்க, "அம்மா ஆட்சி படு பிரமாதங்க" என்று சொல்கிறான். ஓட்டல் கடைக்குப் போங்க "அம்மா ஆட்சி ரொம்ப பிரமாதங்க, அம்மா சட்டசபையில் விளாசித் தள்ளுறாங்க போங்க' என்கிறார்கள். பஸ் ஓட்டுநர், கண்டக்டர் அவர்களிடம் போங்க. "அம்மாவின் ஆங்கிலப் பேச்சும் தமிழ்ப் பேச்சும் அருமையாக இருக்குதுங்க" என்று சொல்கிறார்கள். முதலாளிகள். பெரிய முதலாளிகள். "அம்மா கரெக்ட்டாக சட்டசபைக்கு வந்துவிடுறாங்களே, பங்சுவல்னா, பங்சுவல்னு" அவர்கள் சொல்கிறார்கள். அதற்கடுத்து, தொழிலாளிகள் "அம்மா ஆட்சியிலே ஒரு குறையும் இல்லாமல் நாங்கள் இருக்கப்போகிறோம். இப்போது இருக்கிறோம்" . . .

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசு அவர்கள், மெத்த சிரமப்பட்டு, பேரவைத் துணைத் தலைவரிடமும் அரசு கொறடாவிடமும் நேரம் பெற்று இந்த விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். எனவே எஞ்சியிருக்கிற சில நிமிடங்களையாவது இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி தன்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு அல்லது தன்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏதாவது இருந்தால் அவற்றைச் சொல்லுவதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மா. கோவிந்தராசு**: அம்மா உங்களிடம் உள்ள பெருத்த மரியாதையின் காரணமாகக் கூறுகிறேன். எனவே எங்கு பார்த்தாலும், யார் யார் வாய் கேட்டாலும், அம்மா, அம்மா. அதனால்தானோ என்னவோ முன்பே இந்த நாட்டை தாய் நாடு என்று கூறியுள்ளார்கள். எனவே நமக்கெல்லாம் நமது

நாடு இனி அம்மா நாடு. எனவே இதையெல்லாம் பார்க்கும்போது ஒரு பயமாகக் கூட இருக்கிறது. அம்மாவிற்கு திருஷ்டிபட்டு விடுமோ என்று . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டிய பொருள்களைப் பற்றி பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.35.

**திரு. மா. கோவிந்தராசு:** எனவே என்னுடைய தொகுதியாகிய ரிஷிவந்தியம் தொகுதியிலே ஒரு பெரிய கோவில் இருக்கிறது. திருவரங்கம் கோவில், ஆதி திருவரங்கம், அனாதை ஸ்ரீரங்கம் என்று கூறுவார்கள். ஆதி திருவரங்கம் என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருவரங்கம்தான். தென்பெண்ணை ஆற்றின் தென்கரையிலே அமைந்து இருக்கிறது. அது மிகப் பெரிய கோயில். இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயேகூட அவ்வளவு பெரிய சிலை இல்லை. அதை பெரிய அரங்கநாதர் என்று கூறுவார்கள். பெரிய திருமால் என்று கூறுவார்கள். அவ்வளவு பெரிய கோவில். சோழர்கள் காலத்திலேயே நாற்கால சோழர் சக்கரவர்த்தியினுடைய உத்தம சோழ சக்கரவர்த்தியினுடைய சமாதிகூட அங்கே கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது. அதை தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து தினமணி பத்திரிகையில்கூட ஒரு பக்க அளவிலே வந்து இருக்கின்றது. அந்த சமாதியும் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. அவ்வளவு பிரசித்திபெற்ற அந்தக் கோயில் இன்று கேட்பாரற்ற அநாதையாக, ஆதிதிருவரங்கம் என்று சொல்லப்பட்ட திருவரங்கம் இன்று அநாதை திருவரங்கமாக இருக்கிறது. அநாதை ஸ்ரீரங்கம் என்று சொல்லப்பட்ட ஸ்ரீரங்கம் இன்று மிகப் பெரிய அளவிலே புகழ்வாய்ந்த காவிரி ஆற்றங்கரையிலே இருக்கிறது. அதுபோல இந்த திருவரங்கம் கோயிலையும் சிறப்பு வாய்ந்ததாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு ஐந்து சதுர மீட்டர் அளவிலே பஸ் வசதிகூட இல்லாமல் அந்தக் கோயில் இருக்கின்றது. இப்போது புரட்டாசி மாதம் நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் அங்கு பஸ்ஸிலே போவதற்கு பக்தர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அங்குள்ள பஸ் டெப்போவிற்கு சென்று தயவு செய்து ஒவ்வொரு சனிக்கிழமை மட்டுமாவது





திருவரங்கத்துக்கு பஸ் விடுங்கள் என்று கூறினேன். அடுத்த வருடம் நிச்சயமாக விடுகின்றோம்; இப்போது எங்களால் விடமுடியாது என்று கூறி விட்டார்கள். எனவே, அந்த திருவரங்கத்திற்கு நிரந்தரமாக பஸ் வசதி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த திருவரங்கம் கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்த கோயில். அதை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக ஆக்கி அதனுடைய பழைய புனிதத்தையும், பழைய பெருமையையும் மீண்டும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரிஷிவந்தியத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். அதாவது,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு."

என்று வள்ளுவர் கூறி இருக்கின்றார். எனவே, அந்த ரிஷிவந்தியத்தினால் அந்த கோயிலுக்கு சிறப்பு இல்லையா அல்லது அந்த கோயிலால் ரிஷிவந்தியத்துக்கு சிறப்பு இல்லையா என்று பார்ப்போமேயானால்,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு."

என்று கூறியதுபோல், ரிஷிவந்தியம் தொகுதி மிகவும் பின்னடைந்து இருப்பதனாலே அங்குள்ள மக்கள் மிகவும் பின்னடைந்திருப்பதனாலே அந்தக் கோயில் சிறப்பு இல்லாமல் போய் விட்டது. ஏனென்றால், சிறப்பாக இருந்தால்தான் அந்தப் பூஜைகளும் அந்தப் பெருமைகளும் அந்தக் கோயிலைச் சாரும் என்று சொல்வார்கள். மக்கள் சிறப்பாக இல்லாத காரணத்தால், மக்கள் முன்னேற்றம் அடையாத காரணத்தால் அந்தக் கோயிலும் சிறப்பு இழந்து நிற்கிறது. எனவே அந்த தொகுதியை முன்னேற்றுவதற்காக எங்களுடைய தொகுதியிலே ஒரு தொழிற்சாலையும் இல்லை, ஒரு ஆலையும் இல்லை; எதுவுமே இல்லை; ஆனால் தொழிற்சாலை வைப்பதற்குரிய இடவசதிகள் அங்கே இருக்கின்றன: மூலப் பொருள்கள் அங்கே கிடைக்கின்றது; அங்கே நீலகிரிக் காடுகள் நிறைய இருக்கின்றது; அதைச் சுற்றி 4, 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன; எனவே அந்த மூலப் பொருள்களை வைத்து ஒரு காகித தொழிற்சாலை மாடாம்பூண்டி

கட்டு ரோட்டிலே அதாவது ஏறக்குறைய 500 ஏக்கர் நிலங்களுக்கு மேல் அரசுக்கு சொந்தமான இடம் இருக்கிறது அங்கே ஒரு காகித தொழிற்சாலை அமைத்துக் கொடுத்தால் எங்கள் தொகுதி மிகவும் முன்னேறும்; எங்கள் தொகுதி மக்கள் மிகவும் முன்னேற்றமடைவார்கள் என்று இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் பேசும்போது நம்முடைய உன்னதத் தலைவரின் படத்தை இங்கே வைக்கக் கூறினார்கள். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும், படம் வரையப்பட்டுக் கொண்டிருக்கிறது; வைப்போம் என்று கூறினார்கள். அதாவது ஏற்கெனவே இருந்த கடந்த இரண்டு ஆண்டு ஆட்சிக் காலத்திலேயே அதை வைத்து இருக்க வேண்டும். இங்கே ஒரு இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்திலே வைத்து இருந்தால் அவர்கள் நிச்சயமாக காலியாகி இருக்க மாட்டார்கள். எனவே இப்போது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய படத்தை வைக்கும்போது அடியேனுடைய ஒரு சிறிய வேண்டுகோள் என்னவென்றால், இங்கே திருவள்ளுவர் படம் இருக்கிற இடத்திலே புரட்சித் தலைவர் படத்தை வைத்தால், நம்முடைய இதய தெய்வம் அண்ணாவுக்கு அருகிலேயே அவர் இருப்பார் என்று கூறி, அந்த இடத்திலே அதை வைப்பதற்கு என்னுடைய இந்தச் சிறிய வேண்டுகோளை இந்த மாமன்றத்திலே வைக்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது). ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

* திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அறிவித்து இருக்கிற திட்டங்கள் எல்லாம் சிறப்பான திட்டங்களாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் அந்த நிதி அந்தந்த துறைகளைச் சென்றடைந்து, அந்தந்த துறைகள் வேகமாகச் செயல்பட வைப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தமாக





இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுவதற்கு இன்றைய தினம் தமிழகத்தில் அமைந்து இருக்கிற அடிப்படையான தொழில் விவசாயம். விவசாயத் தொழில் என்பது ஒரு சாதாரண தொழில் அல்ல. விவசாயத் தொழில் எந்த அளவுக்கு முன்னேறுகிறதோ, அது வளர்ச்சி பெறுகிறதோ அந்த அளவுக்குத் தான் ஒரு நாட்டினுடைய இதர பிற தொழில்களும் வளர்ச்சி பெறமுடியும் என்பது கடந்த கால அனுபவம்.

பிற்பகல் 12.40

உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னால் உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று 1961 ஆம் ஆண்டில் அன்றையதினம் ஒன்றாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி ஒரு நீண்ட பெரும் போராட்டத்தை நடத்தியது. அப்போது கூட பலபேர் எப்படி உழுபவனுக்கு நிலம் கொடுக்க முடியும் என்று கேட்டார்கள். அந்த உச்சவரம்பு சட்டத்திற்கு பிறகு நிலம் பல்வேறு வகைகளுக்கு மாறிய பிறகு, அந்த நிலம் கிராமப் புறங்களில் இருக்கிற ஏழையெளிய மக்களுக்கு முழுமையும் போய்ச் சேராவிட்டாலும் கூட, ஒரு பகுதி கிடைத்த பிறகு, அந்த உச்சவரம்புச் சட்டத்தை இன்னும் பல்வேறு சட்டங்களை ஏமாற்றி பினாமியாக நிலங்களை வைத்திருந்தாலும் கூட, கிராமப் புறங்களில் சிறிய சிறிய தொழில்கள் அபிவிருத்தி அடைந்து இருக்கின்றன. அந்த சிறிய தொழில்களிடம் கொள்முதல் பண்ணக்கூடிய நகரங்களில் இருக்கிற பெரிய தொழில்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. உதாரணமாக சொல்வதென்றால், கனரக இயந்திரத் தொழில் இன்றைக்கு நாட்டில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இன்றைக்கு எவ்வளவு கனரக இயந்திரத் தொழில் உற்பத்தி செய்கிறது, டிராக்டர்கள் போன்ற சாதனங்கள் பயன்படும் அளவுக்கு கிராமப்புறங்களில் எவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பது, நிலக்குவியல் உடைக்கப்பட்டதன் விளைவாகத்தான் ஏற்பட்டது. எனவே, இன்னமும் இந்த விவசாயத் தொழில் அரசு—முதலமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் முழுமையாக கவனம் செலுத்தி ஒதுக்கியிருக்கிற நிதியை விவசாய அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக தஞ்சை மாவட்டம் ஒரு சாகுபடி பகுதி. காவிரி வெண்ணாறு ஆகிய இரண்டு ஆறுகள் தஞ்சை மாவட்டத்தில் பாய்ந்து கொண்டிருக்கின்றன. அப்படி பாய்கிற அந்த ஆறுகள்

நீண்டகாலமாக பராமரிக்கப்படாமல் அந்த ஆறுகளில் மேடு பள்ளங்கள் ஏற்பட்டு, குறைந்த தண்ணீர் வந்தால் கூட கிராமங் களுக்கு வராத சூழ்நிலை அங்கே இருக்கிறது. எனவே, அந்த ஆறு களை எல்லாம் மண் அகற்றக்கூடிய புல்டோசரை பயன்படுத்தி அந்த ஆறுகளை சீரமைக்கும் பணிகளை வேகமாகத் தொடங்க வேண்டும். அதைப்போல வாய்க்கால்கள் நீண்டகாலமாக சீர மைக்கப்படாத காரணத்தால் வருகிற தண்ணீர் கிராமங்களுக்குச் செல்வதற்கு தடை ஏற்படுகிறது. ஆகவே, வாய்க்கால்கள், அவற்றின் தலைப்புகள் முழுமையும் சீரமைக்கிற திட்டங்களை உருவாக்கி சீரமைக்க வேண்டும். அதைப்போல வடிகால்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு சரி பாதி பகுதி மழைக்காலங்களில் கடுமையாக பாதிக்கப்படுகிற பகுதியாக இருக்கிறது. ஒரு மழை பெய்து விட்டால் கிராமங்கள் முழுமையும் மூழ்கி, பயிர்கள் முழு மையும் அழிந்து, ஒரு பெரிய சேதம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, வடிகால்கள் கடந்த 1989 ஆம் ஆண்டில் ஒரு பகுதி சீரமைக்கப்பட்டது. மீதி ஒரு பகுதியையும் சீரமைப் பதற்கு ஒரு சூழ்நிலையை வேகமாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தரமான விதைகள், பூச்சி மருந்துகள் வழங்கு வதில் அரசு தரப்பில் விற்கப்படுகிற விலை அதிகமாக இருக்கிறது. 1989 ஆம் ஆண்டில் ரூ. 2.64 விற்ற ஒரு கிலோ விதை இன்றைக்கு ரூ. 5.10 என்ற அளவுக்கு விற்கப்படுகிறது. ஆகவே, விவ சாயிகள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் விதையினுடைய விலையை சரியாக நிர்ணயம் செய்ய முடியாத காரணத்தால் தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் விதைக்கு ஒரே சீராக, ஆண்டு முழுவதும் நிலவும் விலையை இந்த அரசு அறிவித்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவித்த விலை கூடுதலாக இருக்கிறது, ஆகவே, விவசாயிகள் வாங்குவதில் சிரமம் இருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய விலை நிர்ணயம் செய்யப் பட்டது கடந்த ஆட்சியில். இப்போது தான் இந்த அரசு புதிய கொள்கையை அறிவித்து இருக்கிறது. இந்த ஆண்டு விதையை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு குறித்த விலையையும், இனி விற்கக்கூடிய விதை தரமான விதையாகவும் மாவட்டம் முழுவதும் ஒரே விலையாக இருக்கக்கூடிய அளவுக்கு திட்டத்தை இந்த அரசு இப்போது தான் கொண்டு வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே சீரான குறைந்த விலையில் அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனாலும் இந்த கூடுதல் விலை நிர்ணயிக்கப்பட்டபோது விற்கப்படுகிற விதை என்பது என்ன நிலைமை என்றால், வேளாண்மைத் துறை அதிகாரிகள் அந்த விதையை எப்படி வேண்டுமானாலும் விற்று விட்டு, அந்த கூடுதல் விலை நிர்ணயிக்கப்பட்டதே அந்த விலையை, பணத்தைக் கட்டிவிட வேண்டுமென்ற நிலை இருக்கிறது.

(பிற்பகல் 12.45)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதையினுடைய விலையை நிர்ணயம் செய்ய புள்ளிவிவரத் துறையிலிருந்து வாரா வாரம் பெற்று அதன் அடிப்படையிலே, அந்தந்தப் பகுதிக்கு விலை நிர்ணயம் செய்யக் கூடிய நடைமுறை கடந்த பல ஆண்டுக் காலமாக இருந்தது. ஆதலால் இப்போதுதான் புதிய இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்லாது, தவறு எங்கே நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறித்துச் சொல்வார்கள் என்று சொன்னால், நிச்சயமாகத் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது.

திரு. வே. தம்புசாமி: அமைச்சர் கூறியதற்கு நன்றி, அடுத்து உரங்கள். இந்த உரங்கள் என்பது, சிறு விவசாயிகளுக்கு, பழைய சென்ற ஆண்டு விலையிலே வழங்கப்படும் என்று முன்பு அரசு அறிவித்தது இருக்கிறது. ஆனால், இப்போது என்ன நிலைமை என்றால், எந்த இடத்திலேயும், குறைந்த விலையில், உரங்கள் வழங்கப்படவில்லை. புதிய விலையிலேதான், கூடுதலான விலைக்குத்தான் வழங்கப்படுகிறது. இந்த உரங்களை எல்லாம் பதுக்கி வைத்து, கடந்த சில மாதங்களில், சில நாட்களிலே வழங்கப்பட இருக்கக்கூடிய சமயங்களில், நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தாலும். ஆகவே, மேலும் இந்த சிறிய விவசாயிகளுக்கு, குறைந்த விலையில் உரம் வாங்குவதற்கு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அடையாள அட்டை வழங்குகின்ற பணியை வேகமாக அரசு செய்வதன் மூலம்தான் சிறிய விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்.

அடுத்து, அவர்களுக்கு வழங்கக்கூடிய பூச்சி மருந்து களுடைய விலை. உதாரணத்திற்கு களைக்கொல்லி, ஏறத்தாழ 142 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 90 ரூபாய்க்கு விற்றது 142 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதிலே மானியம் 25 சதவீதம்தான் என்று சொன்னாலும், மொத்தத்திலே 20 ரூபாய்தான் குறைத்துக் கொள்ளப்படுகிறது. அப்படி களைக்கொல்லியினுடைய விலை அதிகரித்து இருக்கிறது. எதிர்காலத்திலே களைக்கொல்லி பூச்சி மருந்துகளின் விலைகளை தமிழக அரசு கட்டுப்படுத்தி, குறைந்த விலையிலே வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று மின்சாரம், இன்றைய தினம் ஒரு பகுதியிலே தண்ணீர் கிடைக்கிற பகுதியிலே வேகமாக விவசாய உற்பத்தி செய்ய வேண்டும் என்றால், மின்சாரம் அவசியமாகிறது. தஞ்சை மாவட்டத்திலே இன்றைய தினம் மின்சாரத்திற்கு முன்பணம் கட்டுவதற்குக் கூட தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து மின்சார இணைப்பை வேகமாகக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அதேபோல், இன்றைய தினம் தஞ்சை மாவட்டம் முழுமையும் ஆறுகள் அதிகமாக இருக்கின்றன. அந்த ஆறுகள் முழுமையும் கரைகள் இழந்து, பலமிழந்து இருக்கின்றன. இப்போது





கடுமையாக மழை பெய்யுமானால், ஒரு வெள்ளம் ஏற்படுமானால், கடுமையான உடைப்பு ஏற்பட்டு, சேதங்கள் ஏற்படுவதற்கான ஒரு அபாய நிலை இருக்கிறது. எதிர்காலத்திலே விரைவாக இந்த ஆறுகளினுடைய கரைகளைப் பலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைய தினம் மழைக்காலங்களிலும் சரி, மற்ற காலங்களிலும் சரி, வரக்கூடிய தண்ணீர் வீணாகாமல் இருக்க கடைமடைப் பகுதிகளிலே இருக்கிற ஆறுகளில், பெட் டாம் அணை கட்டி, தண்ணீரைத் தேக்குவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.

அடுத்து இறவைப் பாசனம், இறவைப் பாசனம் என்பது, மின்சாரத் தட்டுப்பாடு இருந்தாலும் கூட, இறவைப் பாசனத் திற்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு இணைப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் நாகப்பட்டினம் வட்டம், திருப்பூண்டியிலே, விழுந்த மாவடி இறவைப் பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டு அது பயன் அற்றுக் கிடக்கிறது. அப்படிப்பட்ட திட்டத்தை அரசு சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் ஏறத்தாழ 6 ஆயிரம் ஏக்கர் பாயக்கூடிய திட்டமாகும். எனவே அரசு இதை கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சாலைகள். தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளுக்கு கொஞ்சம் அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும். மற்ற மாவட்டங்களில் உள்ள சாலைகளைப்போல் அல்ல; தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகள் 7 மாதம் தண்ணீருக்குள்ளே இருக்கின்றன. இதன் விளைவாக, கனரக வாகனங்கள் செல்கிறபோது, ஒரேயடியில் அந்தச் சாலைகள் சீரழிந்து விடுகின்றன. அதுவும் தஞ்சை மாவட்டத்திலே எங்கு பார்த்தாலும், ஓ.என்.ஜி.சி. யினர் துளை போடுகிறார்கள். அதனால், சின்னஞ்சிறிய கிராமங்கள் வழியிலும் அவர்கள் கனரக வாகனங்களை ஏற்றுகிறார்கள். ஒரு [illegible] போய்விட்டு வந்தாலே அந்த ரோடுகள் மிகவும் சீரழிந்து [illegible] நிலைமை இருக்கின்றன. ஆகவே, தமிழக அரசு அந்த ஓ.என்.ஜி.சி., நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு, நிதி பெற்று, அந்தச் சாலைகளை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சீரமைக்கிறபோது (குறுக்கீடு) . . .

[1991 செப்டம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர். அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சாலைகள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகள், இத்தகைய மோசமான நிலைமையில் இன்று மட்டு மல்ல, கடந்த 3 ஆண்டுக் காலமாக, இந்தத் தமிழ்நாட்டை நான் பல சந்தர்ப்பங்களில் பல முறை சுற்றி வந்திருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலேயே பல நாட்கள், வாரக் கணக்கில் நான் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் 'வேனில்' சென்றபோது அந்த மோசமான சாலைகளில் எப்படி தூக்கித் தூக்கி எறியப்பட்டேன் என்பது எனக்குத்தான் தெரியும். அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்று இருந்த அரசின் கவனத்திற்கு இந்தச் சாலைகளின் மோசமான தன்மை யைக் கொண்டுவந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

12-50 மணி

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் சாலைகளைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பதற்காக நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். சென்ற சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த காலத்திலிருந்து தொடர்ந்து நான் பேசும்போதெல்லாம் இதைப் பேசிக்கொண்டிருக்கிறேன். இப்போதும் அந்தச் சாலை வீணாவதற்கு அடிப்படைக் காரணம் அந்த 'ஓ.என்.ஜி.சி.' தான். ஆகவே, அவர்களிடம் நிதி பெற்று அந்தச் சாலைகளைச் சீர மைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் கமலாபுரத்திலிருந்து கொறடாச்சேரிக்குச் செல்லக்கூடிய சாலையினுடைய திட்டம் என்பது ஏறத்தாழ பத்து ஆண்டுக் காலமாக திட்டம் போட்டு, போட்டு முற்றுப் பெறாமல் இருக்கிறது. இதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் காலத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: தலைவரவர்களே, ஒரு விளக்கம்.



1991 செப்டம்பர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்கவேண்டும் என்றால் பேசிக்கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அனும தித்தால்தான் முடியும்.

திரு. ஆர். சிங்காரம்: அவர் அனுமதித்துவிட்டார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகளைப்பற்றி மிகவும் தெளிவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். ஆனால் இந்த அளவுக்கு அன்று பேசவில்லை, காரணம் தோழமைக் கட்சி என்பதுதான். அதனால் நம்முடைய மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டு அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தோழமைக் கட்சி என்ற காரணத்தால் தான் அன்று இவ்வளவு தெளிவாகப் பேசவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற முறையில் ஒவ்வொன்றையும், எல்லா விஷயங்களையும் எதிர்த்தே பேசவேண்டுமென்று முடிவு செய்து அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: தலைவரவர்களே, சாலைகளைப் பற்றி பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றி னுடைய நிலைமைகளை உணர்ந்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் உணரவில்லை என்ற காரணத்தால் எதிர்த்துப் பேசுகிறேன் என்று கூறுகிறார்கள். ஆளும் கட்சியோ அல்லது தோழமைக் கட்சியோ என்பதல்ல. கொள்கையைச் சொல்வதிலே, கோரிக்கையைச் சொல்வதிலே, அதைப் பெறுவ திலே எந்தக் காலத்திலும் தயங்கவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகள் எவ்வளவு மோசமான நிலையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்திருப்பது மட்டுமல்ல. சீர் ஒழுக்கமான சாலைகளை எல்லாம் செப்பனிட்டு அவற்றைச் சீர் படுத்தி நல்ல முறையில் வைப்பதற்கான திட்டங்களை நாம் மேற்

கொண்டிருக்கிறோம் என்றாலும் இந்த ஆண்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினுடைய அடிப் படையில் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் தனியாக ஒரு திட்டத்தை பரிட்சார்த்தமாகக் கொண்டு வருவதை நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது அர சாங்கம் எவ்வளவு செலவழிக்கிறதோ அவ்வளவு செலவழிப்பதற்கு மேலகை தனியார் சில பல சாலைகளைச் செப்பனிட்டு, அதற்கான சுங்க வரியை வசூல் செய்து கொள்வதற்கு வாய்ப்பு தருகின்ற அளவில் பரிட்சார்த்தமாக தஞ்சை மாவட்டத்தைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கி றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வகையில் சில பல வசதிகளை அங்கே அரசு செய்யும். அதற்கு இந்தச் சாலைகளி னுடைய தன்மையைப் பார்த்து, அரசாங்கம் நிதி இருக்கிற அள வுக்குச் செய்யும்; அதற்கு மேலும் செய்ய தனியார் துறையினர் அழைக்கப்பட இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்த விளக்கத்தை இன்னும் சற்று விரிவாகக் கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலுள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன என்பதை ஏற் கெனவே இங்கே குறிப்பிட்டேன். இப்போது தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் சாலைகள் மோசமான நிலையில் தான் இருக்கின்றன. அதற்காக ஓர் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ் நாட்டிலுள்ள அனைத்துச் சாலைகளையும் மராமத்து செய்வது என்றால் அதற்காக மட்டும் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் தேவை. இந்த 500 கோடி ரூபாய் என்பது ஒரு 'ஒன் டைம் எக்ஸ்பென் டிச்சர்'—ஒருமுறைச் செலவினம். அதற்குப் பிறகு ஒவ்வோ ராண்டும் இந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்காக, 'மெயின் டெயின்' செய்வதற்காக மட்டும் ஏறத்தாழ ரூ. 185 கோடி தேவைப் படும். இன்று நமது அரசுக்கு இருக்கின்ற நிதிப் பற்றாக் குறையின் காரணமாக இதை அரசே எடுத்து செய்ய இயலாது என்பதால் இப்போது ஒரு 'எக்ஸ்பரிமெண்டல் பேசிசில்' ஒரு திட்டத்தைத் தீட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு மாவட் டத்தில் சில தனியார் நிறுவனங்கள்—இண்டஸ்டிரியல் ஹவுஸ்— தொழிலதிபர்கள் அந்த மாவட்டத்திலுள்ள சாலைகளை எல்லாம்

பிற்பகல் 12-55

தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொள்வார்கள். அவர்களே செலவு செய்து அந்த மாவட்டத்திலுள்ள சாலைகள் அனைத்தையும் செப்பனிடுவார்கள்; மெயின்டெயின் செய்வார்கள். பிறகு அந்தச் சாலைகளுக்காக அவர்கள் ஒரு சிறிய அளவு 'டோல்'—லெவி செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். இது இப்போது இருக்கின்ற ஒரு திட்டம். இந்தத் திட்டத்தை என்னிடம் கொடுத்தபோது முதல் முதலில் இது தஞ்சை மாவட்டத்தில்தான் அமல் செய்யப்பட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வே. தம்புசாமி :** அடுத்து வேகமாக சீர் செய்யப்படக் கூடிய சில சாலைகள். கமலாபுரம்-கொரடாச்சேரி, மாங்குடி-பெரியதோப்பு. 15 ஆண்டு காலமாக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, செயல்படாமலே இருக்கிறது. ஆகவே மாங்குடி-பெரிய தோப்பு இணைக்கப்படுமேயானால், வேளாங்கண்ணி-ஓத்தநாடு இணைப்புச் சாலையாக அது அமைந்திருக்கிறது. அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஆந்தகுடி-பரவையூர், சாட்டியக்குடி-முப்பத்துக் கோட்டாரம், கேவனூர்-சோழங்கநல்லூர், இந்தச் சாலைகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சாலைகளாக இருக்கிறது.

அதேபோன்று பாலங்கள். நீண்ட காலமாக திருவாரூர் நகரத்தை இணைப்பதற்கு அந்த திருவாரூர் நகரத்தினுடைய கீழ் பாலத்திலே 7 வார்டுகள் இருக்கின்றன. அந்த வார்டு மக்கள் திருவாரூருக்கு வர வேண்டுமென்றால், 3 கிலோமீட்டர் தூரத்திற்கு வந்துவிட வேண்டும். ஆனால் இப்போது அவர்கள் 15 கிலோ மீட்டருக்கு சுற்றி வர வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த ஓடம்போக்கியை—வெட்டாற்றிலே சோழவரம், வெட்டாற்றில் பள்ளிவாரமங்கலத்தையும், பழையவலத்தையும் இணைக்கின்ற ஒரு வண்டிப் பாலத்தைக் கட்டி விட்டால், 13 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கீவளூர் அருதாமையில் இருக்கக்கூடிய பாலம், அங்கே நிறைய விபத்துக்கள் ஏற்படுகிறது. அதை அமைப்பதற்கு

[திரு வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 28

வேண்டும். அதுபோல் திருவாரூர், திருத்துறைப்பூண்டியிலே நகரத்தை ஒட்டியிருக்கிற வாழவாய்க்காலில் அந்தப் பாலத்தை அகலப்படுத்திட வேண்டும். அதேபோன்று திருநெல்காலில் வெண்ணாறு பாலம் ஒரு பகுதி உடைந்து ஆண்டாக இன்றைய தினம் நின்று கொண்டிருக்கிறது. அதையும் வேகமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு நேற்றைய பத்திரிகையில் பார்த்தேன், வந்திருக்கிறது. குத்தகை பாக்கிகளை விரைவாக வசூலிப்பதற்கு அந்த குத்தகை பாக்கிச் சட்டம் காலாவதியாகி விட்டது. வேகமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று முதலமைச்சருடைய அறிவிப்பு வந்திருக்கிறது. அப்படி இன்றையதினம் அந்த கோர்ட் திறந்து நடவடிக்கை எடுக்கப்படுமேயானால், ஏறத்தாழ தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 இலட்சம் குத்தகை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். எனவே அந்த கோர்ட்டை வேகமாகத் திறப்பதற்கு அரசு முழு முயற்சி எடுக்கவேண்டாம். கைவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சுகாதார வசதி. மருத்துவத்தைப் பொறுத்தவரையில், திருவாரூரில் 11 ஆண்டுக்காலமாக மூடிக் கிடந்த அந்த மருத்துவமனையை திறப்பதற்காக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் முழு முயற்சி எடுத்து, நிதி ஒதுக்கி, அதற்கான உத்தரவையும் பிறப்பித்ததற்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இன்றையதினம் தனியார் துறைகளிலே . . . .
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் வெகுநாட்களாக இருந்த மருத்துவமனை இப்போது திறக்கப்பட்டதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டதற்கு என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எனக்கு ஒரே ஒரு சந்தேகம். இந்த மருத்துவமனை 11 ஆண்டுக்காலமாக திறக்கப்படவில்லை, செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்களே இங்கே சுட்டிக்



1991 செப்டம்பர் 28] [மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா]

காட்டியுள்ளார். எனவே கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த திறக்கப்படாத மருத்துவமனை திறக்கப்படவேண்டுமென்று அந்த அரசிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தாரா, அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒப்புக்கொள்வாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. வே. தம்புசாமி**: தொடர்ந்து கோரிக்கைகளை வற்புறுத்தக்கூடிய நான் தொடர்ந்து கோரிக்கையை வற்புறுத்தினேன். ஆனால் நிராகரிக்கவில்லை. (குறுக்கீடு) செய்யப்படும், செய்யப்படும் என்று காலம் கடந்ததே தவிர, வேறு அல்ல.

பிற்பகல் 1.00

அடுத்து தனியார் மருத்துவமனைகள் இன்று கடுமையாக நடக்கின்றது. இன்றையதினம் சாதாரண ஏழை எளிய மக்களாக இருந்தாலும், அவர்களிடம் கடுமையாக வசூலிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், திருவாரூரில் வெங்கடேஸ்வரா என்று ஒரு நர்சிங் ஹோம் இருக்கிறது. அந்த நர்சிங் ஹோமில் ஒரு சாதாரண ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த கண்ணப்பனுடைய மனைவி அஞ்சம்மாள் அவருடைய உடல்நிலை சரியில்லாமல் அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவர்களும் ஆபரேஷன் பண்ணவேண்டுமென்று, மூன்று தடவை ஆபரேஷன் செய்து, அதனுடைய மொத்தச் செலவு ஏறத்தாழ ரூ. 30,000 ஆகியிருக்கிறது. அப்பவும் உயிருக்கு ஆபத்தான நிலையிலே வந்து, அவசர அவசரமாக தஞ்சையிலே இருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து பரிசீலிக்கிறபோது அந்த மூன்று ஆப்பரேஷன்களும் தேவையற்றது, தேவையில்லாமல் செய்கிறார்கள் என்று சொல்லி அங்கே ஒரு ஆப்பரேஷன் செய்து கடந்த 4 மாத காலமாக அவர்கள் நல்லபடியாக இருக்கிறார்கள். இப்படி தனியார் துறையில் இருக்கிற சில மருத்துவ மனைகளில் சாதாரண ஏழை மக்களை துன்பப்படுத்துகிறார்கள். அந்தச் செலவு மட்டும் ஏறத்தாழ 37 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. அந்த ஏழைக் குடும்பம் சாதாரணமாக 1 ஏக்கர், 1½ ஏக்கர் வைத்திருந்த நிலத்தைக்கூட விற்றுவிட்டு தன்னுடைய மனைவியை பாதுகாக்க வேண்டும் என்ற நிலையிலே அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அரசு அப்படிப்பட்ட மருத்துவமனைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பள்ளிகள் கல்விக்கூடங்கள். தமிழ்நாட்டில் இருக்கிற பள்ளிக்கூடங்கள் ரொம்ப மோசமான நிலையில் இருக்கின்றன. உதாரணத்திற்கு பொள்ளாச்சியிலே இருக்கிற பெண்கள் உயர் நிலைப் பள்ளியிலே இரண்டு கொட்டகைகளும் விழுந்துவிட்டன. நானும் என்னால் முடிந்தவரையில் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு பார்த்தேன். ஆனால் அந்தக் கொட்டகைகள் இன்னமும் எடுத்துக் கட்டப்படாமல் இருக்கின்றன. அதனால் மா நிழலில் பாடம் நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதுமாதிரி நிறைய பள்ளிகள் இருக்கின்றன. முனிவளத்திலே இருக்கிற அரசினர் பள்ளி, சூராவூரிலே இருக்கிற அரசினர் உயர்நிலைப் பள்ளி, தேவனூர், தேவூர், சாத்தியக்குடியிலே இருக்கிற அரசினர் உயர்நிலைப் பள்ளி—இந்தப் பள்ளிகளில் அனைத்திலும் முழுவதும் இடம் பத்தாமல் மரத்தடியிலே பாடம் நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சில இடங்களில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாக முயற்சி எடுத்து சில கீத்து கொட்டகைகள் போட்டு கொடுத்திருக்கிறார்கள். மேலும் நான் கூறிய அந்தப் பள்ளிகளையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்த இடங்களில் கட்டிடங்களை உருவாக்குவதற்கு முன் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து குடிநீர். குடிநீர் வசதியைப் பற்றி மக்கள் நல்வாழ்வு அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள். 42 கிராமங்களுக்கு குடிநீர் வசதி கிடையாது. அந்த 42 கிராமங்களுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்துவதற்காக மயிலாப்பூரிலே 11 லட்சத்திலே ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அது செயல்படாமல் இருக்கிறது. நான் அந்த மாவட்ட குடிநீர் துறை அதிகாரியை அணுகி கேட்கிற போது அவர்கள் துளை போடுவதற்கான இயந்திரம் எங்களுக்கு கிடைக்கவில்லை. அதனால் அந்த வேலையை துவக்க முடிய வில்லை என்று சொல்லுகிறார்கள். ஏறத்தாழ ஒரு ஆண்டு காலமாக இப்படி இருக்கிறது. அதை நிறைவேற்றினால் ஏறக்குறைய 42 கிராமங்களுக்கு குடிநீர் வழங்க முடியும். ஆகவே அந்த திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன் வடிவின் மீது கருத்துக்களை சொல்ல அனுமதித்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

"மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி, 5 நிமிடத்தில் முடிக்க வேண்டும்.





* **திரு. வ. சத்தியமூர்த்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் கொண்டு வந்த 1991 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை வரவேற்றுப் பேசுகிற இந்த நேரத்தில் தங்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். இந்தச் சட்டமன்றம் தொடங்கிய நாளிலிருந்தே என்னை நிற்க வைத்து உடனே உட்கார வைத்துவிடுகிறீர்கள். அன்புகூர்ந்து தாங்கள் சிறிது நேரம் அனுமதிக்க வேண்டுமாய் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும்போது கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றால் காடு ஆறு மாதம் நாடு ஆறு மாதம் என்று ஆட்சி நடக்கும் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் இன்றைய தினம் எங்கோ ஓடி ஒளிந்து, மூடி முக்காடிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, இந்த 3 மாத ஆட்சிக் காலத்தில் இன்று தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்காதவர்களும் இன்றைய தினம் இந்த ஆட்சியை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நினைவுபடுத்தி, பொதுப் பணித்துறையைப் பொறுத்தமட்டில் கால்வாய்களை மராமத்து செய்வதில் குடிமராமத்து என்ற ஒரு கொள்கையை கடை பிடித்துக்கொண்டு பன்னெடுங் காலமாக கால்வாய்களை மராமத்து செய்வது இல்லை, பராமரிப்பது இல்லை என்ற ஒரு நிலை தமிழகத்திலே இருந்துக் கொண்டிருக்கிறது. அப்படி பராமரிக்காத காரணத்தால் தண்ணீர் வரத்து இல்லை. கிராமத்தில் உள்ளவர்கள் 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள 10, 20 கண்மாய்களுக்கு ஒரே கால்வாயாக உள்ள பெரிய கால்வாயை குடி மராமத்து மூலம் பராமரிப்பது இல்லை. ஆகவே மழைக் காலங்களில் தங்கு தடை இன்றி தண்ணீர் வருவது தடையட்டிருக்கிறது. அந்த கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். கண் மாய்களை எப்படி தூர் வாருகிறார்களோ அதைப்போல கால் வாய்களையும் தூர் வார வேண்டும். குடிமராமத்து என்ற கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.05

அதுபோன்று நமது நெடுஞ்சாலைத் துறையில் கிழக்கு கடற்கரைச் சாலை அபிவிருத்தித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை 1983-ல் மத்திய அரசின் அனுமதியோடு துவக்கி செயல்பட்டு வருகிறது. 1982-ல் இந்த மன்றத்தில் என்ன சொல்லப்பட்டது என்று

சொன்னால், அந்தச் சாலை கன்னியாகுமரியிலிருந்து அபிவிருத்தி செய்து தரப்படும் என்று சொல்லி பணி துவக்கப்பட்டு நடைபெற்று வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்போது இருந்த பொதுப்பணித் துறை அமைச்சர், இதை சென்னையிலிருந்து நாங்கள் அபிவிருத்தி செய்து வருவோம் என்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாற்றியமைத்துவிட்டார்கள். முதலில் கன்னியகுமரி வரை என்ற ஒரு பகுதி வந்தது, இப்போது சென்னையிலிருந்து கடலூர் வரை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இடையில் இருக்கின்ற நாங்கள் என்ன கேட்பாரற்ற பிள்ளையா என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எல். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்போது சென்னையிலிருந்து கடலூர் வரை 53 கோடி ரூபாய்க்கு இந்த கிழக்கு கடற்கரை சாலை வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கன்னியாகுமரி வரை அந்தச் சாலையை நீட்டிப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சரிடம பேசியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே நானும் முதலமைச்சருடைய உத்திரவிற்கிணங்க டெல்லியிலே பேசி அதற்கான ஒரு ஒப்புதலைத் தருவதாக இன்றைக்கு மத்திய சர்பேஸ் ட்ரான்ஸ் போர்ட் மினிஸ்டர் ஜகதீஷ் டைட்லர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் அந்த கிழக்கு கடற்கரைச் சாலைத் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. சத்தியமூர்த்தி** : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்ற நேரத்தில் நான் சொல்வது முதலில் கன்னியாகுமரியிலிருந்து இந்த சாலை அபிவிருத்திப் பணி தொடங்கப்பட்டு பல ஆண்டுகள் நடந்து வந்தது. இடையில் அதனை நிறுத்திவிட்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சென்னையிலிருந்து தொடங்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஒரு பணி நடக்கின்றபோது ஒரு ருதர்க்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஊட்ட நடைபெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டித்தான்





நான் இதைச் சொல்வேன். நமது சாலைகளைப் பொறுத்தமட்டில் அதர் ரோட்ஸ் என்று ஒரு பிரிவை வைத்துக் கொண்டிருக்கிறோம். அதாவது, நேஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ், டிஸ்ட்ரிக்ட் ரோட் என்று சொல்லி ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி சாலைகள் என்றும் அதர் ரோட்ஸ் என்றும் கேட்டகரியை வைத்திருக்கிறோம்.

இதற்கு முன்பு எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு இணைப்புச் சாலைக்கு என்று தனியாக ஒரு நிதியை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்து வந்தது. 1982-ல் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இணைப்புச் சாலைகள் அனைத்தும் போடப்பட்டன. ஆனால் அவசர கோலத்தில், அந்தப் பணிகள் நடைபெற்றதால் பல்வேறு கிராமங்களுக்கு விடுபட்டிருக்கிறது. ஆனால் மாவட்ட அலுவலகத்திலிருந்து எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போட்டுவிட்டோம் என்று புள்ளி விவரத்தைக் கொடுத்து, இப்போது இணைப்புச் சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் போன்ற திட்டங்களில் தான் அந்தப் பணிகளை செய்து வருகிறோம்.

இன்றைய தினம் ஆர்.ஆர். என்ற துறையின் மூலம் ஆயிரம், 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட சாலைகளைத் தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சிகளை பொறுத்தமட்டில் ஊராட்சியில் இருக்கின்ற எழுத்தர்களுக்கோ அல்லது துப்புரவு தொழிலாளர்களுக்கோ சம்பளம் கொடுக்கின்ற அளவிற்கு அங்கே வருமானம் இல்லை.

ஒவ்வொரு ஊராட்சியிலும் 2, 3 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைகளை பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே இந்த ரூரல் ரோட் வொர்க்ஸ் மூலம் எடுக்கப்படுகின்ற மக்கள் தொகை கணக்கை எடுத்துவிட்டு 500 பேர் கொண்ட மக்கள் தொகை உள்ள கிராமமாக இருந்தாலும், அந்தச் சாலையை ஆர். ஆர். மூலம் எடுத்துச் செய்ய வேண்டும் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் அதிகமான வேலைகளை இன்றைய தினம் நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மெட்டல் சாலை

களை, தார் சாலைகளை 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் போடுகின்றோம். ஒரே ஆண்டில் அந்தப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கின்ற காலக்கட்டத்தில் ரோடு ரோலர்கள் இல்லாததால் அந்த வேலைகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்படவில்லை. கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட வேலைகளை இந்த ஆண்டு வரை முடிக்கப்படாததற்கு காரணம் ரோடு ரோலர் இல்லாதது தான். ஆகவே எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு ரோடு ரோலர் கிடைப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செல்ஃப் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம் என்ற ஒரு திட்டத்தை வைத்து மாவட்ட மையங்களில் அதற்கென்று ஒரு தொழில் மையம் இருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை கருத்தரங்குகளை நடத்துகிறார்கள். படித்த இளைஞர்களிடம் சுய வேலை வாய்ப்புக்கு மனு தாருங்கள் என்று சொல்கிறார்கள். அந்த மனுவை உடனே ஒரு வங்கிக்கு பார்வேர்டு பண்ணி அனுப்புகிறார்கள். அந்த படித்த இளைஞர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக, மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து அலைந்து விட்டு, அவர்கள் விரக்தி அடைந்து சென்று விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு ஆய்வு நடக்கின்றபோது செல்ஃப் எம்ப்ளாய்மென்ட்டுக்கு கடன் வழங்குவதற்கு எந்த வங்கி சம்மதம் தெரிவிக்கின்றது என்பதை ஒரு கூட்டு கூட்டத்தை நடத்தி அந்த வங்கியினுடைய ஒப்புதலைப் பெற்ற பின்னர் அந்த வங்கிக்கு அந்த மனுவை அனுப்புவார்கள் என்றால் இந்தத் திட்டம் பயன் தரத்தக்கதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.10

கல்வித்துறையைப் பொறுத்தவரையில் ஆரம்பப் பள்ளிகள் துவக்க வேண்டும் என்று 10, 15 ஆண்டுகளாக பல சின்ன சின்ன கிராமங்களிலிருந்து விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே என்ன முறை வைத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் கிராமங்களில் ஒரு கமிட்டியை வைத்து அந்த கிராமத்தில் இருப்பவர்கள் தாசில்தாரிடம் அதற்கான தகுதி சான்றிதழ்கள் எல்லாம் பெற்று எ.இ.ஓ. மூலம் டி.இ.ஓ. வுக்கு அனுப்பி, சி.இ.ஓ. மூலம் நமது கல்வித்துறை இயக்குநர் அவர்களிடம் வந்து சேரும். அப்படி வரப்பெறுகின்ற விண்ணப்பங்கள் அந்த ஆண்டு அனுமதிக்கவில்லை என்று சொன்னால் இங்கிருந்து திருப்பப்படு





கிறது. திருப்பப்பட்ட விண்ணப்பங்கள் மறு ஆண்டுக்கு வரப் பெறுவது இல்லை. மீண்டும் அந்த கிராமத்தில் ஒரு குழு கூடி இதுபோன்ற ஒரு புதிய சான்றிதழை வட்ட ஆட்சியரிடமிருந்தும் சகல அதிகாரிகளையும் பார்த்து ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டுமென்ற ஒரு துர்பாக்கியமான நிலையை கல்வித்துறை கையாண்டுக் கொண்டிருக்கிறது. அதை மாற்றியமைக்கவேண்டும். ஒரு முறை அவர்கள் முறையாக விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் தகுதி என்று சொல்லி கல்வித் துறையினுடைய இயக்குநருக்கு வந்து சேர்ந்து விட்டால் அந்த நடப்பு ஆண்டில் அதற்கு அனுமதி கொடுக்காவிட்டாலும் எதிர் காலத்திற்கு அந்தக் கோப்பை நிலுவையில் வைத்து இருந்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் கிராமத்தில் உள்ளவர்கள் ஆண்டாண்டுதோறும் சென்னை நகரம் நோக்கி படை எடுத்து ஒரு ஆரம்பப்பள்ளி கேட்கவேண்டிய நிலை வராது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கையில் இருக்கின்ற காவல் துறையில் உள்ள காவலர்களைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது இதய தெய்வம் அவர்களுக்கு பாதுகாப்புக்காக நேஷனல் செக்யூரிட்டி போர்ஸ் வந்திருக்கிறது. அவர்களுடைய உடலைப் பார்க்கின்றோம், நமது சாதாரண சட்டம் ஒழுங்கு துறையில் இருக்கின்ற காவலர்களுடைய உடலையும் பார்க்கின்றோம். இருவருக்கும் பயிற்சியில் வித்தியாசம் அவ்வளவுதான். சமீப காலத்தில் காவலர்களுடைய பயிற்சி காலம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுடைய தேக பயிற்சி மிகவும் குறைந்து இருப்பதாக கருதப்படுகின்றது. பொதுவாக நமது சட்டம் ஒழுங்கு காவல் துறையில் பணியாற்றுகின்ற காவலர்களை, அதிகாரிகளைப் பார்ப்போமானால் அவர்கள் பணிக்கு வந்து 5 ஆண்டில் அவர்களுடைய உடல் கூறு மாறிவிடுகிறது. ஆகவே, அவர்களுக்கு நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களுக்கு மறு பயிற்சி கொடுத்து ஆகவேண்டும். அப்படி மறு பயிற்சி கொடுத்து அவர்களுடைய தேகம் அல்லது உடல்நிலை காவல்துறைக்கு தகுதியானது இல்லை என்று சொன்னால் அவர்களை எ.ஆர். அல்லது ஸ்பெஷல் ஆர்ம்டு போர்ஸுக்கு அனுப்பி அங்கு பயிற்சி அளிக்க வேண்டும். அங்கு பயிற்சி பெற்றவர்கள் இங்கு மாற்ற வேண்டும். இப்படி ஒரு மாற்றும் முறையை வைத்துக்கொண்டால் காவல்

துறையில் இருப்பவர்கள் நல்ல உடல் கட்டோடு இருப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் வேண்டுகோளாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இடைச்செருகலாக உள்ளே பேச வந்திருக்கிறீர்கள். ஆகவே 5 நிமிடத்திற்கு மேலே போவது சரியல்ல. ஏற்கனவே நீங்கள் பெயர் கொடுக்காமல் இடைச்செருகலாக உள்ளே நுழைந்து இருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில் நமது கூட்டுக் குடிநீர் திட்டங்களில் பல கோடி ரூபாய் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்தத் திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றாத காரணத்தால் 5 கோடி ரூபாய்க்குப் போட்ட திட்டங்கள் எல்லாம் 25 கோடி ரூபாய் என்று வந்து நிற்கின்றது. ஆகவே அந்தத் துறை ஒரு திட்டத்தைப் போடுகின்ற போதே ஒரு காலக் கட்டத்தை நிர்ணயித்து அதற்குள்ளான மதிப்பீடுகளை தயாரித்து அதற்குள்ளாகவே நிறைவேற்றவேண்டுமென்ற நிர்ப்பந்தமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி அதை முடுக்கிவிட்டு அந்தப் பணியை முடித்து வாங்குவீர்களானால் நமது பொருளாதார சீரழிவைத் தடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி வணங்கி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

* **திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்ட பல்வேறு மானியக் கோரிக்கைகள் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும், அவைகளுக்கு பதில் அளித்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சிறிய பல கருத்துக்களை, சிறந்த திட்டங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். எவ்வளவுதான் நிதி நெருக்கடி இருந்தாலும் மக்களுக்கு ஆற்றும் பணியே மகேசன் தொண்டு என்பதை மையமாகக் கொண்டு இந்த அரசு பல அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறது. ஒரு சில பிரச்சினைகள் எடுத்துக் கூறப்படாமலும், வலியுறுத்தப்படாமலும் விடுபட்டு இருப்பதால் அத்தகைய பிரச்சினைகளை மட்டும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.





பிற்பகல் 1-15

கடந்த காலங்களில் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக நீர்ப்பாசன திட்டங்களில் பல திட்டங்கள் அறிவிப்போடு நின்று போய்விட்டன. இங்கே ஆவடி ஆறு மற்றும் பம்பை ஆற்று நீர்த் திட்டம் என்ற ஒரு திட்டம் பல ஆண்டு காலத்திற்கு முன்னால் நிறைவேற்ற வேண்டும் என்று வந்தது. நம்முடைய திட்டக் குழு கூட அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. கேரளாவில் ஓடி அந்த இரண்டு ஆறுகளும் அரபிக் கடலிலே கலந்து கொண்டிருக்கிறது. அங்கே ஒரு அணை கட்டி மேற்கு தொடர்ச்சி மலையில் சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் குடைந்து மதுரை மாவட்டத்திலே உள்ள உத்தமபாளையத்திலே தண்ணீரை விழச் செய்வோமேயானால், மிகவும் வறட்சி நிலவுகின்ற பல பகுதிகள், குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல்—அண்ணா, தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு அந்தத் திட்டம் பயன்படும் என்று சொல்லுகிறார்கள். முப்போகம் விளையக்கூடிய அளவிற்கு தண்ணீர் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். 2,200 அடி உயரத்திலிருந்து தண்ணீர் விழும் என்று சொல்கிறார்கள். அதில் மின்சாரம் தயாரித்தால் 2,76,000 கிலோவாட் மின்சாரம் கிடைக்கும் என்பதும் அன்றைய மதிப்பீடு. 1973 ஆம் ஆண்டு அன்றைய மத்திய நீர் வளத் துறை அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் கொடைக்கானலிலே 3 நாள் மாநாடு கூட்டியிருந்தார்கள். அந்த மாநாட்டில் அன்றைய கேரள முதலமைச்சர் அச்சுதமேனன் அவர்களும் நம்முடைய தலைமைப் பொறியாளர் நமச்சிவாயம் போன்றவர்களும் கலந்துகொண்டு தீர்மானமாகவே நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே 'சைட் சர்வே' எடுக்கப்பட்டு திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 1974-ல் 60 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு-எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. நமது மாநில திட்டக் குழுவில் அதற்குரிய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். அதேபோல, நீலகிரியிலேயிருக்கின்ற பாண்டியாறு-புன்னம்புழா திட்டம், அதுவும் கேரளாவிலே இருக்கின்ற ஆறுகள் பயனேயில்லாமல் சாலியாற்றிலே கலந்து, அரபிக்கடலில் விழுகிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் கோவை மாவட்டமும், பெரியார் மாவட்டமும் பெருமளவுக்குப் பயன் பெறும். அதேபோல இப்போது இருக்கிற பரம்பிக்குளம்—ஆழி

யாறு பாசனத் திட்டத்தையும் விஸ்தரிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த தனியார் கம்பெனியினுடைய முக்கிய பங்குதாரர் யார் என்று பார்த்தால், முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவருடைய குடும்பத்தினர்தான் அதிலே முக்கிய பங்குதாரர்களாக இருக்கிறார்கள். அவர் மத்தியிலே காபினெட் அமைச்சராக இருந்த நேரத்தில் மத்திய தரை வழிப் போக்குவரத்து அமைச்சராக இருந்தவரையும், அந்தத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவரையும் பயன்படுத்தி, இந்த நிலம் குத்தகைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. இது, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அடையப்பட்டிருக்கும் சலுகை.

அதேபோல, இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்கு எதிரிலே இருந்த 50 ஏக்கர் நிலத்தை வாங்குவதில் மிகப்பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது. மருத்துவக் கல்லூரியில் பணியாற்றுபவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு என்று வாங்கப்பட்ட நிலம் அந்த நிலம். தனி நபர்களால் இன்றைய தினம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த 50 ஏக்கர் நிலம், ஏக்கர் ரூபாய் 4 இலட்சம் விதம் 2 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தினுடைய உண்மையான விலை என்று எடுத்துக்கொண்டால், ஏக்கர் 10 இலட்சம் முதல் 15 இலட்சம் வரை போகும் என்று சொல்கிறார்கள். ஒரே நேரத்தில் முழுத் தொகையான 2 கோடி ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலம் 'ஸ்டெர்லிங் கம்ப்யூட்டர்ஸ்' என்ற நிறுவனத்திற்காக வாங்கப்பட்டிருக்கிறது. பின்னர், விவசாய விளை நிலமான அந்த நிலத்தை, வர்த்தக நோக்கத்திற்காக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவசர அவசரமாக எம். எம். டி. ஏ. இதற்கான நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறது. இந்தக் கம்பெனியிலும் மத்திய நகர்ப்புற வளர்ச்சிக்கு பொறுப்பு வகித்த முன்னாள் அமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார். இந்த நிலத்தை வாங்குவதற்கு தமிழக அரசின் நிர்வாக இயந்திரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே,





வேண்டும். அந்த நிலத்தை மீண்டும் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்கு ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினை சம்பந்தமாக இந்த அவையிலேயும் வெளியிலேயும் பேசப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் கல்வி பயிலும் மாணவர்கள், தமிழ் மொழியைக் கட்டாயமாக கற்க வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. அதேநேரத்தில் மொழிவழி சிறுபான்மையினருடைய குழந்தைகள், அவர்களுடைய தொடக்கக் கல்வியை தங்களுடைய தாய்மொழியின் மூலமாக கற்றுக்கொள்வதற்கு வேண்டிய வாய்ப்புகளை மாநில அரசு உருவாக்கித் தர கடமைப்பட்டிருக்கிறது. பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து இந்த உரிமையை மறுக்கக் கூடாது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள இந்த உரிமையை, பிற மாநிலங்களில் சிறுபான்மையினராக வாழும் தமிழ் மாணவர்களுக்குப் பெற்றுத் தர நம்முடைய அரசு தேவையான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

மத்தியிலுள்ள சிறுபான்மை சம்பந்தமான கமிஷனுக்கு 'ஸ்டேச்சுடரி ஸ்டேடஸ்', சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதற்கு மசோதா ஒன்றை மத்திய அரசு கொண்டுவர திட்டமிட்டிருக்கிறது. பீகாரில் ஏற்கெனவே அந்த மாநில அரசு, மாநில அளவிலான சிறுபான்மைக் கமிஷனுக்கு அத்தகைய சட்டபூர்வமான அந்தஸ்தை வழங்கிவிட்டது. தமிழகத்தில் உள்ள சிறுபான்மை கமிஷனை தகுந்த முறையில் திருத்தி அமைத்து அதற்கு சட்டபூர்வமான அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மை சமுதாயத்தின்மேல் பல்வேறு இடங்களிலே துன்புறுத்தல்கள் நடைபெறுவதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மைக்காலத்திலே கிறித்தவர் ஒருவர், பாஸ்டர் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது. அவர் பிடபிள்யூடி-யிலே வேலை பார்த்து வந்தவர். செருப்பலூர் பிடபிள்யூடி-யிலே வேலை பார்த்து வந்தவர். ஓய்வு நேரங்களிலே சுவிசேஷப் பணி செய்பவர். [illegible]

நிற்கு அருகில் உள்ள விட்டகவிலையில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். போலீஸ் நடவடிக்கை நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. அதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில், சென்ற அரசு செய்த அநீதிகளை மாற்றி உடனடியாக நியாயம் கிடைக்க உத்தரவிட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு மாவட்ட வாரியாக இ.எஸ்.ஐ. லோக்கல் கமிட்டிக்கு உறுப்பினர்களை நியமிக்கபொழுது முழுக்க முழுக்க அரசியல் கண்ணோட்டத்தோடு செயல்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல், ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், அதன் கூட்டாளிகளாக இருந்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவற்றின் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை, சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., என்.எல்.ஓ., போன்ற அமைப்புகளுக்கே அளவிற்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. அதிகமான தொழிலாளர்களைக் கொண்டுள்ள ஐ.என்.டி.யு.சி., சங்கத்திற்குப் பெயரளவிற்கே பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அண்ணா தொழிற்சங்கப் பேரவைக்கு அறவே பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இவ்வாறு 17 மாவட்டங்களுக்குக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றிய விவரங்கள், 1990 ஆகஸ்ட் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் 448 முதல் 456 வரையுள்ள பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இதேபோன்று, குறைந்தபட்ச சம்பள ஆலோசனைக் குழுவிலும் மற்ற குழுக்களிலும் இடம் அளிப்பதில் ஒருதலைப்பட்சமாகவே செயல்பட்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் முழுமையாக ஆய்வுசெய்து விருப்பு வெறுப்பு இல்லாமல் உரிய முறையில் பிரதிநிதித்துவம் அளித்து, எல்லாக் குழுக்களையும் திருத்தியமைக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் துறை ஆணையாளரிடமிருந்து அதிகாரங்களைப் பிரித்து, தொழிற்சாலைகளுக்கு உள்ள ஆய்வாளர் அலுவலகம் 'இன்ஸ்பெக்டர் ஆஃப் ஃபேக்டரீஸ்" தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதனுடைய செயல்பாடு திருப்திகரமாக இல்லை என்று பல தொழிலாளர்களும், தொழிற்சங்கங்





களும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதைச் சிறந்த முறையில் இயங்க வைக்க ஆய்வாளராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிப்பது பற்றிப் பரிசீலிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத தொழிலாளர் சம்பந்தப்பட்டவரை சட்டங்கள் சரியாக அமலாக்கப்படவில்லை. ஏனெனில், பலயிடங்களிலே தொழிற்சங்கங்களை அமைக்க அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. தீப்பெட்டி, பட்டாசுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுடைய பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.**

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்களிலே அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் கமிட்டி என்பதில், ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ. போன்றவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்; அண்ணா தொழிற்சங்கம், ஐ.என்.டி.யூ.சி., போன்றவர்கள் இல்லை என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறினார்கள். அங்கேகூட ஒரு தேர்தலை நடத்தி, அதற்கு மெம்பர்கள் ஓட்டுப்போட்டுத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்களே தவிர, இது அரசால் நியமிக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** அது முற்றிலும் தவறானது. உறுப்பினரவர்கள் சொல்வது சரியல்ல. கெஜட் இருக்கிறது; கெஜட்டிலே அறிவிப்பு வந்திருக்கிறது, அந்த எண்ணை நான் சொல்லியிருக்கிறேன். தேவைப்பட்டால் தொழிலாளர் நல அமைச்சரிடத்திலே நிச்சயமாக அந்தக் கெஜட் இதழ்களைத் தர நான் தயாராக இருக்கிறேன். என் கையிலே இருக்கிறது. அண்ணா தொழிற்சங்கப் பேரவையைச் சேர்ந்த ஒருவர் கூட, 17 மாவட்டங்களிலே இடம் பெறவில்லை. அதே போல, 3,37,501 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.என்.டி.யூ.சி., க்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. முழுக்க முழுக்க எல்.பி.எஃப்., திராவிட முன்னேற்றக் கழகம் சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ.சி., என்.எல்.ஓ., நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் இவர்களைச் சார்ந்தவர்களைத்தான் போட்டிருக்கிறார்கள். யாரும் இதை மறுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. காளன்.

*திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், இ.என்.ஐ., லோக்கல் கமிட்டிகள் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு. மாநில அரசுதான் தொழிற்சங்கங்களுடைய பதிவேடுகளைப் பரிசோதித்து, வெரிஃபிகேஷன் முறையிலே அங்கத்தினர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப அந்தக் கமிட்டிகளுக்கு நியமனம் செய்ய வேண்டும். அது ஒரு 'ஸ்டாச்சுடரி பாடி'. ஆனால், அந்த 'ஸ்டாச்சுடரி' சிஸ்டத்தை மாற்றி, ஐ.என்.டி.யு.சி.-க்கு தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவிலேயே எல்லா தொழில்களிலும் அதிகப்படியான உறுப்பினர்கள் இருந்தாலும்கூட, அதைப் புறக்கணித்து ஒருதலைப் பட்சமாக நிராகரித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக . . . . . .

(பிற்பகல் 1-25)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். அரசாங்கமே செய்துள்ளது. தேர்தலே நடத்தவில்லை என்றுதான் அவரே சொல்கிறார். மேற்கொண்டு விவரங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

திரு. கோ. காளன்: சரி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: ஆக, திட்டப்படாத அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மர வேலை செய்யும் தொழிற்சாலைகள் போன்ற 14 தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஜி.ஓ.எம்.எஸ். எண் 1248, 13—6—1988 தேதியிட்ட, தொழிலாளர் நலத் துறையால் போடப்பட்ட அரசு ஆணை இன்றுவரை அமலாக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. தாமதத்தைத் தவிர்த்து, உடனடியாக அதை அமலாக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சென்னை நகரிலே இருக்கிற மிகப் பழமையான பி.&.சி ஆலை, மூடப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக்கூட இங்கே அறிவிப்புகள் வெளிவந்தன.



நேற்றைய தினம் நம்முடைய உயர்நீதிமன்றம் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. லேபர் கமிஷனர் போட்ட ஆணையை ரத்து செய்து, உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அவர்கள், லேபர் கமிஷனர், நிர்வாகத்தையும், மற்றவர்களையும் அழைத்துப் பேசி, பிறகு முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பதிலே, நிர்வாகத்தை மட்டும் கலந்துகொண்டு, லேபர் யூனியனை மட்டும் கலந்து கொண்டு, இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக சொல்லி அதை நிராகரித்து இருக்கிறார்கள். அந்த நிர்வாகத்திலே, கடன் கொடுத்த வங்கிகள் இடம் பெற்றிருக்கின்றன. ஐ.டி.பி.ஐ. லேயிருந்து ஒரு டைரக்டர் இருக்கிறார்; ஸ்டேட் பாங்கிலிருந்து ஒரு டைரக்டர் இருக்கிறார்; "ஷேர்-ஹோல்டர்ஸின் சார்பிலே டைரக்டர்கள் இருக்கிறார்கள்; மாநில அரசாங்கத்தின் சார்பிலே ஒரு டைரக்டர் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், "சேர்மன்" டைரக்டரே ஸ்டேட் பாங்க் பிரதிநிதிதான். மீண்டும்—உயர்நீதிமன்றம் என்ன சொல்கிறது?—அவர்களிடத்திலே பேசிவிட்டு, ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறது. இதிலே சிரமம் என்னவென்றால், ஐ.டி.பி.ஐ., கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறது; 60 கோடி ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், சாயப் பகுதியை புவனகிரிக்கு மாற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். தொழிலாளர்களுக்கோ அச்சம் இருக்கிறது. ஒரு பகுதியை புவனகிரிக்கு மாற்றினால், முழுமையாக அங்கே கொண்டுபோய் விடுவார்கள்; பிறகு வேலை கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சம் இருக்கிறது. எனவே, மீண்டும் லேபர் கமிஷனர் அவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தி, பிறகு ஒரு ஆணை பிறப்பித்து, அந்த ஆணைக்கு எதிராக மீண்டும் கோர்ட்டுக்குப்போய்—ஆக இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, அரசாங்கமே இரண்டு தரப்பினரையும் அழைத்துப் பேசி, இதற்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டும். விரைவிலே அந்த ஆலையைத் திறக்க முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், நீண்டகாலமாகவே, 'மால்கோ' ஆலை, மேட்டூரிலே இருக்கிற 'மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி' யும் மூடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் அங்கேயும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலையைத் திறந்து நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 28

கிறேன். நிர்வாகம் அந்த ஆலையைத் திறந்து நடத்துவதற்குத் தயாராக இருக்குமேயானால், அதை நிர்வாகத்திடமே ஒப்படைக் கலாம். அதிலே தவறு கிடையாது. இல்லாவிட்டால், யார் ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறார்களோ, அவர்களை ஏற்று நடத்த அரசாங்கம் அழைக்க வேண்டும். உதாரணமாக, ஹிந்துஸ்தான் அலுமினியம், லார்சன் அண்டு டூப்ரோ, கெமிகல்ஸ் & பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட்—கெம்ப்ளாஸ்ட்—போன்ற நிறுவனங்கள், 'மால்கோ'வை எடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டி ருக்கிறார்கள். ஆனால், அதற்கான கூட்டத்தைக் கூட்டுவதற்கு மீண்டும் ஒரு தடை ஆணை போட்டு உயர்நீதிமன்றத்திலே தடுக்கப்பட்டிருக்கிறது. Bureu of Industrial and Finance Reconstruction மூலமாக கூட்டம் நடத்த முயற்சித்தபோது, கூட்டம் நடத்தக் கூடாது என்று தடை வாங்கியிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து அரசு ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும். ஒன்று, நிர்வாகம் நடத்த வேண்டும்; இல்லாவிட் டால் அரசு நடத்த வேண்டும்; இல்லாவிட்டால், யார் நடத்தத் தயாராக இருக்கிறார்களோ, அவர்களிடத்திலே கொடுத்து அந்த ஆலையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கோவையிலே பல ஆண்டுகளாக பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன; பஞ்சாலைகள் பல ஆலைகள் மூடப்பட் டிருக்கின்றன. தொழிலாளர்கள் வறுமையிலே வாடிக் கொண்டி ருக்கிறார்கள். மிகவும் சிரமத்திற்கு ஆளாகி, வாழ்வதற்கே வழி யில்லாமல் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அந்தனை பேருக்கும் தெரியும். உடனடியாக கோவையிலும், மற்றப் பகுதி களிலேயும் மூடப்பட்டிருக்கிற அந்த ஆலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன். பி & சி மில் தொழிலாளர்களுக்கு வழங்கியதைப் போன்று, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, மூடப்பட்டி ருக்கும் எல்லா ஆலைத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறை, பொதுத் துறை என்ற பாகுபாடு இல்லாமல் நம்முடைய அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டம் வந்துவிட்டது. இரண்டு துறைகளுமே, பொதுமக்களின் நலன், நாட்டின் வளம் என்ற கோரிக்கைகளை நோக்கி செல்ல



1991 செப்டம்பர் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற் றங்கள், சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டிய அவசியத்தை உருவாக்கியிருக்கின்றன. பொதுத் துறை என்பதற்காக பொது மக்களுடைய வரிப்பணத்தில் சலுகை களை வழங்கிக் கொண்டிருப்பது வளர்ச்சிக்கு உதவாது. தனியார் துறை என்பதால், தேவையற்ற கட்டுப்பாடுகளையும், தடை களையும் ஏற்படுத்தி, முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடக் கூடாது. முதலீடுகளை ஊக்குவித்து, தொழில்கள் பெருகவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய வகையில், தாராளமாக்கப் பட்ட Liberalised புதிய பொருளாதாரக் கொள்கை உரு வாக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது)

பிற்பகல் 1-30.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதி யோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:** அதனைப் பின்பற்றி தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு அறிவித்துள்ள பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் பலதரப்பட்டவர்களாலும் இன்றையதினம் வரவேற்கப்பட்டிருக்கிறது. இனிமேல் தொழில் துறையில் திறமையான மற்றும் திறமையற்ற Efficientand Inefficient என்ற பாகுபாடு மட்டுமே இருக்க வேண்டும். "திறமைகொண்ட, தீமையற்ற, தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வோம் இந்த நாட்டிலே" என்று மகாகவி பாரதி பாடியதைப்போல், தொழிலிலே திறமை காட்ட வேண்டும். அந்தத் தொழிலும் தீமையற்றதாக இருக்க வேண்டும். அதுவும் எல்லோரையும் வாழவைப்பதாக இருக்க வேண்டும். அந்த அடிப் படையில் செயல்படுவதற்கு இந்த அரசு முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

தொழில் புரிவோரையும் இனிமேல் இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஒன்று நேர்மையானவர்கள். மற்றொன்று நேர்மை யற்றவர்கள். உழைப்பாளர்கள் அவர்களை இயக்குவோரும் வணி கர்களும் நேர்மையைக் கைக்கொள்ள வேண்டும். மனசாட்சிப்படி உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டுமென்பதை ஒரு அடிப்படை யாகக் கொள்ளவேண்டும். பணியில் பாதுகாப்பு இருக்கிறது என்பதற்காக உழைக்காமலேயே ஏய்த்துப் பிழைப்பதும், நிர்வாகிகள்-பொய்க் கணக்கு எழுதி, உற்பத்தியைக் குறைத்தும்,

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 28

மறைத்தும், கொள்ளை இலாபம் அடிப்பதும், கலப்படம், கள்ளச் சந்தை, வரி ஏய்ப்பு போன்ற செயல்களில் ஈடுபடுவதும் இந்த நாட்டிற்கும், மக்களுக்கும் செய்யும் மாபெரும் துரோகம் என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். அடிப்படையில் நாணயமான, நேர்மையான வழிகளை ஊக்குவிப்பது என்றும், உதவுவது என்றும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. தொழில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்குப் பல சலுகைகளை அறிவித்திருக்கிறது. இவைகள் எல்லாம் வளமான தமிழகத்தை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள சிறந்த நடவடிக்கைகள் ஆகும்.

இன்றையதினம் இன்னொரு செய்தியும் பத்திரிகையிலே வந்து இருக்கிறது. இங்கே தேச விரோத சக்திகளுக்கெதிராக, நம்முடைய நாட்டிலே குழப்பம் விளைவிக்கின்ற எண்ணத்தோடு செயல்படுகின்ற பல்வேறு சக்திகளை ஒடுக்குவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது. குறிப்பாக, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், அவர்கள் செயல்பாட்டிலே இங்கே செயல்படுபவர்கள்மீது அவர்களுக்கு எதிராகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்றையதினம் உயர்நீதிமன்றம் ஒரு ஆணை பிறப்பித்து இருக்கிறது. இங்கே ஒரு மன்றத்தின் சார்பில் ஒரு கவியரங்கம், கூட்டம் நடத்த வேண்டுமென்று அனுமதி கேட்கப்பட்டிருந்தது. அந்த அனுமதி போலீஸ் கமிஷனரால் மறுக்கப்பட்டது. அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு அவர்கள் போய், உயர்நீதிமன்றம் போலீஸ் கமிஷனருடைய ஆணையை ரத்துச் செய்து, ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இதனுடைய விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். It will have for reashing Con εq .ences ஜனநாயகப் போர்வையில் பிரிவினைவாத நடவடிக்கைகள் உயிர் பெறக்கூடும். எனவே, அரசாங்கம் இதற்கு எதிராக, உடனடியாக மேல்முறையீடு செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற சக்திகளுடைய நடவடிக்கைகளை என்றும் தடுப்பதற்குரிய சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம், உலகத்திலே அமைதி நிலவ வேண்டும் என்கிற ஒரு மாறிய சூழ்நிலையில் இன்று [illegible]



1991 செப்டம்பர் 28] [திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நல்ல செய்தி வந்தது. பத்திரிகையிலே வரவில்லை. ரேடியோவிலே சொன்னார்கள். அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் அணு ஆயுதங்களை அழிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று. அதேபோல நம்முடைய தமிழகத்திலும் அமைதி நிலவ வேண்டும். அப்பொழுதுதான் ஆக்கப் பணிகள் இங்கே நடைபெறும். எனவே, அமைதி நிலவுகின்ற சூழ்நிலை ஏற்படுவதற்காக நீங்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்கள் முழு ஆதரவும் உண்டு என்று மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி அமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் சிறந்த முறையில் பணியாற்றி தன் முத்திரையைப் பதித்தவர் டாக்டர் நாவலர்; அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே பாராட்டுதலுக்கும் வரவேற்புக்கும் உரியதாகும். இதற்கு முன்னர் என்றும் இல்லாத அளவுக்கு நிதி நெருக்கடியிலும், கடன் பொறியிலும் நமது நாடு சிக்கித் தவிக்கின்ற சூழ்நிலையிலும், "வரிகளைக் குறைப்போம்; வசதிகளைப் பெருக்குவோம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் திட்டங்களைத் தயாரித்து நிதிநிலை அறிக்கையாகத் தமிழக மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். மகாபாரதத்தில் வரி விதிப்பு எப்படி இருக்க வேண்டுமென்று விதுரன் சொல்லுகிறான். 'ஒரு மலரில் தேனீ அமர்ந்து அந்த மலருக்குச் சேதம் இல்லாமல் எப்படித் தேன் சேகரிக்கிறதோ, அதைப்போல் வரி விதிப்பு இருக்க வேண்டும்' என்கிறான். அதைப் பின்பற்றி நாவலர் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார். எண்ணற்ற சலுகைகள், ஏராளமான ஊக்குவிப்புகள் அறிவிக்கப்பட்டு, நம்பிக்கையோடு நமது மக்களை அடைபோட வைத்திருக்கும் நமது நிதியமைச்சர் அவர்களை 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று கூறினால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை? என்று கூறினால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை' (மேசையைத் தட்டும் ஒலி) அவரே குறிப்பிட்டிருப்பது போன்று, இந்த வெற்றிக்குக் காரணமான நிதிநிலை அறிக்கைக்குப் பின்னாலும் நமது முதலமைச்சர் அவர்கள் வெற்றித் திருமகளாக விளங்குகிறார்கள் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை என்பதைப் பெருமையோடு கூறி, அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-35)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான செலவினங்களுக்காக ரூபாய் 8469 கோடியே 69 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரும் நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் பேரில் நடைபெறுகிற விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 12 பேர் கலந்துகொண்டு தன்னுடைய கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் 62 மானியக் கோரிக்கைகள் மீது சென்ற சில நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் இந்தப் பேரவையைச் சேர்ந்த உறுப்பினர் பெருமக்கள் அத்தனைபேரும் கலந்துகொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களை அந்தந்த மானியக் கோரிக்கைகளின் மீது எடுத்துத் தெரிவித்து, அந்தந்தத் துறையினர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இந்த அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாகவும் சொல்லியிருக்கிறார்கள்; விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள்; தெளிவாகவும்கூட சொல்லியிருக்கிறார்கள்; திட்டமாகவும் கூட சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே ஒரு மகிழ்ச்சி என்னவென்று கேட்டால், பேசிய உறுப்பினர்கள் பலருக்கும் இப்போது இலக்கியச் சுவையோடு பேச வேண்டும் என்ற ஒரு நல்ல ஆர்வம் கூட ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பட்டிருப்பது கூட மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். உலகத்திலே இருக்கின்ற நாடாளுமன்றங்களிலேயே இலக்கியச் சுவையோடு பேசுகிற ஒரு மரபைக் காப்பாற்றி வருவது ஃப்ரென்ச் நாட்டு நாடாளுமன்றம்தான். அங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் இலக்கியத்தைச் சான்று காட்டிப் பேசுகிற பழக்கத்தைப் பல நூற்றாண்டுகளாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல் ஃப்ரென்ச் நாட்டினுடைய நீதிமன்றங்களிலேகூட வழக்கறிஞர்கள் எல்லோரும் வாதாடும்போது இலக்கியங்களிலிருந்து சான்றுகளை எடுத்துச் சொல்லி, எடுத்துச் சொல்லித்தான் வாதாடுவார்கள் என்ற ஒரு நிலை உண்டு. அந்த நிலைக்கு ஏற்ப இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுக்குச் சொல் சுவை ஏற்றி இலக்கிய நயம்பட எடுத்துச் சொல்கிற ஒரு பாங்கு நன்றாக இருக்கிறது என்றாலும் கொஞ்சம் பொருள் செறிவும் ஏற்பட்டால் மிக்க நன்றாக இருக்கும். அதிலே பொருட்சுவையும் புதைந்திருக்கிற அளவுக்கு எடுத்துச் சொல்வார்களேயானால், சொற்சுவைக்கேற்ப பொருட்சுவையும் அமைந்து அதன்மூலமாக நல்லபல பலன்கள் நமக்கு ஏற்படுவதற்கு





கூடும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆட்சியினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று, சென்ற சில திங்களுக்குள்ளாக இந்த ஆட்சியினுடைய நடைமுறைப் போக்குகளை எல்லாம் நன்கு உணர்ந்து அறிந்து தேர்ந்து எந்தெந்த வகைகளில் குறைபாடுகளை நீக்கலாம், நிறைபாடுகளை எந்தெந்த அளவிலே செய்யலாம் என்பதற்காக நீடு சிந்தித்து அந்தத் தன்மைகளின் அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் உணர்வீர்கள்.

இங்கே பல மானியக் கோரிக்கைகளில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அத்தனைபேரும் அதாவது, எல்லா தரப்பினரும் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் நாம் எதிர்பார்க்கின்ற மேம்பாடுகளையும் சிறப்புக்குரிய திட்டங்களையும் வரவேற்று இருப்பதோடு வாழ்த்திப் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் அத்தனைபேருக்கும் நான் அரசின் சார்பாக நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரவு-செலவுத்திட்டம் என்று வருகிறபோது ஒரு அரசினுடைய வரவு-செலவுத் திட்டம் என்பது தன்னுடைய வருமான கணக்கையும், செலவுக் கணக்கையும் மட்டுமே தொகுத்துக் கொடுக்கின்ற ஒரு கணக்குப் பதிவேடாகாது. ஆகவே அரசினுடைய வரவு-செலவுத் திட்டமானது நாட்டினுடைய உற்பத்திப் பெருக்கத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் மக்களின் வாழ்க்கை நிலையையும், சமுதாய மேம்பாட்டையும் படம் பிடித்துக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், அவற்றை அறுதியிட்டு உறுதியாக எடுத்துச் சொல்கிற வகையில் அமைய வேண்டும் என்பதுதான் நியதி. வரவு-செலவுத் திட்டத்தின் பின்னால் ஒரு திட்டவட்டமான கொள்கை இருக்க வேண்டும் என்பதும், கோட்பாடு இருக்க வேண்டும் என்பதும், குறிக்கோள் அமைய வேண்டும் என்பதும், ஆழ்ந்த கண்ணோட்டத்தோடு அது அமைக்கப்பட வேண்டும் என்பதும், தொலை நோக்கு பொதிந்ததாக இருக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும். உள்ளபடியே அவற்றிற்கு இலக்கணமாக அமைந்திருக்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அடிப்படை எண்ணங்களை எல்லாம் கருத்தில் வைத்துத்தான் இந்த ஆண்டு மிக அதிகமான அளவுக்கு பற்றாக்குறை ஏற்படுகிற சூழ்நிலை இருந்தாலும் கூட நாட்டிலே எதிர்பார்க்கப்படுகிற வளர்ச்சித் திட்டங்கள் எந்த வகையிலும் குறைபடக் கூடாது என்பதற்காகவும், நாட்டு மக்களுடைய நலன்கள் போற்றப்பட வேண்டும் என்பதற்காகவும்

நல்வாழ்வுக்கான திட்டங்கள் எந்தவகையிலும் குறைபடாமல் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், ஆகவே பற்றாக் குறைகளை ஓரளவுக்குச் சகாரிக்கவேண்டும் ஒரு பக்கத்தில் என்று எண்ணி மற்றொரு பக்கத்திலே நாம் தயாரித்த திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களுக்கு வாய்ப்பு வசதி களை அளிக்கிற வகையில் பல்வேறு தேவைகளோடு கூடிய திட்டங் களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்பதிலே [illegible] கருத்துடைய இருந்து அவற்றை எல்லாம் நிறைவேற்றித் தந்திருக் கிறார்கள் என்பதையும் அவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப் பினர் பெருமக்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிவோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பெரு மக்கள் இருக்கின்ற நிலைமையையும் அறியவேண்டும். ஏனென்றால் இருக்கின்ற வருமானத்தினுடைய அளவை வைத்துத் தான் நாம் செலவினம் செய்யவேண்டும் என்கின்றபோது வருமானத்தை பெறுகின்ற அளவுக்கான வாய்ப்புக் கூறுபாடுகளை அரசு எண்ணுகின்றபோதும், எடுத்துச் சொல்கிறபோதும், இந்த கருத்துக்களுக்கு நல்ல ஆதரவும், ஒத்துழைப்பும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அத்தனை பேரும் கொடுத்தால் தான் எதிர்காலத்திலே நல்லதொரு சூழ்நிலையை நாம் எதிர் பார்க்க முடியும்.

(பிற்பகல் 1.40)

நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்குப் பதிலுரை கூறுகின்றபோதே ஓரளவுக்கு நான் சுட்டிக் காட்டினேன் என்றாலும், வருவாய் கணக்கிலே வருவாய் நமக்கு வருகிறது, மூலதனக் கணக்கிலே வருகிறது. இந்த இரண்டிலேயும் பற்றாக்குறை ஏற்படாத அளவுக்கு ஒரு நாட்டி னுடைய ஒரு அரசினுடைய நிதிநிலை வைக்கப்பட்டால்தான் நீடித்த காலத்திற்கு நிலைத்த காலத்திற்கு உறுப்பினர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்கின்ற திட்டங்களை எல்லாம் சிறப்பாகவும் செம்மையாகவும் நிறைவேற்ற முடியும். அதற்கான வழிவகைகளை காணுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அதற்கு உதவி செய்தல் வேண்டும். ஆனால் வருவாய் கணக்கிலே வருகின்ற வருமானத்திலே துண்டு விழுகின்ற நிலை ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது மூல தனக் கணக்கிலே இருந்து திட்டங்களுக்கும் மற்றவைகளுக்கும் செலவழிக்கின்ற பணத்தை எடுத்து இதிலே போட்டு, திட்டவே மானால் இந்த [illegible] வளர்ச்சித் திட்டங்கள் மற்றவைகள்





எல்லாம் நீங்கள் ஒவ்வொரு துறையாக எடுத்துச்சொல்கிறபோது நிறைவேற்றுவதற்கு நிதிவசதி ஏற்படாமல் போய்விடும். வருவாய்த் துறையிலே அதிகமான துண்டு விழாத அளவுக்கு அதற்கு செலவினம் போக பணம் மீதப்பட்டால் தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொகுதி பற்றியும் ஆங்காங்கு இருக்கின்ற நிலைமைகளைப் பற்றியும் எடுத்துச்சொல்கிறபோது அதை ஈடுகட்டுவதற்கான தன்மைகள் ஏற்பட முடியும். வருவாய்த் துறையிலே பற்றாக்குறை ஏற்பட்டு மூலதனக் கணக்கிலேயிருந்து அப்போது பற்றாக்குறையை எடுத்து செலவழிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற நிலை ஏற்பட்டு விடுமேயானால் அதன் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகள் உள்ளபடியே பயங்கரமானதாகத்தான் அமையும். உதாரணத் திற்கு நான் ஒன்று சொல்கிறேன். இந்த ஆண்டு மத்திய அரசு போட்டு இருக்கின்ற வரவு செலவுத் திட்டமானாலும் சரி, நம் முடைய மாநில அரசிலே போட்டிருக்கின்ற திட்டமானாலும் சரி, தொள்ளாயிரத்துச் சில்லரை கோடி ரூபாய்க்கு நம்முடைய மாநிலத்தினுடைய அரசு செலவு திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் வருவாய்த்துறை கணக்கிலேயும் பற்றாக்குறை ஏற்படுகின்ற அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்பட்டதன் விளைவாகத்தான் மூலதனக் கணக்கை போட்டதற்குப் பிறகும் கூட தொள்ளாயிரத்து சில்லரை கோடி ரூபாய் பற்றாக்குறை நமக்கு ஏற்படுகிறது.

மத்திய அரசினுடைய கணக்கு, இந்த ஆண்டுக் கணக்கு தொடர்ந்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டிலே இருந்தே மத்திய அரசாங்கத்தினுடைய நிலையும் அப்படித்தான் இருந்து வருவதன் காரணமாக நாட்டிலே, இந்தியாவிலே பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கணக்கை நான் சொல் கிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய வருவாய்க் கணக்கிலே 15,759 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டு. அதே நிலையிலே கணக்கிலே 6,135 கோடி ரூபாய் இருக்கிறது என்று சொன்னால் மூலதனக் கணக்கிலே இருக்கின்ற 6,135 கோடியையும் எடுத்து இதிலே போட்டதற்குப் பிறகும், வருவாய்த் துறை பற்றாக் குறையை கழிப்பதற்கு போட்டாலும்கூட மூலதனக் கணக்கு முழுக்க போய் விட்டது. மீதி 9,724 கோடி நிற்கிறது என்கின்ற போதுதான், இரண்டாயிரத்து சில்லரை கோடி ரூபாய்க்கு வரி போடவேண்டிய அவசியம், ரெயில் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம், ஏற்றுமதி இறக்குமதியிலே வேறுபாடுகள்

காணவேண்டிய அவசியம், கடன் வாங்கவேண்டிய அவசியம், ஏற்பட்டிருக்கிறது. இப்போதுகூட கிட்டத்தட்ட 4 ஆயிரம், 5 ஆயிரம் கோடிக்கு இந்த ஆண்டிலே கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை இருந்து, இப்போது அண்மையிலே கூட இரண்டாயிரம் கோடி ரூபாய் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு வந்து,... அதன் காரணமாக பண வீக்கம் ஏற்பட்டு, செலவினங்கள் எல்லாம் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது, எதற்கு சொல்ல வருகிறேன் என்றால் வருவாய்த் துறையிலே பற்றாக் குறை ஏற்படாத அளவுக்கு செய்யவேண்டுமென்று சொன்னால், நம்முடைய வருவாய்த் துறை கணக்குப் பெருகி, மற்றைய கணக்குகள் குறையவேண்டும். அதைத் தான் மாண்புமிகு உறுப் பினர்கள் சிலர் பேசும்போதுகூட இங்கே குறிப்பிட்டுக் காட்டி னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் பேசு கிறபோதுகூட, நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரையிலும் நமக்கு அதிக நிதி ஆதாரங்கள் வேண்டும், அதற்கான வழிவகைகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருந்தால் தான் அந்த மாநில அரசு அதனுடைய பணிகளை செம்மையாக செய்ய முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இதைத் தான் இந்த மாமன்றத் திலே பேரறிஞர் அண்ணா அவர்களும் சரி அதற்கு பிறகு தொடர்ந்து வருகிறபோதும்கூட அதை தொடர்ந்து நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அந்த நிலை பொதுவாக நாட்டிலே ஏற்படுதல் வேண்டும். அந்த நிலை ஏற்படுவதன் காரணமாக மத்திய அரசும் செம்மையாக இருக்கமுடியும், மாநில அரசும் செம்மையாக இருக்கமுடியும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் கூட சுட்டிக்காட்டினார்கள்.

பிற்பகல் 1-45.

அமெரிக்காவை பொறுத்தவரையிலும் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட வெளிநாட்டு விவகாரம், கரன்சி, டிபென்ஸ்-பாதுகாப்பு, ஏற்றுமதி, இறக்குமதி, எக்சைஸ் போன்றவை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டு மற்றவை களை எல்லாம் நிதி ஆதாரங்களைப் பெருக்குவது, உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவைகளை எல்லாம் மாநிலங்களுக்கு விட்டுக் கொடுப்பதன் காரணமாக அங்கே சீரான நிலை, சிறப்பான நிலை என்பது மட்டுமல்லாமல் உலகத்திலே பொருளாதாரத்தை ஆட்டும்





படைக்கின்ற 'டாலர்' வலிவு பெற்று அதை வைத்துத்தான் உலகத்திலே இருக்கின்ற பொருளாதாரம் எல்லாம் நிர்ணயிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டினார். அதற்கு என்ன காரணம் என்று நாம் பார்க்கும் போது, அங்கே மாநிலங்களுக்கு தான் எல்லா அதிகாரங்களும். மாநிலங்கள் பார்த்து மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் தான் அமெரிக்காவைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனால் நம் நாட்டைப் பொறுத்த வரையிலும், எல்லா அதிகாரங்களும் மத்திய அரசுக்குத் தான் இருக்கும். மத்திய அரசாங்கம் பார்த்து நமக்கு தந்தால் தான் மாநில அரசுகளுக்கு உண்டாகும். அப்படி 97 அதிகாரங்கள், பெரிய பெரிய அதிகாரங்கள், பெரிய பெரிய வருமானத்தை ஈட்டுகிற அதிகாரங்கள் எல்லாம் டெல்லியிடத்திலே இருக்கிறது. நம்மிடத்திலே ஒரே ஒரு அதிகாரம் மட்டும் தான். கொஞ்சம் காமதேனு அல்லது கற்பக விருட்சம் என்று எந்தப் பெயர் சொன்னாலும் கூட பெயர் பெறக்கூடிய அளவிலே விற்பனை வரித் துறை மட்டும் இருக்கிறது. மற்றவைகள் எல்லாம் மிக மிக சாதாரணமானவைகள். கிட்டத்தட்ட 47 அதிகாரங்கள் நம் மிடத்திலும், 63 அதிகாரங்கள் இரண்டு பேருக்கும் சொந்த மாகவும் இருந்து, அதில் தகராறு ஏற்பட்டால் மத்திய அரசு என்ன முடிவு சொல்கிறதோ அது தான் முடிவு என்று அதிலே சொல்லி, ஆக, இந்த 63 அதிகாரங்களும் கூட அவர்களுக்கும் சொந்தம் என்று ஆகிவிட்ட காரணத்தினால் எந்த ஒரு கட்டத்திலும் நாம் தன்னிச்சையாக எந்த மாநிலத்தினுடைய தேவைகளையும் நிறைவேற்ற முடியவில்லை என்ற காரணத் தினால்தான் அதைப்பற்றி இங்கே எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். இது நாம் மட்டுமல்ல, காங்கிரஸ் மாநில முதலமைச்சர்களுக்கும் இந்த எண்ணம் தான் வந்திருக்கிறது. அப்போதே டாக்டர் பி. சி. ராய் மேற்கு வங்காளத்தை ஆண்ட போது இந்தக் கருத்தைத்தான் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இப்போது, அண்மையில், 19—9—1991 வந்திருந்த எக்கனாமிக் டைம்ஸ் என்ற ஒரு பத்திரிகை, பொருளாதாரத்தைப் பற்றி, மற்றவைகளைப் பற்றி எல்லாம் ஆய்ந்து அறிந்து கட்டுரைகள் பலவற்றை எழுதுகிற பத்திரிகை அதனுடைய தலையங்கத்திலே இந்தத் திங்கள் 19 ஆம் தேதியன்று ஒரு தலையங்கத்தைத் தீட்டியிருக்கிறது. 'விசன் டு தி ஸ்டேட்ஸ்' என்று தலைப்பிட்டு, அந்தத் தலையங்கத்திலே,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 செப்டம்பர் 28

என்று மாநிலங்களினுடைய நிலைமைகளை நாம் மட்டுமல்லாமல், காங்கிரஸ் முதலமைச்சர்கள் ஆளுகின்ற இடங்களிலே கூட இந்த நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக எல்லா மாநிலங்களுக்கும் இந் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆக, நிதி ஆதாரங்கள் அதிகமாக ஆகுமானால் இப்படிப்பட்ட பற்றாக்குறை நிலைமைகளை நாம் ஓரளவு மாநிலங்களைப் பொறுத்தவரையில் சமாளிக்கலாம் என்றாலும் கூட, அந்த சூழ்நிலை ஏற்படுகின்ற வகையில் இங்கே ஏற்பட்டிருக்கின்ற தன்மைகளை எல்லாம் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக் களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் ஒவ்வொரு துறைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்களுக்கு அந்தந்தத் துறை அமைச்சர் பெருமக்கள், அவற்றைப் பற்றி நல்ல முறையில், சிறப்பாக ஆராய்ந்து பார்த்து, அவற்றின் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுப்பார்கள் என்றாலும் இங்கே பொதுவாக இருக்கிற நிதி நிலையைப் பொறுத்துத்தான் ஒவ்வொரு துறையும் கூட தன்னுடைய பணிகளை மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து காட்ட முடியும். "The Chief Minister of Gujarat Mr. Chimanbhai Patel has joined others of such regional stalwarts as Jyoti Basu and Mr. Biju Patnaik in demanding greater fiscal autonomy for the State. It is a sign of the times that now even the Congress-I Chief Ministers have added their support to their demand. This is reminiscent of the late 1960s, when Chief Ministers like K. Brahmananda Reddy of Andhra Pradesh and Mr. Mohanlal Sukhadia of Rajasthan were one with C. N. Annadurai of Tamil Nadu and E. M. S. Namboodripad of Kerala in demanding greater powers for the State. Unfortunately, however, little has been done in concrete terms to strengthen the process of fiscal decentralisation. The Sarkaria Commission had come forward with some sound suggestions which the 9th Finance Commission chose to side-step. The Central Government cannot afford to adopt a cavalier attitude to such demands any longer. There has been consistent campaigners for fiscal decentralisation; States like West Bengal and Tamil Nadu and they are now being joined by the State Chief Ministers from most parts of the country. Indeed, even Congress-I Chief Ministers have added their weight in their demand. Several states are in the throes of fiscal crisis because of their enormous losses that have been piled up by the State Electricity Boards, Transport Corporations and other State Level Public enterprises,"



[1991 செப்டம்பர் 28 [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 1.50

அந்த வகையிலேதான், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த
வரையில் சிலபல முயற்சிகளை நாம் முயல்கின்றபோது,
எல்லோருடைய ஒத்துழைப்பும், மற்றவைகளும் சிறப்பாக இருக்க
வேண்டும் என்பதற்காக நான் எடுத்துச் சொல்வதன் காரணமே
அதுதான். அந்த வகையிலே பார்க்கின்றபோது, சாதாரணமாக
நஷ்டங்கள் அதிகமாக ஆகி, அதன் காரணமாக பொதுமக்களுக்கு
என்று செலவழிக்க வேண்டியவைகளுக்கு வழியில்லாமல் போய்
விடுமானால், அதன் காரணமாக பொதுமக்களுக்காக அந்தத்
திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியாமல் போய்விடும். அந்த
வகையிலே தான் நம்முடைய பொருளாதார நிலைமை போய்
இருக்கிற காரணத்தினால் தான் அதில் குறைபாடுகள் ஏற்படாமல்
பார்த்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாகப் பார்ப்போ
மானால், இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே
சுட்டிக் காட்டினார்கள். அந்த வகையிலே பார்க்கின்றபோது,
பேருந்துக் கழகங்கள், போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த
வரையிலும் நஷ்டம் ஏற்படுகிறது, அந்த நஷ்டம் தீர்க்கப்பட
வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோன்று மின்சாரத்
துறையைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அரிசி பற்றாக்
குறை பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். வளர்ச்சித் திட்டங்
களுக்கு, மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் போக வேண்டிய பணம்
இவற்றிலே போய்விடுமானால், வளர்ச்சித் திட்டங்களும், மேம்
பாட்டுத் திட்டங்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் கோருகின்ற
எந்தவிதத் திட்டங்களும் நிறைவேற்ற முடியாது. இவைகளை
எல்லாம் வியாபார நோக்கத்தின் அடிப்படையிலே காண
வேண்டும். வியாபார நோக்கு என்னும்போது, எந்த வியாபாரி
களானாலும் அதில் ஒரு லாபம் இருக்க வேண்டுமென்றுதான்
எண்ணுவார்கள். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் 'நோ
பிராஃபிட், நோ லாஸ்' என்ற அளவில், அதிலே லாபமும் இல்லை,
நஷ்டமும் இல்லை என்ற அளவுக்காவது அரசாங்கம் போட்ட
முதல் வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுமேயானால் அதனால் ஏற்படும்
மிச்ச பணத்தை பொது மக்களின் தேவைகளுக்கும், பொது
மக்களின் திட்டங்களுக்கும், மற்றவைகளுக்கும் நாம் செலவழிக்க
முடியும். நியாயவிலைக் கடை என்றுதான் பெயர் வைத்தோமே
தவிர குறைந்த விலைக் கடை என்று நாம் பெயர் வைக்கவில்லை.
ஏனென்றால் மற்றவர்கள் எல்லாம் அநியாயமாக விற்கிறார்கள்
என்பதற்காக நியாய விலை வைத்து சாமான்களை விற்போம்,
போட்டிக்கு இடையிலே நாம் நியாய விலை வைத்தால், அநியாய

விலைக் கடைகளில் விலை இறங்கும் என்றுதான் நியாய விலைக்
கடைகள் வைத்தோமே தவிர வேறல்ல. குறைந்த விலைக்
கடைகள் வைக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் இந்த ஆண்டு 326
கோடி ரூபாய் அரிசி விற்பனையிலே நமக்கு நஷ்டம் ஏற்பட்டு,
அதை நாம் ஈடு கட்ட வேண்டிய அளவுக்கு அரசு இருக்கிறது
என்றால் வருகிற ஆண்டுகளில் இன்னும் இது அதிகமாகும்.
அடுத்த ஆண்டு கிட்டத்தட்ட நாம் கொடுக்க வேண்டிய பணம்
500 கோடிக்குப் போகுமென்ற கணக்குதான் வருகிறது. இதே
விலைதான் இருக்க வேண்டும். விலையைத் தூக்கக்கூடாது,
அரிசியையும் கொடுக்க வேண்டும், எங்களுடைய அணைக்கட்டு
களையும் கட்ட வேண்டும், சாலைகளைப் போட வேண்டும்,
கல்லூரிகள் வர வேண்டுமென்று சொல்லிவிட்டு மாண்புமிகு
உறுப்பினர்கள் போய்விடுகிறார்கள். ஆனால் அதையெல்லாம்
செய்கின்ற தன்மைக்குப் பணம் வேண்டும். உதாரணத்திற்கு
ஒன்று சொல்கிறேன். நான் உணவு அமைச்சராக இருந்தேன்.
நான் உணவு அமைச்சராக இருந்தபோது கிட்டத்தட்ட 1
கோடியே 19 லட்சம் கார்டுகள் இருந்தன. இப்போது 1 கோடியே
40 லட்சம் கார்டுகள் என்று கணக்கு சொல்லப்படுகிறது.
அப்போது நியாய விலைக் கடைகளின் மூலமாக விநியோகிக்கப்
பட்ட அரிசியினுடைய அளவு 65 ஆயிரம், 70 ஆயிரம், 80 ஆயிரம்
டன்னுக்கு மேலே போகவில்லை. அப்படி 80 ஆயிரம் டன்
கொடுத்த இடத்திலே இப்போது நியாய விலைக் கடைகள் மூல
மாகக் கொடுக்கப்படுவது 1 லட்சத்து 50 ஆயிரம் டன்களாகும்.
1 லட்சத்து 50 ஆயிரம் டன் அரிசியை அதிகமான விலை
கொடுத்து வாங்க வேண்டிய அளவுக்கு வருகிறது. வெளியிலே
இருக்கிற அரிசிக்கும், நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும்
அரிசிக்கும் வித்தியாசம் 50 காசு, 60 காசு, 70 காசு, 80 காசு என்று
இருக்கும்போது, எங்கே வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலா
மென்ற நிலை இருந்தது. 2½ ரூபாய், 3 ரூபாய் வித்தியாசம்
இருக்கிற காரணத்தால் 1 லட்சத்து 50 ஆயிரம் டன் அரிசி
விநியோகித்தால்தான் நியாய விலைக் கடைகளைக் காப்பாற்ற
முடியும் என்று சொல்லும்போது, இதிலே ஏற்படுகிற அச்சம் என்ன
வென்றால், இந்த 326 கோடி ரூபாயோடு இராது, வருங்காலத்தில்
500 கோடி அளவுக்குப் போகுமென்பதால், இதை ஓரளவுக்கு
மட்டுப்படுத்த வேண்டுமென்று பார்க்கிறோம். அப்படி மட்டுப்
படுத்த வேண்டுமென்ற முயற்சியை மாண்புமிகு முதல்வரவர்கள்
எடுக்கும்போது இந்த நிலைமையை உணர்ந்து, மாண்புமிகு உறுப்
பினர்கள் முழு ஆதரவையும் தந்து பொது மக்களுக்கு இத





பற்றிய கருத்துக்களைப் பரப்ப வேண்டுமென்று இங்கே எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். அரசாங்கமே தர வேண்டியது கல்வி,
எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும், கடைசி
வரையில், ஏழை எளியோர்களுக்கு சிறந்த கல்வி, நல்ல கல்வி
கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.
சாலைகளை அரசாங்கம்தான் போட்டுத் தர வேண்டும். அணைக்
கட்டுகளை அரசாங்கம்தான் கட்டித் தர வேண்டும். கால்வாய்
களை, வாய்க்கால்களை அரசாங்கம்தான் வெட்ட வேண்டும்.
அரசாங்கம்தான் ஏரி, குளங்கள், மற்றவைகளைப் பாதுகாக்க
முடியும். அரசாங்கம்தான் மின்சார விளக்கு போன்றவற்றை
ஏற்படுத்த முடியும். இவைகளை எல்லாம் அரசாங்கம் ஏற்படுத்
துகிறபோது, பொது மக்களிடத்தில் வரி போட்டு வாங்கி,
அதையே நீங்கள் பிரித்துக்கொள்ளுங்கள் என்று கொடுத்துவிட்
டால், அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய
முடியாது. ஆகவே உரிய விலையை, எவ்வளவு விலை இருக்
கிறதோ, அந்த விலையை, 'நோ பிராஃபிட், நோ லாஸ்' என்ற
அளவுக்கு பங்களை நடத்தி, அதிக லாபம் சம்பாதிக்காவிட்டா
லும், நஷ்டம் ஆகாமல்; அரிசியில் அதிக லாபம் சம்பாதிக்காவிட்
டாலும் நஷ்டம் ஆகாமல் காப்பாற்றினால் அரசாங்கம் செய்து
தரவேண்டிய காரியங்களைச் செய்ய முடியும். 2 ரூபாய்க்கு
வாங்க வேண்டிய அரிசியை 3 ரூபாய்க்கு வாங்கினால் ஒரு
ரூபாய் ஒவ்வொருவரும் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்.

பிற்பகல் 1-55

அந்த ஒரு ரூபாய்க்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள
மாட்டேன், 2 ரூபாய்க்குத்தான் கொடுக்கவேண்டும், இரண்டரை
ரூபாய்க்குத்தான் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவார்களே
யானால், அரசாங்கம் கல்விக்குச் செலவழிக்க வேண்டிய
பணத்தை, மருத்துவத் துறைக்குச் செலவழிக்க வேண்டிய
பணத்தை, சாலைகள் போடவேண்டிய பணத்தை, அணைகட்டு
கள் கட்டவேண்டிய பணத்தை, இதிலே திருப்பிவிடுவதன் மூலம்
வளர்ச்சித் திட்டங்கள் தான் நிறைவேற்றப்பட முடியாமல்
போகின்றன. ஆகவேதான் என்ன நான் இப்போதே சொல்லி
வைக்கிறேன் என்றால், மக்களையும் தயார் பண்ணவேண்டும்,
மக்களைத் தயார் பண்ணுவதற்கு முன்னாலே இந்த உறுப்பினர்
களையும் தயார் பண்ண வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

ஆக இப்படிப்பட்ட முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையின்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 செப்டம்பர் 28

இழ் எடுக்கின்றபோது, பஸ் கட்டணத்தை உயர்த்தினாலொழிய வேறு வழியே இல்லை. பஸ்கள், மற்ற வகைகளில் பார்த்தால் இந்தியாவில் வேறு எந்தவொரு போக்குவரத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது சிறந்த முறையில்தான் தமிழ்நாட்டின் பஸ்களின் அமைப்பும் சரி, அதன் மற்ற தன்மைகளும் சரி, மற்றவையெல்லாம் சிறந்த முறையில்தான் இருக்கின்றன. ஆனால் வேறு மாநிலத்தின் போக்குவரத்தோடு ஒப்பிட்டாலும் இதுதான் சிறந்தது. அப்படியிருந்தும் 55 கோடி நஷ்டம் வருவதேன்? கட்டணம் ஏற்றாததுதான். ஆகவே கட்டணம் ஏற்றினால்தான் இதைச் சரி செய்ய முடியும். இந்தப் பணிகளை எல்லாம் காப்பாற்ற முடியும் என்றால், அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு ஆதரவு தருவதற்கும், பொதுமக்களைத் தயார் பண்ணுவதற்கும், அவரவர்களுடைய பங்கை ஆற்றுவதற்கு, சிறு துளி பெருவெள்ளம் என்பதற்கிணங்க, இந்த மாநிலத்தில் வாங்குகிற பொருட்களுக்கு ஏற்ற விலையைக் கொடுக்கிற உணர்வாவது மக்களுக்கு இருக்க வேண்டாமா?

இப்போது ஒரு யூனிட் மின்சாரம் 1 ரூபாய் 45 காசு ஆகிறது. அந்த 1 ரூபாய் 45 காசு சாதாரணமாக வரவில்லை. மழை வானத்திலிருந்து வருகிறது. காற்று சாதாரணமாக வருகிறது. நீர் ஊற்றிலிருந்து வருகிறது. மின்சாரம் எங்கிருந்து வருகிறது? நாம் பணம் செலவழித்தால்தான் வரும். ரூ. 1.45 செலவழித்தால் தான் ஒரு யூனிட் கிடைக்கிறது. அதை ஒருவருக்கு 50 காசுக்கு தருகிறோம் என்றால், அதற்குரிய பணத்தை நாம் இழக்கிறோம் என்று அர்த்தம். அதிக விலை கொடுக்கவேண்டாம். ஆகிற செலவையாவது கொடுக்கலாம் அல்லவா? ஆகவே இனாமாகக் கொடுக்கும்போது நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இப்போது வீடுகளுக்கு எல்லாம் ஒரு யூனிட்டுக்கு 55 காசு என்று வைத்து இருக்கிறோம். என்றாலும் 90 காசு ஒவ்வொரு யூனிட்டுக்கும் இழப்பு. 80 காசு வைத்தாலும் இழப்புதான். 140 காசுக்கு கொடுக்கிறோம் என்று உயர் அழுத்தத்திற்குக் கொடுக்கிறோம் என்றாலும் 5 காசு இழப்புதான். 150 காசு வைத்தால்தான் 5 காசு, நாம் உற்பத்திச் செலவைவிட கூடுதலாகப் பெறமுடியும். அப்படி ஏற்படுகிற நஷ்டங்களையும் தாங்குவது என்றாலும் கூட, நஷ்டத்தின் அளவை எந்த அளவுக்கு தாங்குவது? 550 கோடி ரூபாய் நஷ்டம் என்கிற அளவுக்குப் போகாமல் காப்பாற்றப்பட்டால்தான்—100 கோடியை கல்விக்கு செலவழிக்கவேண்டுமென்று [illegible] சொன்னால், இப்போது [illegible]

1991 செப்டம்பர் 28]　　[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உறுப்பினர்கள் எல்லாம் கேட்டது மாதிரி எவ்வளவு பள்ளிக் கூடங்கள் கட்டலாம்? இதிலே மிச்சப்படுத்தி எவ்வளவு கட்டலாம்? எல்லோரும் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு, அதாவது சலுகை தராமல், எல்லோரும் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி, 550 கோடியை மிச்சப் படுத்தினால் கல்விக்கு எவ்வளவு செலவழிக்கலாம்? கட்டிடங்களுக்கு எவ்வளவு செலவழிக்கலாம், மருத்துவமனைக்கு எவ்வளவு செலவழிக்கலாம்?

மாண்புமிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் எடுத்துத் தெரிவித்தது மாதிரி மருத்துவமனைகளில் மருந்தே இல்லை என்றார்களே, சில இடங்களில் மருந்தே இல்லாமல் எதையாவது கொடுக்க வேண்டியிருக்கிறது. வெறும் தண்ணீரைக் கொடுத்தால் வெறும் தண்ணீர் என்பான். அதற்காக கலர் பண்ணி, சிகப்பு, மஞ்சள், பச்சை என்று கலந்து கொடுத்தால் அது ஏதோ ஒரு மருந்து என்று நினைத்துக் கொள்கிற அளவுக்குத்தான் இருக்கிறது. சில இடங்களில் அப்படித்தான் இருக்கிறது. சிலபல குறைபாடுகள் எல்லாம் இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நாங்கள் எல்லாம் படிக்கிறபோது அங்கே ஒரு ஆஸ்பத்திரி இருந்தது. அங்கே டாக்டர்களும் கம்பவுண்டர்களும் இருப்பார்கள். அவர்களைப் பற்றி அப்போது எடுத்துச் சொல்வார்கள். யாராவது நோயாளி என்று அந்த டாக்டரிட்டே போனால், ஆளையும் பார்க்காமல், சிக்கையும் கேட்காமல் சீட்டு எழுதிக் கொடுப்பார். (சிரிப்பு) அங்கே ஒரு கம்பவுண்டர் இருந்தார். அவர் அந்தச் சீட்டைப் பார்க்காமலேயே மருந்து தருவார். (பலத்த சிரிப்பு) அப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் ஆங்காங்கே இருக்கின்றன என்று சொன்னால், மருந்தும் பணமும் இல்லாத குறைதான்.

ஆக, அத்தகைய தன்மைகள் எல்லாம் ஏற்படவேண்டுமானால், எதற்குத் தரவேண்டுமோ அதற்கு பொதுமக்கள் தருகிற வரிப் பணத்தையும், மத்திய அரசு தருகிற பங்கீட்டுத் தொகையையும் வைத்துக்கொண்டுதான் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நாம் கடன் வாங்கித்தான் தீரவேண்டுமென்று சொன்னால், இதுவரை நாம் தொடர்ந்து வாங்கிய கடனுக்கு இந்த வருஷம் மட்டும் திருப்பிச் செலுத்தவேண்டியது 612 கோடி ரூபாய். அதைக் கொடுத்தாகவேண்டும். இந்த 612 கோடி ரூபாய் கடன் வாங்காத சூழ்நிலையில் வைத்து இருந்தால், அந்தப் பணத்துக்கு வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவு செலவழிக்கப்படுவதாக இருந்தால்,

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது மாதிரி, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்பதை 3 கோடி கூட கொடுக்கலாம். 550 கோடியை மீதம் பண்ணியிருந்தால், கடன் கொடுக்க வேண்டிய அளவுக்கு நடத்திக் கொண்டிருந்தால், இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமை இருக்காது.

*பிற்பகல் 2-00*

இந்த வாரம் கூட நாம் விளம்பரப்படுத்தியிருக்கிறோம், 75 கோடிக்கு கடன்கேட்டு, இது பின்னால் வருகிறவர்கள் தலையில்தான் விழப் போகிறது. ஆக வரி ஏறிக்கொண்டே போகிறது. இப்படி ஏற ஏறத்தான் நான் அன்றைக்கே சொன்னது போல மத்திய அரசாங்கம் ரூ. 21,000 கோடிக்கு வட்டி மட்டும் கட்டிக்கொண்டிருக்கும் அளவில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் கடன் வாங்கி வைத்திருக்கிறார்கள். எப்படியாவது சமாளிக்க வேண்டும். எப்படியாவது சமாளிக்க வேண்டும் என்பதற்கு கடன் வாங்கவேண்டிய அளவிற்கு வருகிறது. எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், நியாயமாக கொடுக்க வேண்டிய விலையைக் கொடுப்பதற்கு மக்களைத் தயார் பண்ணவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்றுதான்.

*பிற்பகல் 2-05*

கடனைத் தள்ளு, அதைத் தள்ளு என்கிறார்கள். ஒருவருக்கு பத்து ரூபாய் கடன் கொடுக்கிறார்கள் என்றால், அவன் பணம் அல்ல அது. அவனுக்குச் சொந்தமான பணம் அல்ல, அவன் பாட்டன் பணம் அல்ல. பொது மக்களிடத்திலே வரி போட்டு கஷ்டப்பட்டு வாங்கிய பணத்தை அவன் வளர்ச்சி அடைய வேண்டும். மேலோங்க வேண்டும் என்று கொடுத்தால், அவன் அதைத் திருப்பித்தரவில்லை என்றால், அரசாங்கத்திற்கு அந்தப் பணம் வராது என்றால், அவன் ஒருவனே அனுபவிப்பான் என்றால், இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேரும் கொடுத்த பணத்தை ஒரு சிலரே அனுபவிக்கிற அளவிற்குப் போகக் கூடாது. 'டிசர்விங் கேசஸ்' இருக்கின்றன. ஏழை எளியவர்கள் காப்பாற்றப்பட வேண்டியதுதான். அதற்கும் ஒரு உச்ச வரம்பு இருக்க வேண்டும். யார் ஏழை, யார் எளியவர்கள் என்று இருக்க வேண்டும். அதற்கு மேலும் கொடுப்பீர்களா? மின்சாரம் என்று வருகிறபோது, இதைத்தான் சொன்னோம். விவசாயிகளுக்கு மின்சாரம் என்றால், 5 ஏக்கர், [illegible], பத்து [illegible] என்று வைத்திருப்பவர்களுக்கு [illegible] மற்ற



வர்களுக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் மின்சாரத்தை சலுகை விலையில் கொடுக்கலாம். அப்படியில்லாமல் மற்றவர்களுக்கும் கொடுக்கிற சூழ்நிலை ஏற்படுகிறபோது வளர்ச்சித் திட்டப் பணிகள், நல்வாழ்வுத் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறது என்பதற்காகத்தான் எடுத்துச் சொன்னேன்.

விலைவாசியைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய நாட்டினுடைய தன்மை, முறை, மத்திய அரசினுடைய சட்டதிட்டங்கள், நம்முடைய சட்டதிட்டங்கள் எல்லாம் எந்தவொரு விலையையும் கட்டுப்படுத்துகிற அளவிற்கு இல்லை. அதிகாரம் நமக்கும் இல்லை, எங்கேயும் இல்லை. மற்ற நாட்டிலே இருக்கிற 'காஸ்ட் அக்கவுண்டிங்' முறை நம்முடைய நாட்டிலே இல்லை. 'காஸ்ட் அக்கவுண்டிங்' முறை சில நாடுகளிலே உண்டு. ஒவ்வொரு பொருளுக்கும் இன்ன விலைதான் என்று நிர்ணயிக்கும் அதிகாரத்தை கமிட்டியின் மூலம் செய்வார்கள். அப்படி சில நாட்டிலே இருக்கிறது, வேறு பல நாடுகளிலே இருக்கிறது. சில மேல்நாடுகளில் காஸ்ட் அக்கவுண்டிங் முறை இருக்கிறது. இன்ன பொருளுக்கு இன்ன உற்பத்திச் செலவு ஆகவே இன்ன விலைக்குத்தான் அதை விற்க வேண்டும் என்று ஒவ்வொரு பொருளுக்கும் இன்ன விலை என்று நிர்ணயிக்கிறார்கள். என்ன விலையை நிர்ணயிக்கிறார்களோ, அந்த விலைக்குத் தான் விற்க வேண்டும், அதைக் காட்டிலும் அதிகமாக விற்கக் கூடாது என்ற முறை இருக்கிறது. இங்கே காஸ்ட் அக்கவுண்டிங் முறை கிடையாது. ஆகவே நம்முடைய நாட்டிலே எந்த ஒரு காலத்திலேயும் கட்டுப்படுத்த முடியவில்லை. சிமெண்ட், சர்க்கரை, நூல் போன்ற சிலவற்றைத்தான் கட்டுப்படுத்தி, அதிலேயும் இரண்டு சிஸ்டத்தை வைத்திருக்கிறோம். ஒரு பகுதியை அவர்களே எடுத்துக்கொண்டு விற்கலாம் என்றும், ஒரு பகுதியை லெவிக்குக் கொடுக்க வேண்டும் என்றும் இரண்டு பகுதியை வைத்திருக்கிறோம். இப்படி நான்கைந்து பொருள்களுக்குத்தான் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்களே தவிர மற்றவைகளுக்குக் கட்டுப்பாடு இல்லை. விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் அந்த முறையை மத்திய அரசாங்கம் செய்வதற்கு முன் வந்தாலொழிய ஏறுகிற விலையைக் கட்டுப்படுத்துவது என்பது மிகக் [illegible]

மற்றொன்று. நம்முடைய நாட்டின் பொருளாதார நிலையைப் பார்த்தால், நம் நாட்டின் தன்மை, 'செல்லர்ஸ் மார்க்கெட்டாகத் தான் இருக்கிறதே தவிர 'கன்ஸ்யூமர்ஸ் மார்க்கெட்டாக' இல்லை. அமெரிக்கா போன்ற நாடுகளிலே வாங்குவோர் சந்தை—சிலபல இடங்களில் வாங்குவோர் சந்தைக்கான சட்டதிட்டங்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே விற்பவர்கள் என்ன விலையை நிர்ணயிக்கிறார்களோ, அதுதான் சந்தை என்று இருக்கிற இடர்பாட்டின் காரணமாகத்தான் நாம் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. மத்திய அரசு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் மாற்றியமைக்க மத்திய அரசும் பெரும் பங்கு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் பேசுகின்ற போதுகூட இங்கே விடுதலைப் புலிகளை அடக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். விடுதலைப் புலிகளின் கொட்டமும், அவர்களின் அட்டூழியமும் இந்த நாட்டு மக்களுடைய உயிரையும், உரிமையையும், உடைமைகளையும் எந்த அளவிற்குக் கொள்ளை கொண்டார்கள் என்பதையும் எல்லாம் கண்டறிந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டவுடனே நடவடிக்கை எடுத்து எல்லோரும் பாராட்டத்தக்க அளவிற்கும், வியக்கத்தக்க அளவிற்கும் அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். என்றாலும் இன்னமும் முயற்சிகள் செய்து அறவே அவர்களுடைய நடவடிக்கைகளும், நடமாட்டமும் இல்லாது செய்யும் அளவிற்கான முயற்சிகளைச் செய்கிறார்கள். எந்த அளவிற்கு என்று நான் சொல்லுகிறேன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட, இங்கே தமிழகத்திலே விடுதலைப் புலிகள் இருந்து அவதிப்பட வேண்டாம் என்றும், ஆங்காங்கே சிக்கிக்கொண்டு தங்களுடைய உயிரைப் போக்கிக் கொள்கிற அளவிற்குத் தாங்களே தற்கொலை செய்து கொள்கிற அளவிற்கு ஆளாக வேண்டாம் என்றும், ஆகவே விடுதலைப் புலிகள் எல்லாம் திரும்பவும் யாழ்ப்பாணத்திற்கே திரும்பிவிட வேண்டும் என்ற அளவிற்கு வேண்டுகோள் விடுகிற அளவிற்கு பிரபாகரன் சொல்லுகிற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னால், எந்த அளவிற்குத் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்கு



காணலாம். பிரபாகரன் அங்கே பேசிய பேச்சை கடற்படையினுடைய கப்பியில்லாத் தந்தி பிரிவினர் அறிந்து பத்து நாட்களுக்கு முன்பு பத்திரிக்கையில் வந்ததை நீங்கள் காணலாம். இனிமேல் விடுதலைப் புலிகளை தமிழகத்திலே விட்டு வைத்திருக்க மாட்டார்கள், அப்படியே தமிழகத்திலே விடுதலைப் புலிகள் இருப்பார்களேயானால், ஒன்று அவர்களாகவே சாக வேண்டிய நிலைமை ஏற்படும், அல்லது அவர்கள் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபட முடியாத நிலை ஏற்படும் என்ற அளவிற்கு நடவடிக்கையை தமிழக அரசு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையின்கீழ் எடுத்திருக்கிறது என்பதைக் கண்டறிந்ததற்குப் பிறகு, பிரபாகரனே அவர்களைத் திரும்ப அழைக்கும் அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது என்று சொன்னால், அவர்கள் அதிலே எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

இங்கே சதர்ன் ஸ்ட்ரக்சுரல் கம்பெனியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொள்கையாக எடுத்து அதை அறிவித்தார்கள் என்று நான் பதிலுரையிலேகூட கூறினேன். லாபமாக நடக்கின்ற பொது நிறுவனங்களை அரசு தொடர்ந்து நடத்தும் என்றும், லாபம் இல்லாமல் அதிலே நட்டம் ஏற்படுமேயானால் சீர்திருத்தி அதை லாபகாரமாக ஆக்க முடியும் என்றால், அதை லாபகரமாக ஆக்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வது என்றும், லாபகரமாக ஆக்க முடியாது, நம்மால் இயலாது என்று சொன்னால் அதையெல்லாம் பெரும் தொழில்கள் நடத்துகிறவர்கள் அல்லது அதே தொழில்களை நடத்துகிற பெரும் தொழிற்சாலைக்காரர்கள் இதை தங்களோடு இணைத்துக்கொள்வதற்கு விலை பேசி கேட்பார்களேயானால், அப்படிப்பட்டவைகளை தனியார் துறைக்கு விற்றுவிடலாம்; தனியார் துறையும் வாங்காமல், நாமும் நடத்த முடியாமல் பெரும் நஷ்டத்துக்கு ஆளாகுவோமானால் அவர்கள் இங்கே சொன்னது மாதிரி—7 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிற சதர்ன் ஸ்ட்ரக்சுரல் கம்பெனியில், அதுமாதிரி டான்சியில் 36 கோடி ரூபாய் அரசு பங்கு போட்டு இருந்தாலும் கூட அதிலே 27 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்

ளார்கள்; எவை எவை நாமும் நடத்த முடியாமல், தனியாரும் வாங்க முன்வராமல், தொடர்ந்து நஷ்டத்திற்கு ஆளாகி, மக்களுடைய வரிப் பணத்தைப் பாழாக்காமல் இருப்பதற்கு அவற்றையெல்லாம் மூடிவிடலாம் என்று ஒரு துணிகரமான எண்ணத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் அன்றே சொன்னேன். அந்த அளவிலே தான் செய்யப்படும்.

விவசாயத் தொழில்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே தம்புசாமி அவர்களும் கூட குறிப்பிட்டார்கள். நம் நாட்டினுடைய நிலை அந்த வகையிலே இருப்பதை தொழில் துறையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டு முதல்தரமான தொழில்துறை உடைய மாநிலமாக ஆக்க வேண்டுமென்று கருத்துக்களை அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட இன்றைக்கு இருக்கிற நிலையில் நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் நூற்றுக்கு 65 பேர் இருக்கிறார்கள். நூற்றுக்கு 70 பேர் கிராமங்களில் வாழ்கிறார்கள். நூற்றுக்கு 65 பேர் விவசாயத்திலே நேரடியாக ஈடுபடுகிறார்கள். அப்படி ஈடுபட்டும், அவர்களும் வாழமுடியாமல் நம்முடைய நாட்டிலே இன்றல்ல, நேற்றல்ல, இன்றைக்கு ஏற்பட்ட நிலை கூட அல்ல, சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள் ஆண்ட காலத்திலிருந்தே ஒரு பழமொழி 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு அளவும் மிஞ்சாது' என்பதுதான் அது அந்தத் துறைக்கே இருக்கின்ற இலக்கணம். ஆகவே தான் அதைக் குறைத்து, தொழில் துறையை வளர்ப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடுகிற நாடு தான் சிறப்பாக இருக்கும் என்கிறபோதுதான் தொழில் துறைக்கு ஆக்கம் தரவேண்டும்; அதிலே ஈடுபட்டு இருப்பவர்களுடைய எண்ணிக்கையைத் திருப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டங்கள் போட்டு செய்கிறார்கள்.

இப்போது அமெரிக்காவை எடுத்துக் கொள்வோமானால், அங்கே 27 கோடி மக்கள் வாழ்கிறார்கள் என்றால், அங்கே நூற்றுக்கு 2 பேர் தான் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். மீதி நூற்றுக்கு 98 பேர் குண்டூசி செய்வதில் இருந்து அணுகுண்டு செய்வது வரையிலும் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆக, இரண்டே இரண்டு பேர் தான் அங்கே விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.





ஆஸ்திரேலியாவில் நூற்றுக்கு 6 பேர்தான் ஈடுபட்டு இருக்கிறார்கள். இங்கிலாந்தில் நூற்றுக்கு 6 பேர்தான் ஈடுபட்டு இருக்கிறார்கள். நாம் நூற்றுக்கு 65 பேர் வருமானம் வராத தொழிலிலே ஈடுபட்டு இருப்பதன் காரணமாகத்தான், அதிலே இருந்து பிரித்து தொழில் துறையை வளர்க்க வேண்டும்; அதற்கு அரசாங்கம் மட்டுமே முழு முயற்சி செய்ய முடியாது; தனியாரும் தங்களிடத்திலே இருக்கிற தொகையையும் மற்றவைகளையும் போட்டு தனியார் துறைகளை ஊக்குவிக்கின்ற அத்தகைய நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.

என் எதிரிலே இருக்கிற இந்த ஒலிபெருக்கியில் 50 ரூபாயில் இருக்கிற இரும்பு ஈடுபடுத்தினால் போதுமா என்று கேட்டால், அந்த 50 ரூபாய் இரும்பை தொழில் துறையிலே ஈடுபடுத்தினால் தான் அதை 5 ஆயிரம் ரூபாயாக மாற்ற முடியும். ஆனால் உழவுத் தொழிலிலே, வேளாண்மைத் துறையிலே இப்படிப்பட்ட ஏற்றத்தைக் காண்பித்து ஒரு நாடு வருமானம் பெற முடியாது. ஆகையினால்தான் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், பெரும் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள். கூட்டுறவுத் துறையிலே இருக்கிற தொழில்கள், அவைகளை எந்தெந்த வகையிலே ஊக்குவிக்க முடியுமோ எந்தெந்த அளவுக்கு அதிலே பல பேரை ஈடுபடுத்த முடியுமோ பழனிசாமி அவர்கள் சொல்லியது [illegible] இந்த விவசாயத்தில் இயந்திர மயமாக்குவதற்கு இடம் கொடுத்து, அதிலே இருந்து ஆட்களை திருப்பி விட வேண்டும்; அது மாதிரிதான் நெசவுத் தொழிலில் இருப்பவர்களையும் திருப்பி விடுகின்ற சூழ்நிலைக்கு நம்முடைய பொருளாதார நிலை போக வேண்டும். அப்படிப் போக வேண்டுமென்றால் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்கு அரசு முன்வரவேண்டும். அரசு முன்வர வேண்டுமென்றால் அரசினிடத்திலே பணம் வேண்டும். பணம் வேண்டும் என்றால், அந்தப் பணத்தை நீங்கள் எல்லாம் சேர்த்துத் தர வேண்டும். அதைச் சேர்த்துத் தருவதற்கான முயற்சிகளிலே நீங்கள் எல்லாம் ஈடுபட வேண்டும். பணம் மட்டும் இருந்தால் இரும்பையே மிதக்க வைக்கலாம் என்கிற ஒரு பழமொழியே உண்டு. ஆனால் பணம் வருகின்றபோது 2 காலோடு [illegible]; அது போகும்போது பல காலோடு ஓடும் என்றும் [illegible]. ஆகவேதான் பணம் இதற்கு அடிப்படையாக [illegible].

"பொருளல்ல வரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்."

என்கிறார் வள்ளுவர். ஆக அது அப்படி இருப்பதன் காரணமாக நம்முடைய பணத்தை வளர்ச்சித் திட்டங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கேட்ட திட்டஙகளுக்கு நம்மால் செல வழிக்க வேண்டுமென்றால், நியாயமாக இந்த அரசு எல்லாத் துறை களிலும் பெற வேண்டிய தொகையைப் பெறவேண்டும். இதைத் தள்ளு, அதைத் தள்ளு, இதை இலவசமாகக் கொடு, அதை இலவச மாகக் கொடு என்று சொல்வார்களேயானால், இன்னும் கொஞ்ச நாளில் இந்த அரசாங்கம் மாநகராட்சி மன்றம் மாதிரி ஆகி, அதற்குப் பிறகு நகராட்சி நிலைக்கு நகர்ந்து, அப்புறம் இப் போது ஊராட்சி மன்றங்கள் எல்லாம் எப்படி இருக்கிறதோ அந்த நிலைக்குத்தான் வரவேண்டியது வரும். ஆகவேதான் இந்தக் கருத்துக்கு ஆக்கம் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் முழுப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் முழுக் கவனத்தையும் நான் இந்த உரையிலே எடுத்துக் கொள்கிறேன். இதைப் பொறுத்து தான் இருக்கிறது. இல்லா விட்டால் இந்த ஆண்டில் நீங்கள் எந்தச் திட்டம் போட்டாலும் 565 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும்போது, நிதித் துறைக்கும், நிதி அமைச்சருக்கும் வந்தால், இந்த ஆண்டு வேண் டாம், இந்த ஆண்டு வேண்டாம் என்று தான் நான் எழுத வேண்டி வருமே தவிர, ஆகவே, இதையும் எடுத்துக்கொள்ளுங்கள் என்றால் பற்றாக்குறை ஆயிரம் கோடிக்கு மேலே போய் நிற்கும்.

பிற்பகல் 2-10

ஆகவே, இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மாற வேண்டுமென் றால், தமிழ் மக்களை நாம் உருவாக்க வேண்டிய பொறுப்பு இருக் கிறது. அவரவர்கள் பெறுகிற தன்மைக்கு ஏற்றபடி அதற்கு ஈடு கொடுக்க வேண்டியவர்களாக பொது மக்கள் இருக்க வேண்டும். அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் மேலும் பொறுப்பேற்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் நியாயமானவைதான். நியாயம் இல்லையென்று யாரும் சொல்லவே முடியாது. நிதி இல்லையென்ற ஒரு குறையைத் தவிர. இவற்றை நிறைவேற்றுவதற்கு வேறு வழி இல்லையென்





பதை உணர்வீர்களானால் அடுத்த ஆண்டு அதனுடைய நிதி வசதிகளை எல்லாம் பெருக்குவதற்கு சூழ்நிலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கும்போது எல்லாம் உங்களுடைய முழு ஆதாரவையும் தருகிற சூழ்நிலை ஏற்பட்டால் ஓவர்டிராப்ட் வாங்காத அளவுக்கு நம்முடைய மாநிலத்தை ஆக்க வேண்டும். பற்றாக்குறை இல்லாத அளவுக்கு நம்முடைய மாநிலத்தை ஆக்க வேண்டும். வழக்கமாக செய்யப்படுகிற செலவினங்களுக்கு மேலும் கூடுதலாக பணம் பெறுகிற அளவுக்கு நிலை ஏற்பட வேண்டும். கூடுதல் பணம் பெறுவதற்கு நிலையை வைத்துக்கொண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தை நடத்தினால்தான் இங்கே மாண்பு மிகு உறுப்பினர்கள் கேட்கிற ஒவ்வொன்றிலும்—நீங்கள் ஐந்து கேட்டால் இரண்டையாவது தர முடியும். நீங்கள் நான்கைக் கேட்டால் ஒன்றாவது தர முடியும். அந்தச் சூழ்நிலையைப் பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க நீங்கள் அனைவரும், மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் தங்களுடைய முழு ஆதாரவையும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அனைத்திலும் நியாயம் இருக்கிறது என்றாலும், அவற்றை அந்தந்த துறையைச் சார்ந்த அமைச்சர்கள் அவ்வப்போது நிலைமைகளுக்கு ஏற்ப தங்களுடைய முடிவைச் செய்வார்கள் என்று சொல்லி, காலமும் அதிகமாகி விட்ட காரணத்தாலும், நிதியொதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாகவும் இன்றைக்கு நீங்கள் ஒதுக்குவதுதான் பெரிய ஒதுக்குதல் என்பதை எடுத்துச் சொல்லி, எண்ணாயிரம் சில்லரை கோடி செலவினத்தை தருகி றோமே தவிர, இன்றைக்கு எவ்வளவு ஆர்வத்தோடு ஒதுக்கீடு செய்கிறீர்களோ, வாவினத்திற்கும் நீங்கள் வழிவகுத்து தந்து, அதைப் பெருக்குவதற்கு முழு ஆதாரவையும் தாவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விவாதம் முடிவுற்றது. இப் போது வாக்கெடுப்பு.

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமன்ற முன்வடிவு எண். 30/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 28

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1991 செப்டம்பர் 28] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமன்ற முன்வடிவு எண் 30/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் 30—9—1991 திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

118. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சார (வினியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 1 (ஏ) ஏ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

119. தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

120. தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் [1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

121. தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

133. பொது நிறுவனங்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1991-92.

134. பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, 1991-92.

135. பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1991-92.

136. பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1991-92.

600 008
4/605
V211,31 N91
N91.12-1

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthughalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director Stationery and Printing Madras.